
www.tamilarangam.net

# மனிதம்



RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
-SEINE ; FRANCE

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## நேர்முகம்

கடந்த இதழில் உறுதியளித்தபடி பல படைப்புகளை இந்த இதழில் தரமுடியாமற் போய்விட்டது. இதற்கு இடப் பற்றாக்குறையே முக்கிய காரணம். இனிவரும் இதழ்களில் இவ்வாறு ஏற்படாது தவிர்க்க முயல்கிறோம். இந்த இதழில் வழமையாக இடம்பெற்றிருக்க வேண்டிய பாலுமகேந்திராவின் தொடர்பேட்டி இடம்பெறவில்லை. அடுத்த இதழில் அது வெளிவரும். விரைவில் ஒரு புதிய குறுநாவலும் சுவடுகளில் வெளிவரும். உங்களுக்கு ஏற்கனவே அறிமுகமான தமயந்தி அதை எழுதுகிறார்.

சுவடுகளின் நான்காண்டு நிறைவுச் சந்திப்பில் வாசகர்கள் பலதரப்பட்ட விமர்சனங்களை முன்வைத்தனர். முக்கியமாக, சுவடுகள் (வெவ்வேறு) இயக்க சார்புடையதாகத் தோன்றுவதாக வாசகர்கள் கூறினர். இதற்கு உடனடியாக விளக்கமும் அளிக்கப் பட்டது. அதாவது, அடிப்படை மனித உரிமை மீறல்களைச் செய்யும் எந்த அரசியல்க் கட்சி அல்லது அமைப்புடன் சுவடுகள் சார்புநிலை கொள்ளாது என்பதே அது. இதுவரை சுவடுகள் அவ்வாறு செய்ததாகத் தோன்றினால் எழுதுங்கள். கருத்தில் கொள்கிறோம், விளக்கமளிக்கிறோம்.

## நிகழ்வுகள்

* சுவடுகள் நான்காண்டு நிறைவையொட்டி வாசகர்கள், சுவடுகள் கலந்துகொண்ட விமர்சனச் சந்திப்பு செப்டம்பர் மாதம் நிகழ்ந்தது.
* தமிழ்ச் சங்கம் நடாத்திய நவராத்திரி விழா பல்வேறு கலை நிகழ்ச்சிகளுடன் ஒஸ்லோவில் சிறப்பாக நிகழ்ந்தது.
* மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான சட்டத்தரணிகள் அமைப்பின் சார்பில் இலங்கையில் இருந்து கல்யாணந்த திரணகம நோர்வேக்கு வருகை தந்திருந்தார். மனித உரிமைகள் நிலையத்தில் அவரது சொற்பொழிவு ஒன்று நிகழ்ந்தது.
* பேராதனைப் பல்கலைக்கழகத்தின் சரித்திரபீடத்தில் இருந்து பேராசிரியர் பீரிஸ் நோர்வே வந்திருந்தார். இங்கு பல்கலைக்கழகங்களில் இலங்கையின் இனத்துவம் பற்றிய சி[illegible] சொற்பொழிவுகளை அவர் ஆற்றியிருந்தார்.

### சுவடுகளின் தொடர்புக்கு

Suvadugal,
Herslebs Gate 43,
0578 Oslo
Norway

### தமிழ்நாதம்

இனவாத எதிர்ப்பு மையத்தின் ஆதரவில் ஒலிபரப்பாகும் வாராந்த வானொலி நிகழ்ச்சி. பண்பலை வரிசை (FM) 101,1இல் ஒலிபரப்பாகிறது. ஞாயிறு தோறும் மாலை ஆறுமணி முதல் ஏழு மணிவரை கேட்கலாம்.

தொடர்புகளுக்கு: Thamil Natham, Radio Tellus, Post boks 244, 0103 Oslo.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நோபல் பரிசு சரியான தேர்வு

நன்றி! நன்றி!! நன்றி!!!

* சஞ்சயன் *

இவ் வருடத்திற்குரிய நோபல் சமாதான பரிசைத் தட்டிச் செல்பவர் றொகபேட்டோ மெஞ்சு தும் (REGOBERTA MENCHU TUM) எனும் செவ்விந்தியப் பெண்மணியாவார். அமெரிக்க கண்டம் கண்டு பிடிக்கப்பட்டு வெள்ளையர்களால் சூறையாடப்பட்டதை மகிழ்ச்சியுடன் நினைவு கூரும் பெருவிழாக்கள் அமெரிக்க கண்டம் முழுவதும் இடம்பெற்று வரும் சூழ்நிலையில் பறிக்கப்பட்ட நாட்டிற்காகவும் அங்கு வாழ்ந்து வரும் பூர்வீக மக்களின் உரிமைக்காக உயிரையும் பணயம் வைத்து போராடிவரும் ஒரு செவ்விந்தியருக்கு இப் பட்டம் வழங்கப்பட்டுள்ளமை பாராட்டிற்குரியதே.

தமது செந்த பூமியிலேயே இரண்டாம்தர அடிமைப் பிரஜைகளாக வாழ்ந்து வரும் செவ்விந்தியர்களை ஒழித்துக் கட்டுவதில் அமெரிக்க கண்டத்தைச் சேர்ந்த சகல நாடுகளுமே போட்டி போட்டு செயற்பட்டு வருகின்றன. மத்திய அமெரிக்க நாடான கௌதமாலாவில் மாத்திரம் கடந்த 30 வருடங்களில் சுமார் 100,000 செவ்விந்தியர்கள் கொடுமையான முறையில் கொல்லப்பட்டுள்ளனர். கௌதமாலா அரசபடைகள் தயவு தாட்சணியமின்றி செவ்விந்தியர்களின் உரிமைப் போராட்டத்தை இராணுவபலம் மூலம் அடக்கி ஒடுக்கியுள்ளது.

சமாதான பரிசைப் பெற்றுள்ள றொகபேட்டோ 1959 இல் மிகவும் வறிய குடும்பத்தில் பிறந்தவர். கோப்பித் தோட்டத்தில் கூலிவேலை செய்துவந்த இவரது பெற்றோருடன் சிறுவயதிலேயே கோப்பி பிடுங்கி பெற்றோரிற்கு உதவினார். இதனால் முழுமையாக கல்விகற்கும் வாய்ப்பை இழந்து விட்டவர். "மாயா" எனும் செவ்விந்திய பிரிவைச் சேர்ந்த இவரது சமூகமே கௌதமாலாவின் பெரும்பான்மை செவ்விந்திய இனமாகும். சிறுவயதிலிருந்தே தங்களது இனத்திற்காக சேவை செய்யவேண்டும், இழந்த உரிமைகளை எப்படியும் மீளப்பெற்றேயாக வேண்டும் என்ற உறுதியான நோக்குடன் சமூகசேவையில் இறங்கினார். கௌமாலாவில் இயங்கும் பல கொலைகாரக் குழுக்களினால்

www.tamilarangam.net

கொலைப் பயமுறுத்தல் விடுக்கப் பட்டதைத் தொடர்ந்து தற்காலிகமாக தாய்நாட்டை விட்டு வெளியேறி 1981 முதல் மெக்சிக்கோவில் தலைமறைவாக வாழ்ந்து வந்தார். இக்கால கட்டத்தில் கௌதமாலா படையினரால் இவரின் கடைசித் தம்பி குரூரமாக கொல்லப்பட்டார்.

சோசலிச இடதுசாரி கொள்கைகளில் நம்பிக்கை வைத்து செயற்பட்ட இவர் சி.டி.சி. எனும் விவசாயகழகத்தை தோற்றுவித்து அரச ஒடுக்குமுறைகளிற்கு எதிராக 1979 இல் பெரும் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டு மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தையும் நடாத்தி வெற்றிகண்டார். இதன் மூலம் சோர்ந்து போயிருந்த செவ்விந்தியர்களின் மத்தியில் உற்சாகத்தையும், உலகத்தின் கவனத்தை செவ்விந்தியர்கள் பக்கமும் திருப்பினார். இவரின் தனிப்பட்ட வாழ்க்கை மிகவும் சோகமானது. இவரின் தாய், தந்தை, அண்ணன் மூவரும் ஆயுதப்படையினரால் கொலை செய்யப்பட்டனர். மூத்ததம்பி நச்சுஊசி செலுத்தியும், இரண்டாவது தம்பி அங்கங்கள் துண்டாடப்பட்டு கடும் சித்திரவதை செய்யப்பட்டும் கொலை செய்யப்பட்டனர்.

செவ்விந்தியர்களின் நாட்டையும், உடைமைகளையும் பலாத்காரமாக குறையாடியது மட்டுமன்றி அம்மக்களிற்கென சிறிதளவு ஜனநாயகஉரிமை கூட வழங்கத் தயாரில்லாதவர்கள் தான் மனிதவுரிமை மீறல்கள் பற்றியும், ஜனநாயகம் பற்றியும் கொக்கரிக்கின்றனர்.

றிகபேட்டோ சமாதானத்துக்கான நோபல் பரிசை வென்ற ஒன்பதாவது பெண்மணியாவார். நோபல் பரிசை வென்றவர்களில் மிகவும் வயது குறைந்தவர்களில் றிகபேட்டோ(33) ஒருவர். கடந்த வருடமும் சமாதானத்துக்கான நோபல் பரிசு ஒரு பெண்மணிக்கே (அவுங் சான் சூ கிய் - பர்மா) வழங்கப் பட்ட குறிப்பிடத் தக்கது.

Regoberta விற்கு வழங்கப்பட்டுள்ள இச் சமாதான பரிசின் மூலம் செவ்விந்தியர்கள் மத்தியில் உற்சாகமும் ஒற்றுமையும் ஏற்பட்டுள்ளதை காண முடிகின்றது. காலம் காலமாக ஒடுக்கி வரப்பட்ட ஓரினம் தனது உரிமைகளை தட்டிக்கேட்கும் காலம் வந்து விட்டது. இதற்கு அத்திவாரம் அமைத்துக் கொடுத்துள்ள நோர்வே நோபல் குழுவின் செயற்பாடு பாராட்டிற்குரியதும் நன்றி கூறத்தக்கதும் ஆகும். தொடர்ந்து வரும் காலங்களில் செவ்விந்திய மக்களின் உரிமைப் போராட்டம் உறுதிபெறும் என நம்புவோம். ●

* அமெரிக்காவைக் கொலம்பஸ் கண்டுபிடிக்கவில்லை. ஏற்கனவே அங்கிருந்த அருமையான நாகரிகத்தை அறிந்துகொண்டான் என்பதே உண்மை. இதனால்தானோ என்னவோ நோர்வேஜியப் பத்திரிகைகள் கொலம்பஸின் 'கண்டுபிடிப்பு' என்றே அடையாளமிட்டுக் குறிப்பிடுகின்றன.

**சஞ்சீவி**

டென்மார்க்கில் நீண்டகாலம் தொடர்ச்சியாக வெளிவரும் மாத சஞ்சிகை. கலை, இலக்கிய, அரசியல் விடயங்களில் ஈடுபாடு காட்டுகிறது. தொடர்புகள்: CHANCHIVE, Postbox 1205, 7500, Holstebro, DENMARK

www.tamilarangam.net

# திருப்பி அனுப்பல்கள் தொடர்பாக.........

**சேந்தன்**

நோர்வேயில் இருந்து சில தமிழர்களைப் பலவந்தமாகத் திருப்பி அனுப்ப, நோர்வே அரசு முடிவு செய்துள்ளது. இவர்களில் சிலர் இங்குள்ள அமைப்புகளது முயற்சியால் தற்காலிகமாக இங்கு தங்க வைக்கப்பட்டுள்ளனர். இதற்கான முயற்சிகளில் ஆரம்பத்தில் இருந்தே தமிழர் அமைப்புகள் சில ஈடுபட்டன. இவற்றில் ஒன்றான தமிழ் நோர்வே மக்கள் இணைவுகூடத்தின் தலைவர் திரு.த.இராஜதுரையை அண்மையில் சந்தித்தேன்.

கேள்வி: தற்போது நோர்வேயில் முக்கியமாகத் தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் என்ன?

பதில்: தற்போது சில தமிழர்களைத் திருப்பி அனுப்பும் நிலை உருவாகியுள்ளது. இது, பொதுவாகக் கொழும்பில் தொடர்புகள் உடையவர்கள்; எனவே கொழும்பில் பாதுகாப்பாக வாழலாம் என்ற அடிப்படையிலேயே நிகழ்கிறது. ஏற்கனவே இவ்வாறு ஒருவர் திருப்பி அனுப்பப் பட்டுள்ளார். மேலும் சிலர் திருப்பி அனுப்பப்படும் கடிதங்களையும் அறிவித்தல்களையும் பெற்றுள்ளனர்.

இதைவிடத் தற்போது நோர்வேக்கு வரும் அகதிகள், தமது அடையாளத்தை உறுதிப்படுத்த முடியாவிட்டால், பொலிசார் போதிய தகவல்களைப் பெறும்வரை சிறையில் இடப்படுகின்றனர். இவை தற்போது உள்ள முக்கிய பிரச்சனைகள் எனலாம்.

கேள்வி: இப்போதுள்ள நெருக்கடிகள் தொடர்பாக தமிழ் நோர்வே மக்கள் இணைவுகூடம் என்ன நடவடிக்கைகளை எடுத்து வருகிறது?

பதில்: சிலர் திருப்பி அனுப்பப் படுவதற்காகத் தடுத்து வைக்கப் பட்டுள்ளனர் என்பதை அறிந்தவுடன், இணைவுகூடத்தின் தொடர்புப் பொறுப்பாளர் இந்தப் பிரச்சனை தொடர்பாக அரசிலும், அரசியற் கட்சிகளிலும் உள்ள பலருடனும் தொடர்பு கொண்டு இதுபற்றிய தமது கவலையைத் தெரிவித்தார்.

நேரடியாக இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ள நபர்களுடனும் மிக்க சிரமத்திடையே தொடர்பு கொள்ள முடிந்தது. உடனடியாக சோசலிச இடதுசாரிக் கட்சியைச் சார்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவரை இணைவுகூடம் சந்தித்தது. இவர்களில் ஒருவர் பாராளுமன்ற நீதிக் குழுவிலும் (Justice kommittee) மற்றவர் பாராளுமன்றக் குழுத் தலைவர். அங்கம் வகிப்பவர்கள். இச்சந்திப்பின் தொடர்ச்சியாக நீதியமைச்சில் உள்ள ஆலோசகர் ஒருவரையும் சந்தித்தோம். மீண்டும் இன்னொரு சந்திப்பில் நீதியமைச்சின் ஆலோசகரைச் சந்தித்து, எவரையும் பலவந்தமாகத் திருப்பி அனுப்ப வேண்டாம் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டது. எல்லாச் சந்திப்புகளிலும் கொழும்பு தமிழர்களுக்குப் பாதுகாப்பற்ற இடம் என்பது, சில ஆதாரங்களுடன் விளங்கவைக்கப் பட்டது. நீதியமைச்சில் நிகழ்ந்த இரண்டாவது சந்திப்பில் எமது அழைப்பின்பேரில் எம்முடன் தமிழ்ச் சங்கமும், சுவடுகளும் கலந்துகொண்டன.

www.tamilarangam.net

## அனைத்துத் தமிழர்களுக்குமான முக்கிய அறிவிப்பு

அண்மையில் நோர்வேயில் அரசியற் தஞ்சம் கோரிய சில தமிழர்களைத் திருப்பி அனுப்பும் முயற்சிகள் நிகழ்கின்றன. பொதுவாகக் கொழும்புடன் தொடர்புடையவர்கள் இவ்வாறு பாதிக்கப் பட்டுள்ளனர். கொழும்பில் தமிழர்கள் பாதுகாப்பாக வாழலாம் என்ற நிலைப்பாட்டிலேயே இந்த முடிவுகளை நோர்வே அரசு எடுத்திருப்பதாக நம்பப் படுகிறது. அண்மையில் அகதிகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகராலயம் (UNHCR) இவ்வாறு கருத்துப்படும் அறிக்கை ஒன்றை வெளியிட்டதும் இங்கு குறிப்பிடத் தக்கது.

தற்போது நோர்வேயில் உள்ள சில தமிழர் அமைப்புகள் இவ்வாறு தமிழர்களைத் திருப்பி அனுப்பாமல் இருக்குமாறு அரசைக் கோரி வருகின்றன. எனினும் தனிப்பட்ட நபர்கள் இந்த முடிவால் பாதிக்கப்படும் அபாயம் நிலவுகிறது. இவர்கள் உடனடியாகச் சுவடுகளுடனோ, பின்வரும் முகவரிகளுடனோ தொடர்பு கொண்டு தமது நிலையை விளக்கினால், இப்பிரச்சனை தொடர்பான உதவிகளைப் பெறலாம்.

Tamilsk Norsk Forening,
(தமிழ் நோர்வே மக்கள் இணைவுகூடம்)
Herslebs Gt 43,
0578 Oslo
(தொலைபேசி: 02/212735)

Tamil Sangam i Norge,
(தமிழ்ச் சங்கம்)
Post boks 88,
Romsaas,
0907 Oslo.

*இதுதவிர திருப்பி அனுப்பப்பட உள்ள தமிழர்களது பிரச்சனைகளைத் தனித்தனியே கையாண்டு வருகிறோம். இவர்களதும், இனித் திருப்பி அனுப்பப்பட உள்ளவர்களதும் பிரச்சனைகளை நாம் எல்லோரும் இணைந்து போராடித்தான் தீர்க்க வேண்டும்.*

*இதுதவிர, நோர்வேக்குள் புதிதாக வந்து சிறையில் அல்லது தடுப்புக் காவலில் உள்ளவர்களதும் நிலைகளைச் சட்டத்தரணி மூலம் தொடர்பு கொண்டு அறிந்து, தடுத்து வைக்கப் பட்டிருப்பவர்கள் சரியான முறையில் நடத்தப்படுவதையும், தேவையான மருத்துவ உதவிகள் கிடைப்பதையும் உறுதிப்படுத்தி வருகிறோம்.*

*எமது நடவடிக்கைகளுக்கு ஆரம்பத்தில் இருந்தே இனவாத எதிர்ப்பு மையத்தினதும் (Anti Rasisitik Senter), அகதிகளுக்கான நோர்வேஜிய அமைப்பினதும் (NOAS) உதவிகள் கிடைத்து வருகின்றன. மேலும் அவசியமான தகவல்களைப் பெறுமிடத்து எம்மால் தொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள இயலும்.*

*இதைவிடப் பொதுவாக நோர்வே அரசு மேற்கொள்ளும் பல நடவடிக்கைகள் பற்றிய சரியான தகவல்கள் எமக்குக் கிடைப்பதில்லை. இவைபற்றித் தமிழ் நோர்வே மக்கள் இணைவுகூடத்திற்கு நேரடியாக வருகைதந்து விளக்கம் தரச் சில அரசாங்க அதிகாரிகள் ஒப்புக் கொண்டுள்ளனர். இவ்வாறான விளக்கக் கூட்டங்களில் கலந்துகொள்வதன் மூலம் பல பயனுள்ள தகவல்களைப் பெறமுடியும். இவை பற்றி மேலும் விபரங்கள் தேவையானோர் எம்முடன் தொடர்பு கொள்ளலாம்.*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எண்பதுகளில் ஈழத்துத் தமிழ் இலக்கியம்:

## போக்குகளும் சவால்களும்

மௌ. சித்திரலேகா

எண்பதாம் ஆண்டுகளில் ஈழத்துத் தமிழ் இலக்கியப் பரப்பில் காணப்படும் சில முனைப்பான போக்குகள் நவீன இலக்கியத்திற்கே புதிய பரிமாணங்களைச் சேர்த்துள்ளன. இலக்கியத்தின் தத்துவார்த்த, உள்ளடக்க, அழகியல் அம்சங்களுடன் தொடர்புபட்ட இப்போக்குகளை மூன்றாக வகைப்படுத்தலாம்.

இவற்றில் முதலாவதாகக் குறிப்பிடக்கூடியது இலக்கியத்தின் பொருட்பரப்பில் முக்கிய அம்சமாக இடம்பெற்ற தேசியம் என்ற கருத்துநிலை ஆகும். இக்கருத்துநிலையின் இலக்கியநிலை வெளிப்பாட்டின் ஆரம்பத்தை இதற்கு முன்பு ஆங்காங்கே காணலாமாயினும் திரண்ட, பரந்த அளவில் இப்போக்கு வளர்ச்சி அடைந்தது எண்பதாம் ஆண்டுகளிலாகும்.

எழுபதுகளின் ஆரம்பத்தில் இருந்து இலங்கைத் தமிழரின் சமூக அரசியல் வாழ்க்கை பெரும் நெருக்கடி நிலையை அடைந்தது. இலங்கையில் இனங்களுக்கு இடையிலான பகைமை, சிங்களப் பெருந்தேசியவாதம், இலங்கை அரசினுடைய இன ஒடுக்குமுறை, இதற்கெதிராகத் தமிழரிடையே வளர்ந்த எதிர்ப்புணர்வு, எதிர்ப்பியக்கம் என ஒரு சுழல் வட்டம் விருத்தியானது. இவ்வட்டத்தினுள் இலங்கையின் சகல பகுதிகளையும் சேர்ந்த தமிழ் மக்கள், தமிழ் பேசும் மக்கள் உட்பட வேண்டியதாயிற்று. இத்தகைய ஒரு பின்னணியே ஒடுக்கப்படும் சிறுபான்மைத் தேசிய இனம் என்ற பொது உணர்வைத் தீவிரப்படுத்தியதுடன் இதனைச் சார்ந்து எண்பதுகளில் அதிகளவான இலக்கியங்கள் தோன்றக் காரணமாயிற்று. குறிப்பாக எழுபதுகளின் பிற்பகுதியில் இருந்து அடிக்கடி இடம்பெற்ற தமிழர் மீதான நாடு தழுவிய வன்முறைகள் ஒடுக்கப்படும் இனம் என்ற உணர்வுக்கு மேலும் தீவிரமூட்டின. இது தமிழ் மக்களின் பொது உணர்வானபோது கலை இலக்கியங்கள் இதனால் பாதிக்கப் பெற்றன. ஒடுக்கப்படும் இனத்தின் அன்றாட வாழ்நிலைகள், அனுபவங்கள் ஆகியன இலக்கிய நிலையில் வெளிப்பட்டன.

இவ்விடத்தில் ஒரு வினா எழலாம். அறுபதாம் ஆண்டுகளிலும் தமிழ் இனம், மொழி ஆகியவற்றின் மீதான பற்று வெளிக்காட்டப் பட்டது. அதற்கும் எண்பதுகளில் தமிழ்த் தேசியத்தைப் பிரதிபலித்த இலக்கியங்களுக்கும் இடையில் என்ன வேறுபாடு என்று சிலர் கேட்கலாம். தமிழத் தேசியத்தின் வெளிப்பாட்டைப் பொறுத்தவரை இவ்விரு

www.tamilarangam.net



காலப்பகுதிக்குமிடையில் மிக முக்கிய வேறுபாடு காணப்படுகிறது. அறுபதுகளில் தமிழரசுக் கட்சியின் அரசியல் கோரிக்கை, தமிழ்மொழி உரிமை என்பவற்றையே அடிப்படையாகக் கொண்டிருந்தது. இக்கோரிக்கையின் இலக்கியப் பிரதிபலிப்பும் தமிழ் இனத்தின் பெருமை, மொழியினது பழமை, தூய்மை, இனிமை என்பவற்றைப் போற்றுவதாய் அமைந்தது. பெரும்பாலும் கவிதைத் துறையில் வெளிப்பட்ட இந்த அம்சம் பல உணர்ச்சிக் கவிஞர்களைத் தோற்றுவித்தது. காசி ஆனந்தன், ராஜபாரதி, சக்திதாஸன் போன்றோர் இப்போக்கிற்கு உதாரணங்களாவர்.

ஆனால் எழுபதுகளின் ஆரம்பத்தில் தனிநாட்டுக் கோரிக்கையுடன் வளரத் தொடங்கிய இளைஞர் இயக்கங்கள், ஆயுதப் போராட்ட முறைமை இவற்றைத் தொடர்ந்து, அரச இராணுவ ஒடுக்குமுறைக்கு எதிர்ப்பைத் தெரிவிக்கும் இலக்கியப் படைப்புகள் தோற்றம் பெற்றன. இத்தகைய இலக்கியங்களை எதிர்ப்பு இலக்கியங்கள் (Resistance literature) எனத் தற்கால மூன்றாம் உலக இலக்கியங்களை ஆய்வு செய்வோர் கூறுவர். இப்போக்கின் திரண்ட ஒரு வடிவம் போல யாழ்ப்பாணத்தில் வெளிவந்த 'மரணத்துள் வாழ்வோம்' (1985) என்ற கவிதைத் தொகுதி அமைந்தது. இனப்பிரச்சனையின் பல்வேறு வகையான விளைவுகளையும் அவை மனித உளத்தில் எழுப்பும் உணர்வுகளையும் சிந்தனைகளையும் கூறுகிற கவிதைகளைக் கொண்ட இத்தொகுதியில் ஏற்கனவே தமிழிலக்கியப் பரப்பில் பிரபல்யமாயிருந்த நு∴மான், மஹாகவி, முருகையன், மு.பொன்னம்பலம் முதலியோருடைய படைப்புகளுடன் தேசியத்தின் இலக்கியப் புதல்வர்கள் எனக் கூறக்கூடிய சேரன், ஜெயபாலன், இளவாலை விஜயேந்திரன், ஊர்வசி போன்றோரது ஆக்கங்களும் இடம்பெற்றிருந்தன.

இத்தகைய முயற்சிகள் தமிழ் இலக்கியத்தின் பொருட்பரப்பை விசாலித்தன. இனப் பிரச்சனையானது இலங்கைத் தமிழரது தனிப்பட்ட வாழ்க்கையைக்கூட எவ்வாறு பாதிக்கிறது என்பது புனைகதையிலும் இடம்பெற்றது. ஒரு உதாரணத்தை மாத்திரம் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் ஒரு கோடை விடுமுறை என்கிற நாவல்; இதன் கதை யாழ்ப்பாணம், கொழும்பு, லண்டன் ஆகிய மூன்று நகரங்களில் நிகழ்கிறது. தமது சொந்த வாழிடங்களை விட்டு வேறிடங்களில் வாழ்ந்து தீரவேண்டிய நிலைமையையும் 'புலம்பெயர்தல்' என்ற அம்சத்தையும் இந்நாவல் கையாள்கிறது.

தேசியத்தின் பாதிப்பு இலக்கியத்தில் மாத்திரமன்றி ஏனைய கலைகளிலும் இடம்பெற்றது. குறிப்பாக யாழ்ப்பாணத்தில் நாடகம், ஓவியம் ஆகிய துறைகளில் இதனைக் காணலாம். யாழ் ல்கலைக்கழக கலாசாரக் குழு, நாடக அரங்கக் கல்லூரி ஆகியவை தயாரித்த நாடகங்களும் நிகழத்திய ஓவியக் கண்காட்சிகளும் இதற்குச் சான்றாகும். இக்காலகட்டத்தில்தான் தற்காலத் தமிழ் நாடக உலகில் மிகப் பிரபலமான மண்சுமந்த மேனியர் நாடகம் நிகழ்த்தப் பெற்றது.

நிலையான காட்சி முறையில் இயற்கையையும்,உருவங்களையும் வரையும் போக்கிலிருந்து சற்று விடுபட்டு மனப்பதிவுகளையும்,உணர்வுகளையும் ஓவியமாக்கும் முயற்சியில் இளம் ஓவியர் சிலர் ஈடுபட்டுள்ளனர். இவற்றின் உள்ளடக்கமாக அமைந்தவையும் இத்தேசியம் என்ற பரந்த கட்டமைப்புள் இடம்பெறும் அம்சங்களேயாம்.

எண்பதுகளின் இலக்கியங்களில் காணக்கூடிய அடுத்த முக்கிய போக்கு பெண்களின் விழிப்புணர்வாகும்.

www.tamilarangam.net



இக்காலத்தில் குறிப்பிடத்தக்க வகையில் புதிய பெண் எழுத்தாளர்கள், கலைஞர்கள் கலை இலக்கிய உலகில் பிரவேசித்தனர். ஒரு குறுகிய காலப்பகுதிக்குள் இந்த புத்தெழுச்சி தோன்றியது. இக் கலை இலக்கிய முயற்சிகளுக்கு பின்பலமாக பெண்களது அமைப்புகள் பலவும் இக்காலத்தில் தோற்றம் பெற்றன. பெண்நிலைவாதக் கருத்துநிலை இந்த அமைப்புகளின் செயற்பாடுகள் சிலவற்றிற்கு ஆதாரமாயிற்று. இலக்கியத்தில் முன்பு பேசப்படாத பல விடயங்களைப் பெண்கள் பேசத் தொடங்கினர். பேசாப் பொருளைப் பேசத்துணிந்த இந்நிலையானது, சமூகத்தில் தமது இருப்பு பற்றி பெண்கள் என்ன உணர்கிறார்கள் என்று காட்டியது.

இன்று பின்னோக்கிப் பார்க்கும் போது பெண்கள் ஆய்வு வட்டத்தினால் வெளியிடப்பட்ட சொல்லாத சேதிகள் (1986) எனும் கவிதைத் தொகுப்பு இந்த விழிப்புணர்ச்சியினதும் ஒரு குறியீடாகத் தென்படுகிறது. பதினொரு பெண் கவிஞர்களது இருபத்திநான்கு கவிதைகள் தான் இச்சிறிய தொகுப்பில் அடங்கியிருந்தன. ஆனால் அவற்றின் முக்கியத்துவம் குறிப்பிடத்தக்கது. சொல்லாத சேதிகள் என்ற தலைப்பே 'பேசாப் பொருளைப் பேசத் துணிந்த' ஒரு நிலைக்குப் பெண் எழுத்தாளர்கள் வளர்ந்து விட்டதைக் கூறுகிறது. சீதனம், ஒடுக்குமுறை, என்ற மாமூலான விடயங்களாகவோ, கோஷங்களாகவோ அல்லாமல் தமது அனுபவத்திரட்சியையும், உணர்வுகளையும், மன உருக்கத்தையும் கவிதையிலும் சிறுகதையிலும் இவர்கள் வெளிப்படுத்தினர். சென்ற வருடம் தற்கொலை செய்து கொண்ட சிவரமணி எண்பதாம் ஆண்டுகளில் உருவான பெண் கவிஞர்களுள் மிக முக்கியமானவர். தொடர்ந்து வாழ்ந்திருந்தால் தமிழ்க் கவிதையுலகிற்குகே ஒரு புதிய வீச்சை அவர் அளித்திருக்கக்கூடும்.

இலங்கையில் மாத்திரம் அல்லாது புலம்பெயர்ந்து ஐரோப்பிய நாடுகளில் வாழும் ஈழத்து தமிழ்ப் பெண்களிடையேயும் இப் புத்தெழுச்சி காணப்பட்டது. மைத்ரேயி, ராஜேஸ்வரி முதலியோர் போன்று இலங்கையில் இருக்கும் போதே எழுதிக் கொண்டிருந்தோர் மாத்திரம் அல்லாது புதிய பெண் எழுத்தாளர்களும் ஆங்காங்கே ஜேர்மனி, பிரான்ஸ், நோர்வே போன்ற நாடுகளில் தலைகாட்டினர். இவ்வகையில் சக்தி, நமது குரல், கண் போன்ற பெண்களாலே நடாத்தப்படும் சஞ்சிகைகளைக் குறிப்பிடலாம்.

வெளிநாடுகளில் வாழும் ஈழத்துத் தமிழ்ப் பெண்கள் பல்வேறு வகையாகத் தம்மை இனம் காணும் உணர்வுக்கு உள்ளாகின்றனர். இது ஒரு பன்முகப்படுத்தப்பட்ட, சிக்கலான அடையாளங்காணல் (IDENTIFY) ஆகும். வெளிநாட்டில் வாழும் ஈழத் தமிழ்ப் பெண் ஒரு அகதி, அங்கு புதிதாக குடியேறியவர், வெள்ளையரல்லாத சமூகத்தின்

## வேலை வேண்டும்!

வேலையில்லாத் திண்டாட்டம் இலங்கை போன்ற மூன்றாம் உலக நாடுகளை மாத்திரம் ஆட்டிப் படைக்கவில்லை. இன்று பல தொழில் வளர்ச்சியுற்ற நாடுகளிலும் இப்பிரச்சனை தலைவிரித்தாடுகிறது. குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் இப்பிரச்சனை பெரிதாகி வருகிறது. எதிர்வரும் 15 வருடங்களாவது இந்த நிலை நீடிக்கும் என ஐரோப்பிய சமூகப் பிரதிநிதி ஒருவர் கூறியுள்ளார். இந்த நாடுகளில் இன்னும் 12 வருங்களில் மூன்றுகோடி பேர் வேலையற்றிருப்பர் என அவர் கூறுகிறார்.

– பிரமன் –

www.tamilarangam.net

## மாதம், செப்டம்பர் மாதம்



செப்டம்பர் மாதம் உலக இலக்கிய வரலாற்றில் குறிப்பிடத்தக்க யாதமாகும். இந்த மாதத்தில்தான் ரஷ்ய இலக்கிய மேதை லியோ ரோல்ஸரோய் பிறந்தார். 8128 செப்டம்பர் 9ஆம் திகதி பிறந்த இவர் ரஷ்ய இலக்கிய வரலாற்றில் மட்டுமல்ல, உலக இலக்கிய வரலாற்றிலும் மிக முக்கியம் வாய்ந்த ஒருவராகக் கருதப்படுகிறார். இவாது படைப்புகள் - முக்கியமாக நாவல்கள் - பல ஐரோப்பிய இலக்கிய கர்த்தாக்களுக்கு ஒரு புத்துணர்வையும் தாக்கத்தையும் ஏற்படுத்தியவை.

இவாது புகழ்பெற்ற படைப்பான 'போரும் சமாதானமும்' தமிழ் உட்பட பல சர்வதேச மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுப் பிரபல்யம் பெற்றது. இது 1955இல் திரைப்படமாகவும் தயாரிக்கப் பட்டது.

- இலக்கியா -

அங்கத்தவர்கள், ஒரு தொழிலாளி, இவை மாத்திரமன்றி அவள் யாழ்ப்பாணத்துத் தமிழ்ப் பெண் அன்னிய நாட்டில் தமிழ்க் கலாச்சாரத்தைக் காப்பாற்ற வேண்டியவள் என்பதும் அவளுக்கு அடிக்கடி அறிவுறுத்தப்படுகிறது. இத்தகைய பன்முகப்படுத்தப்பட்டதும் அதேசமயம் சில முரண்பாடுகளை உள்ளடக்கியதுமான நிலைமை பெண்களுக்கு பல சவால்களையும், சமூக, உளவியல் பிரச்சனைகளையும் தோற்றுவிக்கிறது. இத்தகைய விசேடமான பிரச்சனைகளைக் கையாளும் கவிதைகள், சிறுகதைகள் இப்புலம் பெயர்ந்த பெண் இலக்கிய கர்த்தாக்களால் ஆக்கப்படுகின்றன.

இப்படைப்புகள் இப்பெண்களது வாழ்நிலைகளைப் பிரதிபலிப்பது மாத்திரம் அல்லாமல் அவை பற்றிய கருத்துநிலைப் பிரச்சனைகளையும் வினாக்களையும் எழுப்புவது குறிப்பிட வேண்டியதாகும். கலாச்சாரம், பாரம்பரியம் என்பவை யாவை? தமது கலாச்சாரங்களைக் காட்டிக் கொடுக்கும்படி ஏன் பெண்கள் மாத்திரம் அறிவுறுத்தப்படுகின்றனர்? தமிழ்ப்பெண்கள்மாத்திரமா அல்லது ஏனைய சமூகப் பெண்களுமா இந்த அழுத்தங்களுக்கு உள்ளாகின்றனர்? அன்னிய சூழலில் ஆண்கள் ஏன் பெண்கள் மீது அதிக அளவு கட்டுப்பாட்டை விதிக்கின்றனர்?போன்ற வினாக்களை இப்படைப்புகள் எழுப்புவதை நாம் உதாசீனம் செய்ய முடியாது.

இலக்கியத்தில் மாத்திரமன்றி ஒவியத்துறையில் இளம்பெண் படைப்பாளிகளது வருகையை அவதானிக்கலாம். சமூகத்தில் வளர்ந்த பொதுவான பெண்கள் விளிப்புணர்ச்சிக்கும் முன்பு அதிகம் காலடி வைக்காத கலைப் பிரதேசங்களில் பெண்கள் துணிந்து புகுந்தமைக்கும் தொடர்பு இருந்தது. பெண்கள் விழிப்புணர்வும், அதற்கு சமூகத்தில் தற்காலிகமாகவேனும் காணப்பட்ட ஏற்புடமையும் பெண்கலைஞர்களுக்கு ஒரு உந்துதலை அளித்தன. (எண்பதுகளின் பிற்பகுதியிலிருந்து இந்நிலை பின்தள்ளப்பட்டதும் பெண்நிலைவாதத்திற்கு எதிரான கருத்துக்கள் சமூகத்தின் பிற்போக்குக்கோணங்களிலிருந்து ஒலிக்கத் தொடங்கியதும் வேறுவிடயம், அது தனியாக ஆராயப்பட வேண்டியது.)

எவ்வாறாயினும் ஒட்டுமொத்தமாக நோக்கும்போது சமூகத்தின் பெண்களினது இருப்பு, அந்தஸ்து, அவள் எதிர் நோக்கும் பிரச்சனைகள் ஆகியவை பற்றிய பெண்நிலைப்பட்ட இலக்கியங்களின் தோற்றம் இக்காலப்பகுதியின் புதிய முனைப்பான போக்கு ஆகும். இதனை எந்த இலக்கிய விமர்சகரும், ஆய்வாளரும் புறக்கணிக்கமுடியாது. (இன்னும் வரும்)

www.tamilarangam.net

# தொலைந்துபோன தேசம் பற்றிய சில குறிப்புகள்

**தேசப்பிரியன்**

குடாநாட்டைக் கைப்பற்றும் பூமியதிர்ச்சி ராணுவ நடவடிக்கை மூலம் விடுதலைப் புலிகளைப் பலமிழக்கச் செய்வதாகக் கூறிய ராணுவத்தினர், தொடர்ந்த புலிகளின் தாக்குதல்களில் பெருந்தொகையில் உயிர், ஆயுத இழப்புக்கு உள்ளாகியுள்ளனர். புலிகளின் தாக்குதல்கள் குடாநாட்டுக்கு வெளியே திருமலை, பூநகரி, மட்டக்களப்பு, வவுனியா மற்றும் கட்டைக்காடு பகுதிகளில் பரவலாக்கப் பட்டதைத் தொடர்ந்து, ராணுவத்தில் பெருந்தொகையைக் கிழக்கே நகர்த்த வேண்டிய நிலைக்குப் படையினர் தள்ளப் பட்டுள்ளனர். அண்மைக் காலங்களில் மிகப்பெரியளவில் ஆயுதங்களை ராணுவத்தினர் பறிகொடுத்தது கட்டைக்காட்டுத் தாக்குதலிலேயே. ஆனையிறவுக்கு அருகில் இருந்த இந்த முகாம் இருமணிநேரத் தாக்குதலில் கைப்பற்றப் பட்டபின் கோடிக்கணக்கான ரூபாய்கள் பெறுமதியான ஆயுதங்களையும், நுண்ணிய தொழில்நுட்பம் வாய்ந்த கட்டளை வாகனத்தையும் புலிகள் தம்வசமாக்கினர்.

தமிழ் மக்களின் பிரச்சனைகள் தொடர்பாக வெளிநாடுகள் சில (நோர்வே, சுவீடன், சுவிஸ், கனடா, அமெரிக்கா) எடுத்துவரும் முயற்சிகள் தொடர்பாகத் தற்போது நாடு திரும்பியுள்ளதாகக் கூறப்படும் கிட்டு புலிகளின் தலைவருடன் பேசுவதாகவும், இந்த நாடுகள் பிரபாகரனின் நேரடிப் பங்குபற்றலை வலியுறுத்தியதாகவும் நம்பத்தகுந்த வட்டாரங்களில் அறியப்படுகிறது. எனினும் கிட்டு நாடு திரும்பிய செய்திகளைப் புலிகள் மறுத்துள்ளதுடன், கிட்டு எங்கிருக்கிறார் என்ற தகவலையும் மறைத்துள்ளனர்.

இதேவேளை கொழும்பில் புலிகளும் அரசும் பேச்சுகள் நடத்துவதாகவும், இவை (முன்போல) இரகசியமாக நிகழ்வதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன. புலிகளுடன் அரசு பேசுகிறதா



www.tamilarangam.net



அரசு பேசுகிறதா என்ற கேள்விக்கு பத்திரிகையாளர் மாநாட்டில் அமைச்சர்கள் சாதித்த மௌனம் இச்சந்தேகத்தைக் கூட்டியுள்ளது. புலிகளுடன் அரசு பேசக்கூடாது என ஒரு தரப்பினரும், புலிகளுடன் பேசுவதைப் பகிரங்கமாகப் பேசவேண்டும் என்று இன்னொரு சாராருமாக எதிர்க்கட்சிகள் கருத்துத் தெரிவித்துள்ளன. இந்தப் பேச்சுகளில் புலிகள் ஆயுதங்களைக் கையளிக்க வேண்டும் என்ற நிபந்தனையில் இருந்து, ஆயுதப் பாவனையை நிறுத்தல் என்ற நிபந்தனைக்கு அரசு இறங்கி வந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை இனப்பிரச்சனைக்குப் பிந்திய தீர்வாக, இரு மாகாணசபைகளும் (வடக்கு, கிழக்கு) இவை உள்ளடக்கப்பட்ட பொதுவான பிராந்திய சபை ஒன்றும் அமைக்கப் படலாம் என்ற கருத்து முன்வைக்கப் பட்டுள்ளது. இந்தத் தீர்வு பல தமிழ்க் கட்சிகளின் ஆதரவையும் பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது. டிசம்பருக்குள் தீர்வு காணப்பட வேண்டும் என்ற தமிழ்க் கட்சிகளின் வற்புறுத்தலும், 'டிசம்பருக்குள் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும்' என்ற பிரதமரின் பேச்சும் இதை மறைமுகமாகச் சுட்டிக் காட்டுவது போல உள்ளது.

தமிழ் முஸ்லிம் மக்களுக்கிடையே நிலவும் மனக்கசப்புகள் மேலும் மோசமாகும் வகையில் அண்மையில் பொலநறுவை மாவட்டத்தில் 175க்கு மேற்பட்ட முஸ்லிம் பொதுமக்கள் கொல்லப்பட்ட சம்பவம் நிகழ்ந்துள்ளது. புலிகளும், அரசும் இச்சம்பவத்துக்கு ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டியுள்ளனர். வெளிநாட்டுத் தொடர்புச் சாதனங்களும் தாக்குதலில் தப்பியவர்களும் புலிகளையே இச்சம்பவத்திற்குக் காரணமாகக் கூறியுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக நாடு முழுவதும் துக்கம் அனுஷ்டிக்குமாறு முஸ்லிம்

## கடற்படைத் தளபதி குண்டுவெடிப்பில் பலி!

*இலங்கையின் கடற்படைத் தளபதி அட்மிரல் கிளன்ஸி பெர்ணாண்டோ கொழும்பில் நிகழ்ந்த குண்டு வெடிப்பில் பலியானார். இவருடன் இவரது மெய்க்காவலரும் வேறு சிலரும் கொல்லப் பட்டுள்ளனர். மோட்டார் சைக்கிளில் குண்டைக் காவிவந்த தற்கொலைக் கொலையாளி ஒருவராலேயே இந்தக் கொலை நிகழ்த்தப் பட்டிருக்க வேண்டும் எனக் கொழும்புச் செய்திகள் கூறுகின்றன.*

## மீண்டும் இலங்கைக்கு பிரிட்டனின் ஆயுதம்!

பிரிட்டன் இலங்கைக்கான ஆயுத ஏற்றுமதிமீது விதிக்கப் பட்டிருந்த தடையைத் தளர்த்தியுள்ளது. லண்டன் தினசரி ஒன்று இதுபற்றி வெளியிட்ட செய்தியில் அண்மையில் நூற்றைம்பதுக்கு மேற்பட்ட முஸ்லிம் பொதுமக்கள் கொல்லப்பட்ட பின்னரே பிரிட்டிஷ் அரசு இந்தமுடிவை எடுத்திருப்பதாகத் தெரியவருகிறது.

* வடக்கில் நியமனம் பெற அரசு ஐயாயிரம் பேர் கொண்ட பொலிஸ் படை ஒன்றை நியமனம் செய்யவுள்ளது.

* ஹங்கேரியில் சிறையில் வைக்கப்பட்டிருந்த ஐம்பது தமிழர்கள் அகதிகளுக்கான ஐ.நா. உயர் ஸ்தானிகராலயத்தின் உதவியுடன் விடுதலை செய்யப் பட்டுள்ளனர்.

* நுவரெலியாவில், அரசை விமர்சிக்கும் பத்திரிகை விநியோகிக்க எடுத்துச் செல்லப்படுகையில் பறிமுதல் செய்யப்பட்டதை எதிர்த்து மாபெரும் வீதி மறியலும் பொதுக் கூட்டமும் இடம்பெற்றுள்ளன. இவற்றை சுயாதீன

www.tamilarangam.net

கொங்கிரஸ் விடுத்த வேண்டுகோள் சில இடங்களில் வெற்றியளித்துள்ளது. கொழும்பில் இந்த ஹர்த்தால் வன்முறையாக வெடித்ததுடன் மருதானை உட்பட சில இடங்களில் தமிழர் சொத்துகள் சேதமாக்கப் பட்டுள்ளன. கொழும்பு உதவி நகரபிதா கணேசலிங்கத்தின் கார் கொளுத்தப் பட்டது.

இந்தியாவில் இருந்து தாயகம் திரும்பி அனுப்பப்படும் அகதிகளைத் தங்கவைக்க வவுனியா ஆசிகுளத்தில் 65ஏக்கர் பரப்பில் அமையவுள்ள அகதிமுகாம், அகதிகளுக்கான ஐ.நா.உயர் ஸ்தானிகராலயத்தின் உதவியுடன் அமைக்கப் படுகிறது. இந்தத் திட்டத்திற்குப் பல சிங்கள அமைப்புகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

யாழ்ப்பாணத்தில் இருந்து ஏனைய பகுதிகளுக்குச் செல்ல இருந்த ஒரே வழியான கிளாலி கடலேரிப் பாதையில் படகுகள் மீது நிகழ்த்தப்பட்ட தாக்குதல்களால் பலர் உயிரிழந்துள்ளனர். அதேவேளை, ஆனையிறவை மக்களின் பாவனைக்காகத் திறப்பதற்குப் புலிகள் விடுத்த நிபந்தனையை ஏற்றுக் கொண்டதாகப் படையினர் அறிவித்துள்ளனர். ஆனையிறவுப் பாதை திறக்கப்பட்டால் அந்தப் பாதையைப் பாவித்துக் குடாநாட்டினுள் ராணுவம் நுழைய முயலக் கூடாது எனப் புலிகள் நிபந்தனை விதித்திருந்தனர்.

கடந்த ஒனபது வருட காலமாக நிகழும் உள்நாட்டு யுத்தத்தினால் சுமார் ஆறுலட்சம் மக்கள் சொந்த இடங்களைவிட்டு இடம்பெயர்ந்து தாய்நாட்டிலேயே அகதிகளாக வாழ்கின்றனர். சமாதானப் பேச்சுகள் பற்றி அடிக்கடி பேசப்பட்டாலும் இராணுவத் தீர்வு பற்றியே இரு தரப்பிலும் சிந்தனைகள் மேலோங்கியுள்ளன. இன்னும் இருபது வருடம் போராட்டம் நீடிக்கலாம் என யோகி அண்மையில் கூறியதும் இங்கு குறிப்பிடத் தக்கது. யார் வெற்றியீட்டினாலும் அதற்கிடையில் நிகழப்போகும் அழிவுகளுக்குத் தக்க பலனை யாராவது ஈட்ட முடியுமா என்பது பெரிய கேள்வியே. இதனை இரு சாராரும் உணரும்போதே தீர்வுத் திட்டங்கள் வலுப்பெற முடியும்.■

---

தொடர்பு சாதனங்களுக்கான அமைப்பு ஒழுங்கு செய்துள்ளது.

* வவுனியா ஆசிகுளத்தில் பாரிய அகதிமுகாம் அமைக்கப்படுவது பற்றிச் சிங்களவரிடையே பெரும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. எனினும் இந்த முயற்சி தொடரும் என அகதிகளுக்கான ஐ.நா. உயர் ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது.

* கிழக்கில் காக்காச்சிவட்டைப் பகுதியில் பெருந்தொகையான தமிழர்கள் படையினரால் கைது செய்யப்பட்ட 91பேரில் 45 பேரைப் பற்றித் தமக்கு எதுவும் தெரியாது எனப் படையினர் கூறியுள்ளனர். இதே கிராமத்தைச் சேர்ந்த 12பேர் கைதானதன் பின்னர், அவர்களது சடலங்களே மீட்கப்பட்டன.

* அம்பாறை வயல்களில் சயனைட் பூசிய ஆணிகள் வைக்கப்பட்டுள்ளதாகப் புகார்கள் கிடைத்ததை அடுத்து, வயல்களுக்குச் செல்வோரை எச்சரிக்கையாக இருக்குமாறு படையினர் கேட்டுள்ளனர்.

* இதுவரை போராட்டத்தில் 5100 புலிகள் பலியானதாகவும் இவர்களில் 350பேர் பெண்கள் எனவும் யாழ்ப்பாணத்தில் கூட்டம் ஒன்றில் யோகி கூறியுள்ளார். போராட்டம் இன்னும் இருபது வருடம் நீடிக்கலாம் எனவும் அவர் கூறினார்.

---

தொகுப்பு - நிவாந்தன் -

www.tamilarangam.net



## ஒஸ்லோவின் ஏழ்மைப் பகுதி

உலக நாடுகளில் கடும் வறுமையுடன் வாழும் மக்கள் அதிகளவிலும் பணக்காரர்களின் தொகை சிறியளவிலும் இருப்பதைப் பார்க்கிறோம். ஆனால் உலக ஒப்பீட்டளவில் ஐரோப்பாவில்ஓரளவு செல்வம் பகிரப்பட்டு இருப்பதனால் மூன்றாம் உலக நாடுகள் போல மோசமான வறுமை நிலை இல்லை. ஐரோப்பிய நாடுகளிலும் ஸ்கன்டிநேவிய நாடுகளில்(நோர்வே, டென்மார்க், சுவீடன் ) இந்நிலை சிறப்பானதாக இருக்கின்றது. கிட்டத்தட்ட எல்லோரும் வசதியுடையவராகவும், பசியால் வாடுபவர்களைக் காண முடியாது. ஆயினும் கடந்தகால கணிப்பின் படி இந்நிலை மாற்றம் கண்டுள்ளது.

ஒஸ்லோ நகரைப் பொறுத்தவரை மேற்குப் பகுதியில் வாழ்பவர்கள் வசதி படைத்தவர்களாக உள்ளனர். இவர்கள் நல்ல பணவருவாய் உள்ளவர்களாகவும், உயர் கல்வியுடையவர்களாகவும், நல்ல வீடு என்பவற்றை உடையவர்கள். ஆனால் ஒஸ்லோ நகரின் கிழக்குப்பகுதி மக்கள் (GRON LAND) வறுமை படைத்தவர்களாகவும், குறைந்த கல்வித்தகமை, மோசமான வீட்டுவசதி, உடல்நலம் குறைந்தவர்களாகவும், குறைந்த வருவாய் பெறுபவர்களாகவும், அதிகம் பேர் வேலை வாய்ப்பு இல்லாதவர்களாகவும் உள்ளதாக அறியப்படுகிறது. இந்தப் பகுதி அதிக மாசடைந்த சூழலைக் கொண்டது. இந்தப் பகுதியில் இறப்பு வீதம் 40% ஆகவுள்ளது. இதுவே நோர்வேயின் ஏனைய பகுதியுடன் பகுதியுடன் ஒப்பிட்டளவில் அதிகம். நகரின் கிழக்கு பகுதியில் வசிப்பவர்களைக்காட்டிலும் மேற்குப் பகுதியில் வசிப்பவர்கள் மூன்று மடங்கு வசதி படைத்தவர்களாகவுள்ளனர்.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சே போயினும்...

●தர்மு

"நான் எமது புரட்சியில் எனது பங்கை முடித்துக் கொள்கிறேன். புரட்சிக்காக காத்து நிற்கும் மற்றைய நாடுகளின் புரட்சிக்காக பங்களிக்கப் புறப்படுகிறேன்."

குறிப்போடு ஒரு சிறு கடிதம் எழுதி வைக்கிறார். கியூபா நாட்டின் புரட்சியின் "மூளை" என வர்ணிக்கப்படும் டொக்டர் ஏணஸ்ரோ சே குவேரா. தனது நண்பர்களுக்குக் கூடத்தெரியாமல் கியூபா நாட்டை விட்டு ஏப்ரல் 1965 இல் வெளியேறிவிட்டார். ஆயினும் ஃபிடல் கஸ்ரோ கூவி அழைக்கின்றார். ஒக்டோபர் மாதம் 'சே'யை கைத்தொழில் அமைச்சராக பிரகடனப்படுத்துகிறார். ஆயினும் 'சே' வந்தால் தானே?

ஏற்கனவே தான் உயிரோடு இருப்பதாக ஒகஸ்ட் மாதத்தில் சேயின் சமிக்ஞை வருகின்றது. இலத்தீன் அமெரிக்க ஆதரவு மாநாட்டில் கலந்து கொண்ட கஸ்ரோவிற்கு இலத்தீன் அமெரிக்க காடு ஒன்றிலிருந்து செய்தி வருகின்றது. "நாங்கள் எல்லா முனைகளிலும் போராட வேண்டும். போராட்டத்தினூடே விடுதலை காண்போம். நாங்கள் சிறந்த எதிர்காலத்தை காண்போம்! இது ஏகாதிபத்திய வீழ்ச்சியினூடாகவே காண்போம்"

சே, ஆர்ஜன்டீனா நாட்டில் யூன் 14ம் நாள் 1928 இல் பிறந்தார். இவருக்கு 4 சகோதரர்கள். இவரது தந்தை பிரபல கட்டடக் கலைஞர். சே பிறக்கும் போது வருத்தக் காரணாகவே பிறந்தார். கொடிய ஆஸ்மாக் காரணாக இருந்தபோதும் சகல விளையாட்டுக்களிலும் பங்கெடுத்தார். சிறுவயதில் படிப்பில் மிகவும் கெட்டிக்காரராக இருந்த போதும் வருக்கு அரசியல் ஆர்வம்



www.tamilarangam.net



இருக்கவில்லை. பின்னர் இவர் நாட்டின் பல பகுதிகளுக்கு பயணம் செய்த போது அவரது கண்களும் இதயமும் திறந்து கொண்டது, பெருத்த கேள்வியுடன்.

"ஏன் பெரும்பாலான மக்கள் வறுமையிலும் துன்பத்திலும் வாடுகிறார்கள்?" என்பது தான். 1953ம் ஆண்டு தமது மருத்துவக் கல்வியை முடித்துக்கொண்ட அவர் உடனடியாக நாட்டை விட்டு வெளியேறினார். காரணம் கட்டாய இராணுவச்சேவையில் ஈடுபடாமல் தப்பிக்கொள்வதற்குத்தான்!

1954ம் ஆண்டு மெக்சிக்கோ நகரில் வைத்து சகோதரர்கள் பிபல், ராவூல்



ஆகியோரைச் சந்தித்தார். இதுவே முக்கிய சந்திப்பாக வரலாற்றில் இடம்பெற்று விட்டது.

56ஆம் ஆண்டு படகு மூலம் கியூபா நாட்டினுள் களவாக அடியெடுத்து வைத்தார். காஸ்ரோவின் படைகளுடன் இணைந்து பாட்டிஸ்டா சர்வாதிகாரியை 1959ம் ஆண்டு புதுவருடத்தன்று அடித்து விரட்டி சாதனை புரிந்தார்.

கியூபா புரட்சியின் பின் சே, பிடல்காஸ்ரோவின் நெருங்கிய ஆலோசகரானார். இவர் உடன்டியாக காணி சீர்திருத்தத்தைக் கொண்டு வந்தார். பின்னர் வங்கி ஆளுனரான பின் 1961 இல் கைத்தொழில் அமைச்சராக்கப் பட்டார். ஆயினும் ஒரு போதும் பதவிநலனை மட்டும் கருத்தாக சே கருதியதில்லை. இவற்றையெல்லாம் உதறிவிட்டு ஏனைய நாட்டு மக்களின் விடுதலைக்காக புறப்பட்டு விட்டார். இவ்வாறு இவர் பொலிவிய நாட்டு மக்களின் விடுதலையை வேண்டி போராட்டம் நடாத்திய போது பொலிவிய இராணுவத்தின் குண்டுபட்டு வீரமரணத்தைத் தழுவிக் கொண்டார்.

இவர் இறப்பதற்கு முன் எழுதிய 'கெரில்லாப் போராட்டம்' பற்றிய புத்தகம் இன்று இலத்தீன் அமெரிக்க விடுதலை அமைப்புகளுக்கு மாத்திரமல்லாது உலக விடுதலை அமைப்புகளின் 'பைபிள்' என சொல்லப்படுகின்றது.

இன்னும் 'சே' ஏனைய தலைவர்கள் போலல்லாது இலத்தீன் அமெரிக்க மக்களின் இதயத்தை வென்ற ஒரு ஆத்மாவாகவே உள்ளார். காரணம் அவர் தனது நலனுக்காகவோ தனது வெற்றிக்காகவோ போராடியவரல்லர், அவரின் போராட்டம் 'மக்களிற்கு எது சிறந்தது' எனும் சிந்தனையை கொண்டிருந்ததே பிரதான காரணமாகும்!

'சே' இறந்து 25 வருடங்கள் கழிந்த பின்னும் மூன்றாம் உலக நாடுகளில் குறிப்பாக இலத்தீன் அமெரிக்க நாட்டு மக்களின் இதயத்தை வென்ற விடிவெள்ளியாகவே இருக்கின்றார்! ●

---

**ஊதா**

இரட்டை அடிமைகளாக வாழும் பெண்களின் குரலாகப் புதிய சஞ்சிகை ஒன்று ஊதா என்ற பெயரில் வெளிவரத் தொடங்கியுள்ளது. வருடத்தில் மூன்று இதழ்கள் வெளிவரவுள்ள ஊதாவின் சந்தா 15 டொச் மார்க்குகள் மாத்திரமே.

தொடர்புகளுக்கு: UUTHA, Aller Welt Haus, Potthof str 22, 5800 HAGEN 1, GERMANY.

---

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிரித்திர உலகில் சிரித்திரன்

● ஜோக்கிளார் ●



அரிசித்தட்டுப்பாடுகால ஆசீர்வாதம்

ஈழத்து சஞ்சிகை உலகில் தனக்கென ஓரிடத்தை சிரித்திரன் சஞ்சிகை பெற்றிருந்தது. சிரித்திரனின் பாணி தனித்துவமானது. அவ்வாறே 'சிரித்திரன்' என்ற பெயரும். 'சிரித்திரன்' எனும் சொல் முன்பு தமிழில் இருந்ததில்லை. இந்தச் சஞ்சிகைக்காக உருவாக்கப்பட்ட சொல்லே அது. இந்தச் சஞ்சிகை தொங்கப்பட்ட

காலத்தில் (அந்தச் சொல் தொடங்கிய காலமும்கூட) இந்தச் சொல் தொடர்பாக இலக்கிய உலகில் பெரும் சர்ச்சை உருவானது. இப்படி ஒரு சொல்லே தமிழில் இல்லை எனவும், இந்தச் சொல் ஏற்புடையதல்ல எனவும் பலர் வாதிட்டனர். ஆனால் இவற்றையெல்லாம் மீறி 'புதியன புகுதலும் பழையன கழிதலு'மாக சிரித்திரன் என்ற சொல் இலகுவாக மக்கள் மனதில் இடம்பிடித்தது, சஞ்சிகையும்கூடத்தான்.

இலங்கையில் ஒரு சஞ்சிகையை நடத்துவது மிக்க சிரமமாக இருந்த காலத்தில், மாதம் ஒருமுறை ஒழுங்காக வெளிவந்த சிரித்திரன் வாசகரிடையே பேராதரவு பெற்று வியாபார ரீதியிலும் ஒரு வெற்றிகரமான விடயமானது. இது ஈழத்து இலக்கிய உலகில் பலருக்கு ஒரு த்ன்னம்பிக்கை கொடுத்த விடயம்.

வரண்ட தமிழ்ப் பிரதேசத்தில் (குறிப்பாக யாழ்க் குடாநாடு எனச் சொல்லலாம்) சமூகச் சீர்கேடுகளை நகைச்சுவையாக்கி எல்லாத் தரப்பு மக்களின் மனதிலும் இடம்பிடித்தது சிரித்திரன். இதற்கு முக்கிய காரணமானவர் சஞ்சிகையின் ஆசிரியரும், கேலிச்சித்திர ஓவியருமான 'சுந்தர்'. இவரைத் தவிர்த்துப் பார்த்தால் தமிழில் கேலிச்சித்திரக்காரர் என்று குறிப்பிட்டுச் சொல்லும் வகையில் இல்லை என்றே எனக்குத் தோன்றுகிறது. இவரது படைப்புகளான மெயில்வாகனத்தார்,

www.tamilarangam.net

சின்னக்குட்டி, சவாரித்தம்பர், Mr&Mrs டாமோடிரன் போன்ற பாத்திரங்கள் இலகுவில் மனதைவிட்டு நீங்காதவை. சிரிப்போடு சிந்தனையைத் தூண்டிய சிரித்திரன், எண்பதுகளின் நடுப்பகுதியில் அதன் ஆசிரியர் சுகயீனமுற்றதால் வெளிவரமுடியாமல் நின்றுபோனது. இது பல ஆயிரம் வாசகர்களைக் கவலை கொள்ள வைத்தது.

பின்னர் இது மீண்டும் கடந்த வருட நடுப்பகுதியில் இருந்து வெளிவரத் தொடங்கியுள்ளது. நோர்வேயில் தமிழ் வீடுகளில் பொதுவாக இந்திய சஞ்சிகைககள், சினிமாப் பத்திரிகைகள், இயக்கப் பிரசுரங்கள் மாத்திரமே வழமையாக இருக்கும். ஆனால் அண்மைக்காலங்களில் நான் சென்ற பல வீடுகளில் சிரித்திரன் இருப்பதைக் கண்டேன். இது இத்தனை காலத்தின் பின்னரும் சிரித்திரன் சஞ்சிகைமீது பலர் கொண்டுள்ள அபிமானத்தையே காட்டுகிறது.

முன்னர் சிரித்திரனில் வரும் துணுக்குகளும், நகைச்சுவைச் சித்திரங்களும் சிரிக்க வைப்பதுடன் மனிதநேயத்துடன் சிந்திக்க வைப்பவை. அதிலும் மகுடியின் பதில்கள் அற்புதமானவை. இது பலரையும் கவர்ந்த அம்சமாகும். ஒவ்வொரு இதழும் அந்தந்தக் காலத்தைப் பிரதிபலித்துக் காட்டுவன.

சிரித்திரனை நீண்ட இடைவெளிக்குப் பின் ஐப்பசி - கார்த்திகை'91 இதழில் இருந்து இடையிடை படிக்கக் கிடைக்கிறது. ஆனால் சிரித்திரன் முன்பு போலன்றி நேரடி அரசியலில் தன்னை ஈடுபடுத்தி, ஒருபக்கப் பார்வையுடன் வெளிவருவதால் என்னால் முன்பு போலச் சிரித்திரனை ரசிக்க முடியவில்லை. சிரித்திரன் அரசியலில் தன்னை ஈடுபடுத்துவது ஒருவழிப் பாதை போல் இருக்கக் கூடாது.







சிரித்திரன் தனது பார்வையை மேலும் தெளிவாக்கி மக்களுக்குத் தெளிவையும் நகைச்சுவை உணர்வோடு கலந்து ஊட்டவேண்டும் என்பதே பல வாசகர்களின் விருப்பம்●

www.tamilarangam.net



# எதுவரை தொடரும் மனிதரின் கதை?



Günter Grass

ஜெர்மன் மொழி மூலத்திலிருந்து தமிழில்:

**ந.சுசீந்திரன்**

பிரபல ஆங்கில நாவலாசிரியர் விலங்குப் பண்ணை George Orwell அவர்கள் 1937 ம் ஆண்டு ஸ்பானியாவில் நடைபெற்ற உள்நாட்டு யுத்தத்தில் கலந்து கொண்டு திரும்பிய போது, ஸ்பானிய உள்நாட்டு யுத்தம் பற்றிய தனது விஸ்தாரமான அனுபவங்களை "Homage to Catalonia" என்ற தலைப்பில் எழுதி வைத்திருந்தார்.இந்த எழுத்துப்பிரதியை லண்டனில் முதலில் எந்தப் பதிப்பகத்தாரும் வெளியிட முன்வரவில்லை.இங்கிலாந்தில் அன்று மிகவும் செல்வாக்குடனிருந்த இடதுசாரிப் புத்திஜீவிகள் ,Orwell இந்த நூலில் வெளிப்படுத்திய நிதர்சனங்களை எற்றுக் கொள்ள விரும்பாதமையினால்,இதனை வெளியிட விரும்பவில்லை.இந்த இடதுசாரிகள் ஸ்டாலினின் அக்கிரமத்தை,அனார்கிஸ்ட்டுக்களின்,ட்ரொஸ்கி யவாதிகளின்,தீவிர இடது சாரிகளின் மீதான ஸ்டாலினின் திட்டமிட்ட படுகொலைகளை உண்மை என்று எற்றுக்கொள்ள மறுத்தனர்;இந்தப் படுகொலைகளில் இருந்து Orwell கூட மயிரிழையில் தான் உயிர்தப்பினார்.Orwell இன் மிகவும் யதார்த்தமான குற்றச்சாட்டு, "பாசிசத்திற்கெதிரான போராட்டத்தை முன்நகர்த்தும் சோவியத்நாடு"என்று காட்டப்பட்ட புனித உலகச்சித்திரத்துடன் முரண்பட்டு நின்றது.Orwell இன் அறிக்கைகள்,தாக்குதல்கள் சகிக்கமுடியாத நிஜங்களாய் உலகத்தின் கனவை உடைத்தெறிந்தது.

சுமார் ஒரு வருடத்தின் பின்னரே ஒரு மிதவாதப் பதிப்பகம் இங்கிலாந்தில் இந்நூலை வெளியிட்டது;கம்யூனிச ஆட்சிநிலவிய அனைத்திடங்களிலும் Orwell அவர்களின் படைப்புக்கள்-அவற்றோடு கம்யூனிஸ்ட்டுக்களுக்கு மத்தியில் அவர் பெற்ற கசப்பான ஸ்பானிய உண்மைகள்-அனைத்தும் சுமார் அரை நூற்றாண்டு காலமாகத் தடைசெய்யப்பட்டிருந்தது; கிழக்கு ஜேர்மனியின் பாதுகாப்பு மந்திரியாக அந்த அரசு குலையும்வரையில் பதவி வகித்த

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எறிஷ் மீல்க்க(Erich Mielke) ஸ்பானியப் போரில் ஈடுபட்ட முன்னணிக் கம்யூனிசப் படைத் தலைவர்களில் ஒருவர்,சக போராளிகளைப் 'போடுவதன்' மூலம் களையெடுப்புக்களை நடத்தியவர்;"ஸ்பானியாவில் போராடியவர்"தான் ஆனால் அங்கு 'எப்பொழுதும் தப்பிவாழும் பதவியில்' இருந்தவர்.

புத்திஜீவிகள் எவ்வளவுதூரம் தணிக்கையின் அதிகாரிகளாகவும் அதேவேளை அதனாற் பாதிக்கப்படுபவர்களாகவும் இருக்கிறார்கள் என்பதை Orwell இன் அனுபவம் நமக்குத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது என்பதால் இந்த உதாரணத்தை எடுத்துக்கொண்டேன்.இந்தப் பிரச்சினை ஒரு முடிவில்லாத நீண்ட பிரச்சனை.
கம்யூனிச அதிகாரத்தின் வீழ்ச்சி சொல்லிவைத்தவாறே அதன் புதிய வெற்றி நாயகனை அதிகாரத்தில் நிறுத்துகின்றது;இந்தப் புதிய நாயகர்களோ,முன்னைய அதிகாரத்தில் நடந்ததைவிட இன்னும் மோசமாக அன்று US அமெரிக்காவில் 1950 களில் அரச உயர் திணைக்களங்கள் கம்யூனிஸ்டுக்களினால் நிரப்பப் பட்டுள்ளதாகக் குற்றஞ் சாட்டியும், அனைத்துச் சமூக விமர்சனங்களையும் கம்யூனிசப் பின்னணி என்று விசமப்பிரச்சாரம் செய்தும் இடதுசாரிகளை வேட்டையாடிய அரசியல் வாதி Mc Carthy பாணியிலான அடக்கு முறைகளை மீண்டும் ஆரம்பித்துவிடுகின்றனர் .

முஸ்லிம் மதவெறிப்போக்கு,அன்றைய நிலவுடமைக்காலத்துச் சட்டதிட்டங்களோடு,அதன் எச்சசொச்சச் சித்தாந்தத்தை நடைமுறைப்படுத்திக் கொண்டிருப்பதைப்போலத் தோற்றமளித்தாலும், துருவித்துருவி ஆராயும் புத்திபடைத்த மேற்கத்தைய அரசியலமைப்புக்களும் கூட, இதைத்தான் ஆனால் வேறுபட்ட ஒரு பயங்காவாதத்திற்கான எதிர்காலத்தையே தம் தேவையாக வேண்டிநிற்கின்றன,பழைய நிலவுடமைச் சமூக மத்தியகாலமும்(5.-15. ம் நூற்றாண்டு),இன்றைய நவீனகாலமும் ஒரே தன்மையில், ஒரே காலத்தில் இப் பூகோளத்தில் நடந்து கொண்டிருக்கின்றன,அன்றைய மத அதிகாரத்தின் நீதிமன்றங்களும் சிரச்சேதங்களும் செய்த வேலையை இன்று கொம்பியூட்டர்கள் சகலவிதமான தகவல்களையும் உள்வாங்குவதன் மூலம் நிவர்த்தி செய்துவிடுகின்றன.

இந்த நூற்றாண்டு, உலகஅரசியல் அரங்கில் அநேக விடயங்களில் பின்னோக்கிய வீழ்ச்சியோடு தான் முடிவுக்கு வந்திருக்கிறது,மீண்டும் ஆர்மேனியாவில்(1920 வாக்கில் நடந்ததைப்போலவே) இனப்படுகொலை;பால்க்கன்(யூக்கோஸ்லாவிய!) மாநிலங்கள் தங்களுக்குள்.ஏதோ திரும்பத்திரும்பச் செய்யவேண்டும் என்ற நிர்ப்பந்தம் போல்,வெட்டுக்கொத்து; மீட்டெடுக்கப்படுந்தறுவாயில்,சுதந்திரம் அங்கே மீண்டும் கட்டுப்பாட்டுக்குள் முடக்கிவிடப்படுகிறது,நாசகாரக் கொள்ளைக்கோஷ்டிகளைப்போல தேசியவெறியர்கள், யூதஎதிர்ப்பாளர்கள்,முல்லாக்கள்,உயர்பீடப்பாதிரிகள்,முதலாளித்துவவாதிகள் ;இளம் பாசிஸ்டுக்கள்,பழைய ஸ்டாலினிஸ்டுக்கள் என்று இந்தச் சபிக்கப்பட்ட நூற்றாண்டின் பிரதான பாத்திரங்கள் ஜனநாயகத்தாராளவாதத்தில் தமது ஒப்பனை அலங்காரிப்புக்களைச்,சீர்திருத்தமாகக் காட்டிக் கொண்டு திரையகற்றி மேடைக்கு முண்டியடித்துக்கொள்கின்றனர்!பேச்சுச் சுதந்திரத்திற்காகக் குரல் கொடுக்கின்றனர்! ஆனால் தனித்தனியே தங்கள் தங்களுக்கான பேச்சுச்சுதந்திரத்திற்காக.

www.tamilarangam.net



ஒருவர் குரலை இன்னொருவர் அடைத்துவிட எத்தனிக்கும் இந்த அனேக கூக்குரல்களினால் எனக்கு முன்னால் இருக்கும் இந்த விடயத்தைத் தாண்டி இன்னும் பலவற்றைப் பேசுவதற்கு எனக்கு மிகவும் கஸ்டமாக இருக்கிறது. மானுடத்தின் சுயஅழிப்புக்கு இட்டுச்செல்லும் எல்லாவகை வகையறாக்களையும் பற்றிப் பேசுவதற்கு துருதுருப்பாக இருந்தாலும் அவற்றைத் தவிர்த்து, இலக்கியத்தோடு மட்டும் நின்று கொள்ளுகிறேன், இலக்கியத்தையும், அதற்கேற்படும் அவலத்தையம் பற்றிப்பேசுவதற்கு எப்பொழுதும் தேவை இருந்து கொண்டே இருக்கிறது.

எப்பொழுது எழுதத்தொடங்கினார்களோ அன்றே எழுத்தின் மீதான தடைகளும் தொடங்கிவிட்டன, அதிகாரம் என்ற வார்த்தை முதன்முதலில் உச்சரிக்கப்பட்டவுடனேயே தத்துவஞானிகளுக்கும் எழுத்தாளர்களுக்கும் நஞ்சு, தடையுத்தரவு, தணிக்கை, தலைமறைவு–வாழ்க்கை, கொலைமுகாம், தனிமைச்சிறை, உயிர்போகும்வரை சித்திரவதை என்று யாவும் உறுதிசெய்யப்பட்டு விட்டன, இது சோக்கிரட்டீஸ் தொடக்கம் உலக புகலிட இலக்கியத்தின் தந்தை ஒவிட்(Ovid) வரை, கட்டுரை இலக்கியத்தைச் செழுமைப்படுத்திய பிரான்ஸ் தத்துவஞானி மொன்ரேஞ்(Montaigne) தொடக்கம் ஜேர்மனிய புரட்சிக் கவிஞர் ஹைன (Heine) வரை இங்கிலாந்துக்குத் தப்பியோடிய பிரான்சிய எழுத்தாளர் சோலா (Zola ) தொடக்கம் ஸ்ராலினின் இரகசியப் பொலிசாரால் பலதடவை கைது செய்யப்பட்டும் ,நாடு கடத்தப்பட்டும், சைபீரியச் சிறையில் உயிர் நீத்த கவிஞர் மண்டல்ஸ்ராம் (Mandelstam )வரை Orwell,காஃப்கா (Kafka) என்று சல்மான் றுஸ்டி வரை ஓர் முடிவற்ற காட்சி கூடமாய் நீள்கிறது.

**(இன்னும் வரும்)**




இலங்கையில் புகழ்பெற்ற கேலிச்சித்திர ஓவியர் விஜேசோமா.
அனேகமாக இவரது கேலிச்சித்திர ஓவியங்கள் 'தி ஐலண்ட்'
பத்திரிகையில் இடம்பிடிப்பவை. பெரும்பாலும் இனவாதக்
கருத்துகளையே பிரதிபலிக்கும் இவரது படைப்புகளில் சில மிகத்
தரம் வாய்ந்தவை. அவ்வாறான சில படைப்புகள் சர்வதேச ரீதியில்
பாராட்டுகள் பெற்றுள்ளன. இங்குள்ள சித்திரம் கடந்த வருட
இறுதியில் சர்வதேச ரீதியில் புகழ்பெற்று விருதும் பெற்றது.

– ஞானி –

www.tamilarangam.net

## எங்காவது நடக்கும் ஒரு யுத்தம் பற்றி

புயல் வருது.... புயல் வருது.... என்று சொல்லிப்
புயலே வந்தது.
புவி புரளுது... புவி புரளுது..... என்று சொன்ன
கலியுகமும் கடந்தது.

என்ன செய்வர் என் மக்கள்?
சொன்னபடி கேட்பர் - இல்லையெனில்
துடித்தபடி மாள்வர்.

சொன்னபடி வாழ்வதும்....
துடித்தபடி மாள்வதும்......
அவரவர் ஞான ஒளி!

மக்கள் என் பக்கம் என்பதும்
மக்களின் பக்கம் நான் என்பதும்
ஒரு சொல்லின் இரு கருத்தே!

சொன்னபடி வாழாவும்
துடித்தபடி மாளாவும் - இருக்கும்
இம்மானிடனுக் கென்ன சொல்வீர்?

தப்புதல்.... கோழை.....
தத்துவ வறுமை.....
‘செப்புதல் மட்டும்’.... ஒரு புறநடை....

சொற்களை விடுங்கள்.
சொற்களினால் தூக்கிய துப்பாக்கி
இனியாவது நிற்கட்டும்.

வாழ்வு என்பது ஒரு தெரிவு.
‘தெரிவு’ என்பது ஒரு சொல்லோ ‘இசம்’(ism)ஓ அல்ல.

## தலைப்பசி

நான் படித்த பல்கலைக்கழகத்தில்
பதினெட்டுத் தலைகள்

ஆயிரம் தலைவாங்கிய அபூர்வசிந்தாமணி
கதை அம்புலிமாமாவில் படித்ததுண்டு.

இன்னும் எத்தனை ஆயிரம் தலைகள்
என் இலங்கை மாதா வாங்கப் போகிறாள்?

இலங்கை மாதாவிற்குத் தலைகள் பசிக்கிறது.

இரத்தம் தோய்ந்த கோரப்பற்களை
‘அவுக்கணை’யில் நெடிய உருவம் கொண்ட
புத்தம் போதித்த புத்தனின் உருவத்தில்
வைத்துப் பார்க்க
இந்த எளிய இந்துவால் முடியவில்லை.

நான் கதைகள் மட்டுமே படிப்பேன்.
வயது போனபின்னர்
‘அம்புலிமாமா’ கதைபடிக்கும் பக்குவம்
எனக்கு இன்னும் இல்லை.

வயதுபோன என் கிழவி அம்மா
எழுதும் கடிதக் கதைகளை வாசிக்க
எனக்குப் பக்குவம் வந்திருக்கிறது.

# க. ஆதவன் கவிதைகள்

www.tamilarangam.net

# ஆயிரம் பூக்கள் மலரட்டும்.

*ஆசிரியர் பார்வைக்கு,*
*சுவடுகள்,*
*நோர்வே.*

அன்புடன் மகனுக்கு,

இக்கடிதம் கிடைக்கும்போது நாம் உயிருடன் இருப்போமோ தெரியாது.! அமெரிக்க - பிரித்தானிய ஆக்கிரமிப்பாளர்களது குண்டுமாரியில் இருந்து தப்புவது மிகவும் கடவுளால் அருளப்பட்ட வரமாகவே இருக்கும்.

இந்நிலைமையிலும் எமது ஜேர்மனியினது சிரசு நிமிர்ந்து நிற்கவேண்டும், எமது மக்களை அழிவில் இருந்து காப்பாற்ற வேண்டும், முற்றான தோல்வியை எவ்வகையிலாவது தவிர்த்துவிட வேண்டும் என்ற கடமை உணர்வுடன் 15 வயதான இளைஞர்கள்கூட மேற்குமுனைப் போர்க்களத்திற்குத் தம்மை அர்ப்பணிக்கச் செல்கிறார்கள். எமது மூலைக்கடை (இன்று இல்லை!) காள் கயின்ஸ்இனுடைய இளைய மகள் போர்முனையிலிருந்து ஒரு கையும் இரு கால்களும் இழந்து திரும்பி வந்துள்ளாள். 19 வயதிலேயே இளமையின் இனிய விவரங்கள் யாவும் கற்பனைகளாகி விட்டன அவளுக்கு! ஆனால் இன்றும் தளராது அவள் காட்டும் தேசப்பற்றையும் வீரத்தையும் காணும் உற்றார்கள், அயலவர்கள் உன்னையும் மகனாகப் பெற்றாயே என்று தூற்றுகிறார்கள். உனக்கு எங்கே இந்த நிலைமைகள் விளங்கப் போகிறது?

நீயோ, கனடாவில் இருந்து எம்மைப் பாசிசவாதிகள், கொலைகாரர்கள் என வர்ணித்தபடி எமது இம்சைகள் துன்பங்கள் எவற்றையுமே உணராது கற்பனை வார்த்தைகளை எழுதியபடி உள்ளாய்!

இந்தப் போரில் நாட்டின் தற்காப்பிற்காகவும், வேறு நியாயமான காரணங்களுக்காகவும் பலர் 'களை' செய்யப் பட்டிருக்கலாம் என்பதை மறுப்பதற்குமில்லை. ஆனால் இவையெல்லாம் இன்று ஆராயப்பட வேண்டிய விடயங்களா என்ன?

நாற்கோடிகளிலும் இருந்து ரசியர்கள் அமெரிக்கர்கள் பிரித்தானியர்கள் என எம் இனத்தையே அழித்துவிட நடத்தப்படும் இந்த நரபலி வேட்டையில், உனது கேள்விகள் கருத்துகள் யாவுமே அர்த்தமற்றவையாக, வேளை புரியாதனவாகவே காணப்படுகின்றன என்பதைச் சுட்டிக் காட்டவேண்டிய கடமை தாயான எனக்கு உண்டு........

இங்ஙனம்,
அம்மா
டெர்ஸடன்
ஜேர்மனி.

சென்ற இதழில் வெளிவந்த யாழ் கடிதத்தை எடைபோடும் நோக்குடன் ஜேர்மன் அம்மையார் ஒருவர், 1940களில் மகனுக்கு எழுதிய கடிதத்தில் ஒரு பகுதியைத் தருகிறேன்.

ஆனால் ஜேர்மன் வேறு, இலங்கை வேறு என்ற விவரம் புரியாது நான் எதையும் எழுதி வைக்கவில்லை என்பதை முதற்கண் தெரிவிக்க வேண்டும். ஆனால் 'மக்கள்', 'போர்', 'போராட்டம்', 'முன்னேற்றம்' என்ற பதங்களை ஓரளவு Contentsக்குள் பார்த்து அதனடிப்படையில் வரும் பொதுவான அனுபவங்களை கேள்விகளாக்குவது முறையான அணுகுமுறையே!

எனவே, கருத்துச் சுதந்திரம் என்ற மூலத்தைப் பாவித்து, ஆனால் அதற்கே முடிவு கட்டிவிட வேண்டும் என்ற முனைப்புடன் எழுதப்பட்டுள்ள இந்த யாழ் கடித அன்பரிடமும், அவரைப் போன்றவர்களிடமும் ஒருசில கேள்விகள்:

1) ஜேர்மனி நாட்டு மக்களது முடிவினையே சித்தரித்ததே மேற்படி கடிதம், அது நடந்துதான் விட்டதா?

(இது பொருத்தமற்ற கேள்வியன்று. ஏன்? பிரச்சனைகளுக்குப் பதில் ஒன்றே ஒன்றுதான் என்ற நியதி ஒன்றுமில்லை.)

2) ஒவ்வொரு ஜெர்மனியனதும் பிரத்தியேக தனிப்பட்ட வாழ்வின் யுத்தத்தாலான பரிதாபத்தை யாராவது நிராகரிக்க முடியுமா? முடியாது! ஆனால் மிகவும் கண்ணீர் வடியவைத்திடும் முறையில் இத்தனிநபர்களை முன்நிறுத்தி விடுவதால் ஹிட்லரின் போர் சரியானதாகி விடுமா? பழிகள் மறுக்கப்படுமா? பிராயச்சித்தம் செய்திடுமா?

இங்கு நான் புலிகளைப் பாசிசவாதிகளாகவோ அல்லது வேறு எதுவிதத்திலும் ஹிட்லரது பிள்ளைகளாகவோ காட்ட முனையவில்லை. ஆனால் இவ்வகைக் கடிதங்கள் பிரச்சாரங்கள் எவ்வாறு இருவேறுபட்ட நிலைகளைச் சமமாகக் கட்டிவிடுகின்றன என்பதைச் சுட்டிக் காட்டவே முனைகிறேன்.

இனி மேலே பார்ப்பின்,

யாழ் அன்பரும், ஜேர்மனியரும், ஒருசில சொற்களால் 'களை' எடுப்பதாகச் சித்தரித்து நியாயமற்ற அராஜக நடத்தைகளைத் தட்டிக்கழித்து ஒளித்துவிட முனைவதிலிருந்து, இவர்களது 'தொலைநோக்கு' வீட்டின் முடக்குகளைத் தாண்டிச் சென்றிருக்க மாட்டாது என்பதைப் புரிந்துகொள்வது இலகுவானதே!

ஆனால் கேவலமான விடயம், எமது இளைஞர்கள் யுவதிகளது ஊனங்களை துன்பங்களை மையப்படுத்திப் போராட்டத்திற்கு மெருகூட்ட விளைவதும், ஆதரவு

www.tamilarangam.net



தேட முனைவதுமேயாகும். 'இயக்கத்தில்' இருந்த எனக்கும் எவ்வகையில் எமது 'தலைவர்கள்' எமது உயிர்களைப் பற்றிக் கருதுகிறார்கள் என்பதை அறிந்தவன் என்ற வகையில் அன்பரது கடிதம் விசனமாகவே படுகிறது. (அது அவர் முயற்சியில்லாது போகினும்!).

'யுத்தம்' என்பதன் பயங்கரத்தால், காட்டுமிராண்டித் தனத்தால் பிறந்திடும் பயத்தினையும் - வீரத்தினையும், வருத்தத்தையும் - விவேகத்தையும் மட்டுமே மையமாக வைத்து, திசைகெட்டு வக்கற்றுவிட்ட போராட்டத்தையும் - புலிகளையும் நியாயப்படுத்த முனையும் இவ்வகையான கீழ்த்தரமான, வருந்தக்கூடிய, Interlectuell ஆழமற்ற விவாதங்களை ஒரு பணக் குற்றியின், ஒரு கரையாகப் பார்ப்பின், அதன் மறுகரையில், அதே யுத்தத்தின் பயங்கரத்தால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு இளைஞர்கள் - யுவதிகள் - பெற்றோர்கள் கூட்டம் கூட்டுத் தொகையாக இருக்கும்.

ஆக, கேள்வி ஒன்றுதான்.

அந்தப் பணக் குத்தியின் பெறுமதி என்ன?

அந்தப் பெறுமதியின் அடிப்படையிலேயே கண்கொண்டவர்கள், விவரம் கண்டவர்கள் இவ்வகையான பிரச்சாரங்களை எடைபோட வேண்டும்.

தம்முடைய பிழைகளுக்கும் - குற்ற உணர்வுகளுக்கும் அல்லது failureகளுக்கும், அதனாலான frustrationகளுக்கும் ஆதாரங்கள் தேட விளையாது, மற்றவர்களின் துன்பங்களில் பங்குகொள்கிறோம் என்ற வேசத்துடன் மற்றோர் தோள்களில் சாய்ந்து அழுவதும், மாற்று நியாயம் கொண்டவர்களைச் சாடிடுவதும்தான் இன்றைய போராட்டத்தின் ஆன்மீக விவாதங்களாக, காட்சிகளாக காணப்படும்போது விளைவு எள்ளலாகத் தான் இருக்கும் என்பதை ஊகிப்பதில் சிரமம் இல்லை. வெறும் வெறுப்புகளையும் - பயத்தாலான வீரங்களையும் தூண்டிவிடும் வகையில் வெறும் உணர்ச்சிகளை மட்டுமே விவாதங்களாக வைப்பவர்கள் கொலைகாரர்களிலும் பாதகர்கள் என்பதை எமது 'போரிலும்' சரி, மற்றைய 'போர்களிலும்' சரி பல்லாயிரம் தடவைகள் கண்டுவிட்ட உண்மையல்லவா?

மேலும் அன்பர் 'இன்று' கருத்துச் சுதந்திரம் பற்றி விவாதிக்க வேண்டாம். 'நாளை' வரும் எனக் கூறுகிறார். ஆனால் உலக அரங்கில் நாம் கண்ட சரித்திர உண்மைகளைக் கொண்டு இந்த 'நாளை' எவ்வளவு காலத்தில் என்று யாராலும் கூறிட முடியுமா?

ஜேர்மனியில் இன்றும்தான், தாம் யூதர்களுக்கும், தமது பாசிச எதிர்ப்பாளர்களுக்கும், ஜிப்சிகளுக்கும், occupy பண்ணியிருந்த நாட்டு மக்களுக்கும் எதிராகச் செய்த அந்தக் 'களை' எடுப்புகளை - கொடுமைகளை ஏற்று உணர்ந்து ஒரு பொதுச் சமுதாய உணர்வுக்கு வந்துவிட்டார்களா? இன்றும்தான் அன்றைய நிகழ்வுகளைக் கண்முன் நிறுத்த முனையும் முயற்சிகள் பல வழிகளாலும் தடங்கல்களுக்கு உள்ளாகின்றன. ஏன்? அந்த 'நாளை' நாளை நாளை என்றே ஒத்திச்செய்து வந்து இன்னும் காணாத நிலையில் திரும்பவும் பாசிச வெறி தலையெடுக்க வழியைத் திறந்து வைத்துள்ளார்கள் என்பதை நாம் கண்ணால் காணக் கூடியதாக இருக்கிறதா என்ன?

ஜேர்மனி ஜேர்மனி என்று அறுக்கிறாயே என்றுவிட்டு வேறுதிக்கில் பார்த்தாலும் எங்குதான் இந்த 'நாளை' வந்து மக்களை உணர்வூற்றி நல்வழி தந்து தேற்றிவிட்டுள்ளது? அமெரிக்கர்கள் தமது செவ்விந்தியர் ஒழிப்பு நடவடிக்கைகளை பிழையென ஏற்று உணர்ந்துகொண்டார்களா? அல்லது இன்னும்தான் அந்தப் போக்கை அமெரிக்காவிலும் சரி கனடாவிலும் சரி நிறுத்திவிட்டார்களா? அவுஸ்திரேலியர்கள் அந்நாட்டுப் பூர்வீகக் குடிகளுக்கு இழைத்த கொடுமையை ஏற்றுத் திருந்திவிட்டார்களா? அல்லது கொலைகளை நிறுத்தி விட்டார்களா?

எவ்வளவு காலம்தான் இந்த 'நாளை' வந்துசேர? ஜேர்மனி, அவுஸ்திரேலியா, அமெரிக்கா, கனடா, ஸ்பெய்ன் என இலகுவான குற்றவாளிகளை சுட்டிக் காட்டிவிட்டு எனது வாதத்தின் மையப் பொருளுக்கு சான்று கோருவது பிழையாகத் தெரியவில்லை.

ஒரு மக்கள் எங்கே செல்கிறார்கள் - எவ்வகையில் செல்கிறார்கள் என்பதை அவர்களது பழைய சரித்திரத்தின் உணர்வுகளுடன் எவ்வளவுதூரம் சீர்செய்து ஐக்கியப்பட்டுக் கொண்டுள்ளார்கள் என்பதே பதில் சொல்லும்.

ஒரு மக்களது பாதை துண்டு துண்டானதல்ல! ஒன்றில் இருந்து ஒன்றுக்குத் தாவிச் செல்லக்கூடிய இலகுவான ஏணியுமல்ல! அது தொடர்பானது, தொடர்ச்சியானது, பழையதையும், புதியதையும் இடம்தவறாது இணைத்து நிற்கும் உணர்வுமானது! இதைவிட்டு நாம் இன்று செய்பவற்றை நாளை இலகுவில் மறந்து மன்னித்து பிராயச்சித்தம் கண்டு மனதுகளைச் சுயாதீனம் செய்துவிடலாம். இந்தத் தொடர்ச்சிக்குப் பங்கம் வந்துவிடாது என்று எண்ணுபவர்கள், நிச்சயமாக விஞ்ஞான அறிவு அற்றவர்கள், பொதுவிலே சுயநலமானவர்கள், விபரமற்ற கோழைகள், மேலாக அன்பு - பண்பு என்பவற்றை என்றுமே மறுத்துவிட்ட வெற்று மூளைச் சோம்பேறிகள்.

அன்பர் அறிந்துகொள்ளட்டும். அந்த 'நாளை' என்பது 'இன்றாக' இல்லாது போகின் எந்த நாளையையுமே எமது இளைய - வீர மக்கள் காணப் போவதில்லை.

அன்பர் கடிதத்தில் சொல்லாது சொல்லப்பட்ட இன்னொரு விடயம்! 'இன்று புலிகள் மட்டும்தான் - வேறு வழியில்லை! மேலும், மேற்படியான (majority) யாழ்ப்பாணத்தவர்கள் அவர்களுக்கே ஆதரவு!

'புலிகள் மட்டும்தான்' என்ற நிலைமையைச் சித்தரித்து மறுதலிக்க, இந்நிலைமை எவ்வாறு உருவாக்கப் பட்டது என்பதைச் சுட்டிக் காட்டி, எமது பலவீனத்தை நினைவூட்டுவது எனது வேலையல்ல. ஆனால், சற்று விவாத பலம் கொண்ட மூளை உள்ளவர்கள் யாரும் புரிந்துகொள்ளக் கூடிய ஒரு விடயம்!

புலிகள் மட்டும்தான் = வேறு வழியில்லை = தோல்வியின் விவாதத்தின் அறிகுறி (defeatism) என்பதை உணர்ந்துகொள்ள முடியவில்லையா? எனவே

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒரு அறிவுரை: புலிகள் மட்டுந்தான் – வேறு வழியில்லை என்று முக்கால் அழும் வாதத்தைவிட்டு, புலிகள் எல்லாப் பிழையான அமைப்புகளையும் முடித்துவிட்டது. எமது போராட்டம் தெம்புகண்டு முன்செல்கிறது. எனவே சகலரும் ஒன்றிணைகிறார்கள் என positive ஆகப் பிரச்சாரத்தை வைப்பது முன்னேற்றகரமாக இருக்கும்!

எனது எதிர்ப்பு புலிகள் மட்டும்தான் + majority ஆதரவும் என்ற வாதத்திறகு எதிரானது.

முதலாவதாகப் புலிகள் மட்டும்தான் என்பது majority ஆதரவு என்பதன் வடிவம் என்பதை நிராகரிக்க முடியாது. புலிகளே மக்கள் ; மக்களே புலிகள் என்பது யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை நியாயமானதும்கூட. அதனால் வரும் விளைவுகளும் அதனடிப்படையிலேயே என்பதை நாம் கண்முன்னால் காண்கிறோம்.

ஆனால் majority ஆதரவு என்ற தரவை வைத்து மட்டும் சகல நியாயங்களையும் கற்பிப்போமாயின், சாதிகளுக்கு எதிரான போராட்டத்தை நியாயப்படுத்த முடியாது. சாத்திரம் – சீதனம் போன்ற பிரச்சனைகளால் வாழ்வற்ற வாழ்க்கைகள் எல்லாம் வெறும் நியதிகளாகிவிடும். மக்கள் வெறும் ஆட்டு மந்தைகளாக்கப்பட்டு அவர்களது (?) மட்டும் கணக்கெடுப்பதுதான் முக்கியப்படுத்தப்படும். எனவே majority என்ற (சர்ச்சைக்குரிய) விவாதத்தை மையமாக வைப்பதையும் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டியதில்லை.

ஆக மொத்தத்தில் முடிவாகச் சொல்லப்பட வேண்டிய விடயம் ஒன்றுதான்; இவ்வாறான பிரச்சாரக் கடிதங்கள் வரைபவர்கள், வாதங்கள் பின்னால் ஒளிபவர்கள். ஒன்றில் முன்னர் குறிப்பிட்டது போல பாதகர்கள், அல்லது கடிதத்தில் குறிப்பிடப்பட்ட இளைஞனைப் போலப் பாதகர்கள் – புலிகளின் குற்றங்களால் பாதிக்கப்பட்ட மக்களைப் போல – விபரமற்று நடுவில் அகப்பட்டு அவஸ்தைப்படும் அப்பாவிகள் போல் – மாற்று இயக்கங்களில் 'ஜனநாயக' ஏற்பாட்டு முயற்சிகளால் பாதிக்கப்பட்ட புலி அல்லது அவ்வியக்க இளைஞர்கள் போல காலச் சுறாவளியில் அகப்பட்டுவிட்ட இன்னுமொரு வகை victimகளே.

இந்த வகையில் பரந்த உணர்வுடன் பிரச்சனைகளை நோக்க விழையும் நாம் அந்த அன்பரை மன்னிப்போமாக! அதேவேளை, அந்த அன்பரின் கருத்துகளை முறையாக நிராகரித்து கருத்துச் சுதந்திரம் – மனித மரியாதை (human dignity) – right to life என்ற மூன்று கோட்பாடுகளை முன்நிறுத்தி கடைசி மூச்சுவரை வேலை செய்வோமாக!

சுவடுகளின் சிறுபணி தொடரட்டும்!

இங்ஙனம்
ரா.பாலன்
பேர்லின், ஜேர்மனி.

இங்குள்ள தமிழ்மக்கள் எல்லோரும் சேர்ந்து எமது நாட்டுப் பிரச்சனையைத் தீர்க்க இங்குள்ள அரசு அரசியல் கட்சிகள், பொது ஸ்தாபனங்கள் ஆகியவற்றை ஏன் வற்புறுத்தக் கூடாது.

உ+ம்: நோர்வேஜிய அரசு இலங்கை அரசுக்கும் மக்களுக்கும் பொது ஸ்தாபனங்கள் ஊடாக உதவி செய்து வருகின்றது. கூடவே இங்குள்ள பொது ஸ்தாபனங்கள் (நோராட், றெட்குறொஸ், றெட்பானா) இவர்கள் எவ்வளவோ நிதிஉதவியைப் பல வகையில் இலங்கைக்குச் செய்கின்றன.

இலங்கை அரசுக்குப் போகும் பணமோ தேவையான உதவிகளுக்குப் பயன்படாமல் நாட்டை அழித்துக் குட்டிச் சுவராக்கும் திட்டங்களுக்கே பயன்படுகிறது. மற்றும் பொது ஸ்தாபனங்கள் செய்யும் சேவைகள் ஒரு நீண்டதூர நோக்கற்றவை உடனடித் தேவைகள் மட்டுமே பூர்த்தியாக்கப் படுகின்றன. அதுவும் நூறு வீதம் பூர்த்தி செய்யப்படவில்லை. இப்படியே செய்துகொண்டு போனால் எமது பிரச்சனைகள் தீர்க்கப்படப் போவதில்லை. உலக ரீதியில் நோர்வே அரசும் பொது ஸ்தாபனங்களும் இலங்கைக்கு உதவி செய்தன என்ற பெயர் மட்டுமே இருக்கும். இது தொடருமேயல்ல ஏதாவது ஆக்கபூர்வமான திட்டம் எதுவோ இருக்காது. அங்கு பிரச்சனை தீர்க்கப்படாத பட்சத்தில் அங்கிருந்து மக்கள் வெளியேறி வெளிநாடுகளில் வந்து அரசியல் தஞ்சம் கோருவது தவிர்க்க முடியாத ஒன்றேயாகும். (இதைப் போலவே மற்றைய நாடுகளும் மற்றைய நாடுகளில் இருப்போரும்) இங்கே நாம் என்னென்னவோ நிகழ்ச்சிகள் எல்லாம் செய்கின்றோம், கலை நிகழ்ச்சிகள், விளையாட்டுப் போட்டிகள் இன்னும் பல. ஆனால் எந்தவொரு நிகழ்ச்சியுமே இங்குள்ள நோர்வேஜிய மக்களுக்கோ, அரசுக்கோ எமது நாட்டுப் பிரச்சனை

www.tamilarangam.net



பற்றியோ அங்கு மக்கள் படும் துன்பம் பற்றியோ எடுத்துச் சொல்லப் படுவதில்லை. மொத்தத்தில் நாம் எமது நாட்டை, மக்களை, பிரச்சனையை மறந்தே வாழ்கின்றோம். அங்கு நடக்கும் பிரச்சனையை வைத்தே நாம் இங்கு வாழ்கின்றோம்.

இங்குள்ள தமிழ் மக்கள் ஒன்று சேர்ந்து இங்குள்ள அரசுக்கும், மக்களுக்கும், பொது ஸ்தாபனங்களுக்கும் எங்கள் பிரச்சனைகளை எடுத்துச் சொல்ல வேண்டும். இவர்கள் அனுப்புகின்ற உதவிகளை நிறுத்தி அங்கு பிரச்சனைக்கு உரியவர்களைப் பேச்சு வார்த்தைக்கு அழைத்து, நிரந்தரமாகப் பிரச்சனையை உலகளாவிய மத்தியஸ்த்துடன் தீர்த்து வைத்து எங்கள் எல்லோரையும் அங்கு அனுப்புங்கள். அப்படி அனுப்பினால் வெளிநாட்டவர்களால் உங்களுக்கு ஏற்படுகின்ற பிரச்சனைகள் தீரும்.

## என்னடா இது?

*கிழக்கு ஜேர்மனியும் மேற்கு ஜேர்மனியும் இணைந்து கடந்த மாதத்துடன் இரு வருடங்களாகின்றன. ஆனால் இந்த இணைவு கிழக்கில் தற்போது பெரும் அதிருப்தியையே தோற்றுவித்துள்ளது. காரணம் முன்பைவிட இணைவுக்குப் பின் கிழக்கில் வறுமை கோரத் தாண்டவம் ஆடுவதுதான். வேலையில்லாப் பிரச்சனையும் பெரியளவில் வளர்ந்துள்ளது. 'நாங்கள் பிரிந்தே இருக்க விரும்புகிறோம். அவர்கள் (மேற்கு ஜேர்மனியர்கள்) எங்களை ஏமாற்றுகிறார்கள்.' என கிழக்கு ஜேர்மனிய மக்கள் சிலர் பத்திரிகைகளிடம் கூறியுள்ளனர்.*

*- ஜோர்ஜ் -*

அதைவிட்டு இன்னும் 2 அல்லது 3 வருடமோ பிரச்சனை தொடர்ந்தால் இங்கு பிரஜாவுரிமை கிடைத்து விடும் என்று எண்ணிக் கொண்டு இருப்போமானால் இலங்கையில் தமிழ் மக்கள் இருக்கின்ற அடையாளமே இல்லாமல் போய்விடும். அங்கே தினம்தினம் சாகின்ற மக்களின் அடிப்படையில் இவர்கள் இங்கே சொகுசாக வாழ நினைக்கின்றார்கள். இந்தக் காலகட்டத்தில் நாம் இவைகளைச் செய்யாமல் விட்டு விடுவோமானால் இங்கு வளர்கின்ற நமது சந்ததியினர் அதைப்பற்றி எண்ணவே மாட்டார்கள். இந்தக் காலகட்டத்தில் வாழ்கின்ற நாமே மறந்துபோனோம். அவர்கள் மறப்பதில் ஆச்சரியம் என்ன? அவர்களுக்கு இலங்கை என்பதைப் பாடப் புத்தகத்தில் தான் படிப்பிக்க வேண்டும்.

இங்கே எத்தனையோ குழந்தைகள் தமிழைப் படிப்பதை விட்டு விட்டார்கள். அதில் பெற்றோர் கூட அக்கறையில்லை. தமது தாய்மொழியைப் படிப்பது ஏதோ அந்நிய மொழியைப் படிப்பது மாதிரி? நாட்டில் எல்லோரும் பேசினார்கள், நாம் சிங்களம் படிக்க மாட்டோம். நமது மொழி தமிழ், தமிழ்மட்டும் தான் படிப்போம் என்று. ஆனால் இங்கே குழந்தைகளுடன் வீடுகளில் தமிழைக் கதைப்பதே ஏதோ தவறு செய்கிறமாதிரி நினைக்கின்றார்கள். பிள்ளைகளை ஏன் குறை கூறுவான் சில கணவன் மனைவியரே தமிழில் கதைக்கின்றார்கள் இல்லை. நினைக்க சிரிப்பும் வேதனையுமாக இருக்கின்றது. ஆனால் வெளியே கதைக்கும் போது மட்டும் தமிழ், தமிழீழம் என்றெல்லாம் கதைப்பார்கள். ஊருக்கடி உபதேசம் உனக்கில்லையடி என்ற மாதிரி இருக்கின்றது. இறுதியில் இந்தப் பழமொழியைச் சொல்ல தமிழ் என்ற ஊர் இருக்குமோ தெரியாது.

ஆனால் ஒன்று நிச்சயம் இங்கே நோர்வேஜியப் பிரஜாவுரிமை கிடைத்தாலும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நோர்வீஜிய மக்களின் காதலன் எனப்படும் 36 சென்றிமீற்றர் உயரமுடைய 'சினெத்தாகன்' சிலை ஆறு இலட்சம் குரோணர்களுக்கு விலை போயுள்ளது. இது நோர்வேயின் பிரபல கலைஞர் குஸ்தவ் விஜிலண்டின் உன்னத படைப்பாகும்.

* சித்திரகுப்தன் *

அவர்கள் பார்வையில் நாம் கறுப்பரே கறுப்பர் தான். இதில் எந்தவித மாற்றமும் இல்லை இங்கே பல வெளிநாட்டவர் இருக்கின்றார்கள். அவர்களுள் நாம்தான் சற்று வித்தியாசப் பட்டிருக்கிறோம். அதாவது பேச்சுக்களில் ஒன்று செயலில் ஒன்று. இன்று உ + ம் ஆக பாகிஸ்தானியரை எடுத்துக் கொண்டால் பலகாலமாக இங்கு இருக்கின்றார்கள். இங்கே பிரஜாவுரிமை பெற்று பல வருடங்களாகவே இருக்கின்றார்கள். ஆனால் அவர்களது எந்தப் பிள்ளைகளாவது பாகிஸ்தானிய மொழியை கதைக்கத் தெரியாதவர்களாக இருக்க மாட்டார்கள். அனால் வெளிநாட்டில் வாழ்கின்ற பல தமிழ்ப் பிள்ளைகள் படிக்கத் தெரியாவிட்டாலும் பரவாயில்லை பேசத் தெரியாது இருக்கின்றனர் என்பதை நினைக்கும் போது வெட்கித் தலைகுனியவேண்டியுள்ளது. ஆகவே இங்குள்ள தமிழ்மக்கள் வெறும் வெட்டிப் பேச்சுப் பேசாமல் நமது நாட்டுப் பிரச்சனைகளைத் தீர்த்து அங்கே நடக்கின்ற உயிர்ப்பலிகளையும் நமது சொத்துக்களின் அழிவுகளையும் நிறுத்த இங்கே இருக்கின்ற நாங்கள் ஏதாவது ஆக்கபூர்வமான வேலைத்திட்டங்களை மேற்கொள்வதே எமது தமிழ் மக்களுக்கும் வருங்காலச் சிறார்களுக்கும் நாம் செய்யக் கூடிய கடமையாக இருக்கும்.

சிந்திப்போமாக! செயற்படுவோமாக!

## கொடுமை

'சர்வதேச பயங்கரவாத'த்திற்கு எதிராக சர்வதேச நாடுகளின் சார்பில் சர்வதேச பயங்கரவாதத்தில் ஈடுபடும் அமெரிக்கா, ஜனநாயகத்தின் பாதுகாவலனாகத் தன்னைக் காண்பித்து வருகிறது. ஆனால் அங்குள்ள மக்கள் முக்கியமாகப் பெண்கள் அனுபவிக்கும் 'ஜனநாயக' உரிமைகளைப் பின்வரும் புள்ளிவிபரம் எடுத்துக் காட்டுகிறது.

அமெரிக்காவில் தினமும் 1900பெண்கள் பாலியல் வன்முறைகளுக்கு உள்ளாகின்றனர். இது நிமிடத்திற்கு 1.3பெண்கள் என்ற ரீதியில் உள்ளது. இதன்படி வருடத்திற்கு 6,84,000 பெண்கள் பாலியல் வன்முறைக்கு உள்ளாகின்றனர். சராசரியாக எட்டுப் பெண்களுக்கு ஒருவர் இவ்வாறு ஆண்களின் வெறிக்கு இரையாகிறார்கள்.

இமையான்

## சிங்கப்பூரிலும் இலங்கையிலும்

ஆட்கடத்தலில் ஈடுபட்டார்கள் என்ற சந்தேகத்தில் சிங்கப்பூரில் பெருந்தொகை வெளிநாட்டவர்களும் உள்நாட்டவர்களும் கைதாகியுள்ளனர். சிங்கப்பூரில் கைதான 140பேரில் 42பேர் இலங்கையர்கள், 29பேர் சீனர்கள், ஏனையோர் சிங்கப்பூரைச் சேர்ந்தவர்கள்.

இந்தக் கைதுகளின் தொடர்ச்சியாக இலங்கையிலும் ஐந்து பயண முகவர்களைப் பொலிசார் கைது செய்துள்ளனர். இவர்கள் பிணையில் விடுவிக்கப் பட்டுள்ளனர். இவர்கள், பெருந்தொகையில் இலங்கையிலிருந்தும் ஏனைய ஆசிய நாடுகளில் இருந்தும் பலரை ஐரோப்பாவிற்குள் கடத்தியுள்ளனர்.

– ஆதித்தன் –

www.tamilarangam.net

நட்புடன் சுவடுகள் ஆசிரியர் குழுவிற்கு,
வணக்கம்.

சுவடுகள் 5ஆம் ஆண்டில் தனது தடங்களைப் பதிய வைக்கிறது என்பதில் மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் பகிர்ந்து கொள்வோம். இந்த நான்கு ஆண்டுகாலப் பகுதியையும் திரும்பிப் பார்த்து, தவறுகளைக் களைந்து இன்னமும் முன்னேற வேண்டும் என வாழ்த்துகிறோம்.

'மனிதம்'
சுவிட்சர்லாந்து

சுவடுகளுக்கு,

'சுவடுகள்' கிடைத்தன. நன்றி. சுவடுகள் மலர் வெளியிடுவது குறித்து மிக மகிழ்ச்சி. இலங்கையில் இருந்து வெளியாகும் இலக்கியப் படைப்புகளைவிட புலம்பெயர் தமிழர் மத்தியில் இருந்து சமீபகாலமாக வெளியாகும் படைப்புகள் காத்திரமாக உள்ளன. குறிப்பாகக் கவிதைகளும், சஞ்சிகைகளும். சுவடுகள் இதற்கு ஆற்றும் பணி முக்கியமானது. இது உண்மை; வெறும் புகழ்ச்சியல்ல. எனவே முடியுமானவரை இதனை நீடிக்க முயலுங்கள்

சித்திரலேகா,
இலங்கை

அன்பின் சுவடுகளுக்கு,

தங்கள் கடிதமும் 'போட்டோ'ப் பிரதிகளும் கிடைத்தன.

'தமிழின் முதல் அச்சு', என்ற கட்டுரைத் தொடர் மிகவும் கவனமாக ஆராயவேண்டிய விஷயம். எனது கிராமத்தில் இருந்து 'கொப்பன்ஹேகன்' நூல்நிலையம் வெகுதூரத்தில் இருப்பதால் ஆய்வு வேலைகளைச் செய்ய முடியாமல் உள்ளது. எனினும் முயற்சிகள் தளரவில்லை. ஆனால் காலதாமதம் தவிர்க்க முடியாதது.

'மண்மனம்' இரண்டாம் பாகம் எழுதிக் கொண்டிருக்கிறேன், விரைவில் வரும்.

க.ஆதவன்,
டென்மார்க்

ஆசிரியர்
சுவடுகள்
நோர்வே.

வெறும் உணர்வுகளால் தமிழ் வளராது. உங்களைப் போன்றவர்களின் செயல்பாடுகள் அவசியம். நோர்வேயின் படைப்புகளைத்

## நாற்சந்தி

www.tamilarangam.net

தமிழில் அறிமுகம் செய்யலாமே. காலத்தின் தேவைகூட.

அர்த்தமற்ற வெறும் நையாண்டிகளுக்குப் பக்கத்தை ஒதுக்குவதைவிடப் பயனுள்ளதாய்ப் படைப்பது நல்லது. எமது இன்றைய சூழலுக்குத் தேவை நிறையவே உள்ளன. எனவே தயவுசெய்து பிரசுரத்திற்குத் தேர்வு செய்வதைச் சற்றுக் கடுமையாக்குங்கள். ஒவ்வொரு பக்கமும் இழக்க முடியாத செல்வங்கள் என்பதை நினைவுகூருங்கள்.

து.குலசிங்கம்
இலங்கை

நட்புடன் சுவடுகள் ஆசிரியர் குழுவுக்கு,

சுவடுகள் எத்துறை சார்ந்த படைப்புகளுக்குக் களம் அமைத்தாலும் கூட அதன் கூர்மையானது, அரசியலை நோக்கியே, குறிப்பாக ஈழ நிகழ்கள அரசியல் சார்ந்தே உள்ளன என்பது கண்கூடு. அநேகமான புலம்பெயர்ந்தோர் வெளியிடும் சஞ்சிகைகளில் ஒற்றுமையான ஒரு அம்சம் இலங்கை அரசியல். தவிர்க்கவியலாததும்கூட. வேற்றுமை பக்கச் சார்பு. கூடுதலாக இலங்கைத் தமிழ் மக்களின் கண்ணோட்டத்திலேயே பார்ப்பது. பல வேளைகளில் நான் சிந்திப்பதுண்டு நியாயத்தை மறந்து, மறைத்து தமிழ் மக்களின் மத்தியில் ஒரு இனவெழுச்சியைத் தூண்டவே இவர்கள் எத்தனிக்கிறார்களோ என. சுவடுகளில் வெளியாகும் ஆக்கங்களும் இதற்கு விதிவிலக்கல்ல. உதாரணம் சுவடுகள் 37இல் வெளியான வ.ஐ.ச.ஜெயபாலனின் 'கொப்பேகடுவவின் மரணமும் இலங்கையின் இனமோதல்களும்'.

எங்கள் போராட்டம் 'சிங்கள மக்களுக்கு எதிரானதல்ல. சிங்களப் பாசிச அரசுக்கே எதிரானது' எனப் புலிகளும் 'இராணுவம் புனித யுத்தத்தை மேற்கொண்டுள்ளது. தமிழ் மக்களுக்கு எதிராகவல்ல. பாசிசப் புலிகளுக்கு எதிராகவே' என அரசும் கூறி இருவரின் கருத்தைக் கேட்பவர்களையும் 'பாசிசம் என்றால் அது என்ன?' என்ற சிந்தனைக்குள் தள்ளி தலைமுடியை இழுக்கவைத்துக் கொண்டிருக்கின்றன. இருவரினதும் (அரசு, பெரிசு - பெரிசு என இப்போது தமிழ் மக்களால் அறியப்படுவது தமிழீழ விடுதலைப் புலிகள் என்பதைத் தாங்கள் அறிந்திருப்பீர்கள் என நம்புகிறேன்) நோக்கம் தமிழ் மக்களை அழித்தொழிப்பதுவே போல் எனக்குத் தோன்றுகிறது. எனவே இந்நிலையில் தாங்களும் இனத்துவேஷத்துக்கு ஆட்படாமல் எங்கள் போராட்டத்தை, எங்களை ஒடுக்கும் சக்திகளுக்கு எதிராக வடிவமைக்க வேண்டியது அவசியம். அது

சிந்திக்கும் திறனுள்ள ஒவ்வொரு தமிழனுக்கும் எதிரே உள்ள கடமை என நான் எண்ணுகிறேன்.

..................

சுவடுகள் 36இல் தொடங்கியுள்ள 'துருவத்துச்சி'யின் 'எப்பொருள் யார்வாய்க் கேட்பினும்' பல விடயங்களை எடுத்தியம்பிச் சிந்திக்கத் தூண்டியது. கி.பி.அரவிந்தன் எழுதிய 'ஒரு மரணம் தந்த சலனம்' ஒரு சிறந்த பத்திரிகையாளனின் (கால ஓட்டம் கோவை மகேசனின் சுயத்தை இழக்க வைத்தாலும்) மறைவை வெளியிட்டது. அதனை வெளியிட்டமையால் உங்கள் நடுநிலையும் வெளித்தெரிந்தது. 'வேதாந்தி'யின் 'வேதாளம் கேட்ட வில்லங்கக் கேள்வி' வெளிநாட்டில் வாழும் தமிழர்களின் மனக்கதவைத் தட்டித் திறக்குமா? ஜே.ஆர். எழுதிய 'Men and Memories' பல நினைவலைகளை எழுப்பி நினைவில் பின்நோக்கிச் செல்லவேண்டிய அவசியத்தை வலியுறுத்தியது.


....

யா.ம.
பேராதனை,
1.11.92

www.tamilarangam.net

M.G.R: The Man and the Myth

எம்.ஜி.ஆர்: மனிதனும் மாயையும்



# நூல் அறிமுகம்:

● வீணா ●

## MGR: THE MAN AND THE MYTH

K. MOHANDAS

25 ஆண்டுகளுக்குத் தமிழ்த் திரையுலகின் கதாநாயகனாகவும், பத்து வருடங்களுக்கு மேலாக தமிழ்நாட்டின் முதல்வராகவும் இருந்த எம்.ஜி.ஆருடன் இந்த நூலாசிரியர், தான் கண்ட அனுபவங்களையும் மற்றும் ஏராளமான விடயங்களையும் இந்த நூல்வழியாக கூறியுள்ளார். உதாரணத்துக்குச் சொல்லப் போனால், தமிழீழ விடுதலை இயக்கக் குழுக்களின் செயல்பாடுகள், முக்கியமாக விடுதலைப் புலிகளில் எம்.ஜி.ஆருக்கு இருந்த கவர்ச்சி, விடுதலை இயக்கங்களுடன் நூலாசிரியர் மோகன்தாஸ் தமிழ்நாட்டு

நூலின் தொடக்கம், எம்.ஜி.ஆர் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்து வெளியேற்றப் பட்டமை, தொடர்ந்து அவர் அனைத்திந்திய அ.தி.மு.க.வை நிறுவி 1977இல் தி.மு.க.வைத் தோற்கடித்து தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பதவியேற்றதை விபரிக்கிறது. எம்.ஜி.ஆரின் தனிப்பட்ட வாழ்க்கையின் ஒருசில இரகசியங்களையும் ஆசிரியர் குறிப்பிடத் தவறவில்லை. தமிழ்நாட்டில் உள்ள 'சின்ன வீடு' (விபரிக்கத் தேவையில்லை, தமிழ்ப் படங்களில் வரும் அதே சின்னவீடுதான்) பாரம்பரியத்தில் எம்.ஜி.ஆர் பலரை வைத்திருந்தார் எனக் குறிப்பிடுகிறார்.

இருப்பார்கள். இதிலும் ஒரே ஒருவர்தான் (E) இரண்டு தடவைகள் அந்த உரிமையைப் பெற்றாராம். (யாரென்பது உங்களுக்குத் தெரியும்) Eயைத் தவிர மற்ற நால்வரும் ஜானகியை அக்கா என்றுதான் அழைப்பார்களாம்.

எம்ஜிஆர் தான் தனது அரசியல் வாழ்வில் முரண்பட்ட விதத்தில் சிந்திப்பதையோ, பேசுவதையோ வெரிய தவறாகக் கருதவில்லை. குறிப்பாகச் சொல்வதாயின், இந்திய இலங்கை ஒப்பந்தம் தொடர்பாக அவர் திருப்தியாயிருக்கவில்லை. முக்கியமாக இந்த ஒப்பந்தத்தை விடுதலைப் புலிகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

உளவுத்துறையின் அதியுயர் அதிகாரியாக இருந்தபோது நடந்துகொண்ட முறை, 1983 இனக் கலவரத்துக்குப் பின்னால் இந்தியா, இலங்கையின் இனப்பிரச்சனையில் நடந்துகொண்ட விதம் என ஏராளம் விஷயங்களை இந்த நூல் உள்ளடக்கியுள்ளது.

181 பக்கங்களுடன் பெங்களூர் **Panther Publishers** என்ற நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ள இந்த நூலின் விலை 195 இந்திய ரூபாய்கள்.

இந்த நூலாசிரியர் பொலிஸ் சுப்பிரண்டண்டாக மதுரையில் பதவியில் இருந்தபோது மாட்டுக்கார வேலன் படப்பிடிப்பு வைகை நதியோரத்தில் நடந்துகொண்டிருந்தது. அப்போது எம்.ஜி.ஆரை நூலாசிரியர் சந்தித்தாராம். இருவரும் கேரளாவைச் சேர்ந்தவர்கள். நாம் யாரைக் கண்டாலும் 'எந்த ஊர்' என்று கேட்பது போல எம்.ஜி.ஆரும் மோகன்தாசை முதலில் கண்டபோது 'எந்து தரலெட்டுப் பேரு?' (உங்கள் குடும்பப் பெயர் என்ன?) என்ற கேட்டதுடன் தமது தொடர்பு ஆரம்பித்ததாக மோகன்தாஸ் குறிப்பிடுகிறார். கேரளப் பெயர்கள் குடும்பப் பெயருடன் தொடங்குவன. எம்.ஜி.ஆர் என்பது மருதூர் **(M)** கோபாலமேனன் **(G)** ராமச்சந்திரன் என்பதைப் பலரும் அறிந்திருத்தல் கூடும்.

நிரந்தரமான மனைவியாக ஜானகி இருந்தது யாவரும் அறிந்ததே. ஆனால் சின்னவீடு விடயத்தில் ஐவர் இருந்தனராம். இவர்களை **A,B,C,D,E** எனக் குறிப்பிடலாம். ஆனால் எந்தக் காலகட்டத்திலும் இருவர் ஒரே சமயத்தில் சின்ன வீட்டு உரிமை கொண்டாடியதில்லை. ஒருவர் மாறி ஒருவரே சின்ன வீட்டு உரிமையில்



ஏற்க மறுத்தமையும் இதற்குக் காரணம். ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் ராஜீவ் டெல்லி செல்லும் வழியில், சென்னை மெரீனா பீச்சில் ஒரு பிரமாண்டமான கூட்டம் ஒழுங்கு செய்யப் பட்டிருந்தது. உடல் நலிவடைந்த நிலையில் அமெரிக்கா செல்லத் தயாராகிக் கொண்டிருந்தார் எம்ஜிஆர். அவரை வழியனுப்ப ஏராளம் மக்கள் விமான நிலையம் சென்றிருந்தனர். திடீரென ராஜீவிடம் இருந்து தொலைபேசி அழைப்பு; பயணத்தைப் பின்போட்டுவிட்டுக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு. தனது பயணத்தை உடன் ரத்துச் செய்த எம்ஜிஆர் மெரீனா பீச் சென்று எல்லோரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தும் அளவுக்கு "ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளாதவர்கள் துரோகிகள்" என்றார். மக்களிடமிருந்து பலத்த கரகோஷம் (வழமைபோல) எழுந்தது. எம்ஜிஆர் எது செய்தாலும் சரியானதையே செய்வார் என்ற மாயை மக்களிடம் இருந்தது எனப் பல தடவை நூலாசிரியர் குறிப்பிடுகிறார்.

இலங்கை இந்திய ஒப்பந்தம் பற்றிய தனது கருத்தையும் ஆசிரியர் கூறத் தவறவில்லை.

1986இல் பெங்களூரில் நிகழ்ந்த சார்க் மாநாடு நிகழ்ந்தபோது ஜேஆரின் பாதுகாப்புக் கருதி, விடுதலை இயக்கங்களிடம் இருந்து **'Operation**

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

Daybreak' 'Operation Tiger' என்ற பெயரில் 40கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்களைக் கைப்பற்றியதாகப் (இன்றைய பெறுமதி 120கோடி) பெருமையடிக்கும் ஆசிரியர் இறுதியில் கைப்பற்றிய ஆயுதங்கள் அனைத்தையும் திருப்பிக் கொடுக்க வேண்டியிருந்த பரிதாப நிலையையும் குறிப்பிடுகிறார்.

உள்நாட்டு வெளிநாட்டு விவகாரங்களில் இந்தியாவின் பல்வேறு உளவுத் துறைகள் (RAW, IB, CBI, Q branch) இயங்கின. தமது சுயமான முடிவில் தமது நடவடிக்கைகளை மேற்கொண்டன இந்த அமைப்புகள். இதனால் ஏற்பட்ட சில குழப்பங்களையும் ஆசிரியர் குறிப்பிடுகிறார். இலங்கை விவகாரத்தில் றோ செயல்பட்ட விதம் பற்றி ஆசிரியருக்கு உடன்பாடு இருக்கவில்லை. இந்த முரண்பாடுகளை நூலில் பல இடங்களில் காணக் கூடியதாக உள்ளது.

மொத்தமாகப் பார்ப்பின் அண்மைக்கால தமிழ்நாட்டு அரசியல், இலங்கைப் பிரச்சனையில் இந்தியாவின் ஈடுபாடு போன்றன நூலில் முக்கிய இடம்பெறுகின்றன.

எம்ஜிஆரின் மன உறுதியும் குறிப்பிட்டுச் சொல்லப் படுகிறது. தேர்ச்சிபெற்ற வைத்தியர்களே உயிர்பிழைக்க மாட்டார் என்ற முடிவுக்கு வந்தபின்னும் பலகாலம் வாழ்ந்தமை அவரது மன உறுதியாலும் வைராக்கியத்தாலுமே என நூலாசிரியர் கூறுகிறார்.

அதிமுக ஆரம்பித்த நாள்முதல் எம்ஜிஆர்தான் அதிமுக, அதிமுகதான் எம்ஜிஆர் என்று இருந்தது. எனவே எம்ஜிஆர் No2 என்று யாரையும் வைத்திருக்கவில்லை. ஜெயலலிதா, திரையுலக உறவுக்குப் பின் மீண்டும் 1981இல் எம்ஜிஆருடன் உறவை ஏற்படுத்திய போது, எம்ஜிஆரால் கொள்கை பரப்புச் செயலாளராக நியமிக்கப் பட்டார். அதிக மக்களைக் கவரும் சக்தியாக ஜெயலலிதா விளங்கினார். சில காலத்தின் பின் கட்சியின் எல்லாப் பதவிகளில் இருந்தும் எம்ஜிஆரால் நீக்கப்பட்ட ஜெயலலிதா இன்று தானே அதிமுக என்ற மாயையைத் தோற்றுவித்துள்ளார்.

இவ்வாறான பல தகவல்களை இந்த நூல் தருகிறது. இந்நூலில் காணப்படும் பல பகுதிகளை இந்தியாவில் ஃபுறொண்ட்லைன், த வீக் என்பனவும், இலங்கையில் ஆங்கிலப் பத்திரிகைகளும் (விடுதலை இயக்கங்கள் இந்தியாவில் ஆயுதப் பயிற்சி பெற்றது பற்றி) முக்கியம் கொடுத்துப் பிரசுரிக்கத் தவறவில்லை.

(நூலை வெளியிட்டவர்கள்: Panther Publishers, 29, III Cross, 16th Main, IV Bolck, Bangalore 560034)

## பத்திரிகையாளருக்கு இந்தக் கதி


பத்திரிகையாளராகத் தொழில் புரிவது என்பது இலகுவான காரியமல்ல. பல கஷ்டமான பகுதிகளுக்கு சென்று சுவையான செய்திகள் சேர்த்துத் தருபவர்கள் பத்திரிகையாளர்கள். சில நேரங்களில் மிகவும் ஆபத்தானது. இது நிஜமாகிப் போனது நோர்வீஜிய பத்திரிகையாளனது வாழ்க்கையில். செப்டெம்பர் மாதம் கடைசி வாரம் நோர்வேயைச் சேர்ந்த ஹெல்க கும்மல்வோல் என்பவர் சூடான் நாட்டின் மோசமான உணவுப்பஞ்சம் பற்றி செய்திசேகரிக்கச் சென்ற போதே இவ் அவல நிலை ஏற்பட்டது. தென்சூடான் விடுதலை அமைப்பின் பிரிவு ஒன்று உகண்டா எல்லையில் வைத்து துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இவரோடு இன்னொரு உதவியாளரும் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். இருபத்தெட்டு வயதுடைய இவர் சயசெய்தி சேகரிப்பாளரும் புகைப்படப் பிடிப்பாளரும் ஆவார்.

* மதியுகன் *

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# எங்கெங்கு காணினும்.........


இங்கிருந்து பார்க்கும்போது ஒஸ்லோ நகரின் ஒரு பகுதி அழகிய உயர்ந்த கட்டடங்களாகவும், பரபரப்புடன் அவற்றைச் சுற்றி ஓடிக்கொண்டிருக்கும் வாகனங்களும் ஒரு அழகிய ஓவியம் போலத் தோன்றியது. புகைத்தலைத் தடைசெய்திருந்த அந்த மண்டபத்தின் வெளியே ஓரமாக நின்று நெஞ்சுக்குள்ளே பரவும் புகைச்சுவையையும் சுற்றிவரத் தெரியும் அழகையும் ஒருசேர ரசித்துக் கொண்டிருந்தான் செல்வம்.

பரபரப்பான நகருக்கு அருகிலேயே இருந்தாலும், அதன் தொடர்பே இல்லாததுபோல அமைதியுடன் அமைந்திருந்தது அந்தக் கட்டிடம். சமய நிறுவனமொன்றுக்குச் சொந்தமான கலை கலாசார நிலையம் அது. பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்த அதன் ஒரு பாகமான மண்டபமொன்றினுள் இன்று நிரஞ்சனின் திருமண வைபவம் நடந்து கொண்டிருந்தது.

செல்வத்தின் மிக நெருங்கிய, ஏன் ஒரேயொரு நண்பன் என்று குறிப்பிடக்கூடியவன் நிரஞ்சன். சிகரெட் மூலம் ஆரம்பமான நட்பு.

இவனுக்கு இப்போதும் ஞாபகத்துக்கு வந்தது. ஆறு வருடங்களுக்கு முன்பு அரசியல் தஞ்சம் கோரிவந்த சம்பவம் எப்போதும் மறக்கக் கூடியதல்லவே!

● செந்தில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பல நாட்டவர்களையும் கொண்டிருந்த அந்த அகதிகள் முகாமில் இவர்கள் எட்டுப்பேர் தமிழர்கள். ஒரே சமயத்தில் வந்திருந்தாலும் இவர்களுக்குள்ளான அறிமுகங்கள் அங்கேதான் நடந்தேறின. புதிய சூழல், புதிய மனிதர்கள், ஆங்கிலப் படங்களில் மட்டும் இதுவரை கண்டிருந்த உணவு வகைகள் அனைத்துமாக எல்லோருக்குமே ஒருவித பிரமிப்பே உண்டாக்கியிருந்தது என்றால் மிகையில்லை. உற்றார் உறவினர்களைப் பிரிந்து அந்நிய நாடொன்றில் சந்தித்த எல்லோரிடமுமே தம்மவர்களைப் பற்றிய ஏக்கம் நிறைந்திருந்தது. இலங்கைப் பொருட்களின் மீதெல்லாம் புதுவிதமான பாசம் பிறந்தது.

அந்தச் சூழ்நிலையில் செல்வம் இலங்கையில் இருந்து கொண்டுவந்திருந்த 'பிறிஸ்டல்' சிகரெட்டுகளின்மேல், புகைக்கும் பழக்கம் உள்ளவர்களுக்கு ஆசை ஏற்பட்டது வியப்புக்குரியதல்ல. செல்வம் அவற்றை மற்றவர்களுடன் பகிர்ந்துகொண்டான். இவன் அதிகமான சிகரெட்டுகளை நிரஞ்சனோடுதான் புகைத்துத் தீர்த்தான். அப்போது ஏற்பட்ட பழக்கந்தான் இருவரும் பெரும்பாலும் ஒருவரையொருவர் புரிந்துகொண்டு நட்பை உருவாக்கிக் கொள்ளக் காரணமாயிருந்தது.

நோர்வேயில் தங்குவதற்கு அனுமதி கிடைத்தபின் வெளிஉலகில் அறிமுகமானவர்கள் எவருமில்லாமையால் இவர்கள் நால்வர் ஒன்றாகத் தங்கியிருந்து நாளடைவில் வெவ்வேறு காரணங்களுக்காகப் பிரிந்து சென்றுவிட்டாலும், நிரஞ்சனும் செல்வமும் இதுவரை ஒரே வீட்டிலேயே வசித்துக் கொண்டிருக்கின்றனர்.

அவ்வப்போது இவர்களுக்குள் மனஸ்தாபங்களும், வாக்குவாதங்களும் உருவாகியிருந்தாலும், அவைகள் இவர்கள் மேலும் ஒருவரை ஒருவர் மென்மேலும் புரிந்துகொண்டு நெருங்கிக் கொள்ளவே காரணமாக இருந்திருக்கின்றன.

விரலிடுக்குகளில் 'சட்'டென்று சுட்டுவிட்ட சிகரெட் செல்வத்தின் அலைமோதும் நினைவுகளை வெட்டியது.

நேரத்தைக் கவனித்துக்கொண்ட அவன், இன்னொரு சிகரெட்டை உருவிப் பற்றவைத்துக் கொண்டான். விழா ஏற்பாடுகளில் இவன் முக்கியமாகப் பங்கெடுத்துக் கொண்டிருந்ததால் உள்ளே சென்றால் நினைத்தபோது வெளியே வர முடியாதென்பதை அவன் உணர்ந்திருந்தான்.

தன்னைப்போலவே நாளொன்றுக்குப் பதினைந்துக்குமேல் சிகரெட் புகைக்கும் வழக்கமுள்ள நிரஞ்சன் திடீரென்று ஓரிரு மாதங்களுக்கு முன்பு புகைப்பதையே நிறுத்திவிட்டதை எண்ணி மனதுள் வியந்துகொண்டான். ஆனால் அதற்குப் பின்னால் இருந்த காரணம் நந்தினியுடன் பழக ஆரம்பித்ததா என்பதுதான் இவனுக்கு இன்னும் கேள்விக் குறியாகவே இருந்தது.

நிரஞ்சனுக்கு அறிமுகமான குடும்பமொன்றைச் சேர்ந்த நந்தினி அண்மையில்தான் நோர்வேக்கு வந்திருந்தாள். அவர்கள் இருவருக்குள்ளும் சாதாரண அறிமுகத்துடன் ஆரம்பித்த பழக்கம், விரைவிலேயே காதலாக மாறி இப்போது திருமண விழா நடந்து கொண்டிருந்தது.

நந்தினியைப் போல நெருங்கிய உறவினர்கள் யாரும் இந்நாட்டில் நிரஞ்சனுக்கு இல்லை. அவனது ஒரேயொரு சகோதரன் முகுந்தன் சுவிற்சர்லாந்தில் இருந்து இரண்டு நாட்களுக்கு முன்புதான் மனைவியுடன் வந்திருந்தான். எனவே மணமகன் சம்பந்தப்பட்ட கல்யாண ஏற்பாடுகள் எல்லாவற்றிலும் நிரஞ்சனுடைய வேண்டுகோளின்படி செல்வத்தின் பங்கே முக்கியமானதாக இருந்தது.

"என்னடாப்பா, மாப்பிள்ளைக்கு அடுத்த முக்கியமான ஆள் நீ. இங்கை ஏன்

www.tamilarangam.net

வெளியிலை நிக்கிறாய்?"

இவனைக் கண்ட நண்பனொருவன் சிரித்துக் கொண்டே நெருங்கி இவனிடமிருந்து உயிரிழக்கும் தருவாயிலிருந்த சிகரெட்டை வெகு சுவாதீனத்துடன்வாங்கி உறுஞ்சி விட்டு எறிந்தான். விசேடமான அந்த இறுதிப் புகையின்பத்தை அனுபவித்த நிறைவு அவனிடம் தெரிந்தது.

"வா உள்ளை போவம்!" பதிலை எதிர்பாராமல் நடந்தவனைத் தொடர்ந்தான்.

அருகிலிருந்த விளையாட்டரங்கத்தை நோக்கி நடந்து கொண்டிருந்த ஒரு சில நோர்வீஜியர்களைத் தவிர தமிழ் முகங்களின் நடமாட்டமே ஆங்காங்கே தெரிந்தது.

நான்குபேர்களாக அமரக்கூடிய ஒழுங்குடனான மேஜை,நாற்காலிகளுடன் மண்டபத்தினுள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. மணமக்கள் அமருவதற்கான அழகான பந்தல் இவற்றிற்கு நடுவே அமைக்கப்பட்டு ஆங்காங்கே கவர்ச்சியான சோபா ஒன்று இடப்பட்டிருந்தது.

உள்ளே வருபவர்களை வரவேற்குமுகமாக முக்கிய வாசலையொட்டி ஒரு மேஜை மீது பன்னீர், சந்தனம் என்பன வைக்கப்பட்டு மேலே ஆங்கிலத்தில் நல்வரவு கூறும் வாசகங்கள் தொங்குமுகமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. அதனருகில் ஒருவனை விருந்தினர்களை உபசரிப்பதற்காக அனுப்பி வைத்துவிட்டுத் தான் அங்கே நின்று கொண்டான் செல்வம்.

அங்கே இதுவரை ஒலித்துக்கொண்டிருந்த இசை நாடா நிறுத்தப்பட, ஒரு இசைக்குழுவினர் தமது மிகக் குறைந்த எண்ணிக்கையிலான இசைக் கருவிகளுடன் சௌந்தரராஜன் முதல் மனோ வரையிலான சகல பாடகர்களின் குரலிலும்பாட முயன்று கொண்டிருந்தது.

ஐரோப்பியத்தனமான உடையணிந்த ஆண்களும்,தமிழ்ப்பாங்குடன் உடுத்திருந்த பெண்களுமாக மண்டபம் ஏறத்தாள நிறைந்து கொண்டிருந்தது.

தமக்குப் பரிமாறப்பட்டுக் கொண்டிருந்த சிற்றுண்டி வகைகளைச் சுவைத்தபடி பெண்கள் கூட்டம் தாங்கள் அண்மையில் சிங்கப்பூரில் வாங்கிய 22 கரட் நகைகளின் டிசைன்களைப் பற்றி விவாதித்துக் கொண்டிருந்தது.

ஈழத்தில் 'பெடிகள்' சுட்டு விழுத்திய 'ஹெலி' பற்றியும் கோடை விடுமுறையில் அரசுக்கு வரிகட்டாமல் தாம் செய்த வேலைகளைப் பற்றியும் அண்கள் கூட்டத்திடையே விபரங்கள் பரிமாறப் பட்டுக்கொண்டிருந்தன.

வேற்று ாரிலிருந்து வந்திருந்த அறிமுகமானவர்கள் அடிக்கடி செல்வத்தினருகில் வந்து நின்று அளவளாவிச் சென்றனர். எனினும் நேரம் அவனைப் பொறுத்தவரை சுவாரசியமற்ற

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வேண்டுகோள்!

அரசாங்கத்தின் திட்டமிட்ட ஒதுக்கற் கொள்கைகளினால் பாதிக்கப்பட்ட யாழ் பல்கலைக்கழகத்தில் பௌதீக பீடத்திற்கு மிக அவசியமாகத் தேவைப்படும் கணனிகளைப் பெற சர்வதேச ரீதியில் பரந்து வாழும் தமிழ் மக்களிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது. இந்தக் கணனிகளை வாங்க ஏறத்தாழ 25000 நோர்வேஜியக் குறோணர் தேவைப்படுகின்றது. இத்தொகையைத் திரட்டுவதில் ஆர்வமுள்ளவர்கள் யாழ் பல்கலைக்கழகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப் படுகிறீர்கள்.

– ஆதித்தன் –

www.tamilarangam.net

நிமிடங்களாக ஊர்ந்து செல்வதாகவேபட்டது. ஆங்காங்கு பார்வையைச் சுழல விட்டபோது நிரஞ்சனின் மூத்த சகோதரன் முகுந்தன், மணப்பெண்ணின் நெருங்கிய உறவினர் இருவர் இவன் மீது கவனத்தைச் செலுத்தியபடி வேறொருவருடன் ஏதோ பேசிக் கொண்டிருப்பது கண்களிற்பட்டது.

அந்த நபர் இவனுக்கு ஏற்கனவே ஊரில் நன்கு பரிச்சயமான சண்முகம் வாத்தியாரென்பதும் அவர் இவனைப் பற்றித் தான் அவர்களிடம் கதைத்துக் கொண்டிருக்கிறார் என்பதையும் புரிந்து கொள்ள அதிகநேரம் தேவையாக இருக்கவில்லை.

" உவன்ரை தேப்பன் எங்கடை வீட்டிலை கள்ளு இறக்கின ஆள். இங்கை வந்து 'லோங்ஸ்' போட்டாப்போல சாதிக்காரனுக்கு சமனாத்திரிய வெளிக்கிட்டிட்டான் ".

'கல் தோன்றி மண் தோன்றாக் காலத்து முன் தோன்றிய மூத்த குடி'யின் பெருமையான 'சாதி'ப்பெருமைதான் அவரது பேச்சில் முக்கியமாக இருக்கும் என்பதை அவரைப பற்றி ஏற்கனவே அறிந்திருந்த செல்வம் ஊகித்துக் கொண்டான்.

நாகரீகங்கருதி அவர்களது பக்கம் திரும்புவதைத் தவிர்த்துவிட முயன்றாலும் சண்முகத்தாரின் ஒரே மகனால் ஏற்பட்ட பிரச்சனைகள் ஞாபகத்திற்கு வரத் தவறவில்லை. தகப்பனாரிற்குத் தெரியாமல் குடித்துத்திரிந்த அவன் ஒரு தடவை இவனது சமூகப் பெண்ணொருத்தியிடம் தவறாக நடக்க முற்பட்டதாய் ஏற்பட்ட கைகலப்பு, அதில் இவனும் பங்கெடுத்ததாய் சண்முகத்தார் இவன் மீது கொண்டிருந்த காழ்ப்புணர்ச்சி போன்ற இளவயது நிகழ்ச்சிகள் நினைவுகளில் பனித்தன.

"செல்வம்! உன்னை நிரஞ்சன் வரட்டாம்!"

எண்ண ஓட்டங்களைக் கலைத்தான், கூப்பிட்டவன்.

வீடியோப்படம் பிடிப்பவர்மணப்பெண்ணை நெருங்கி நின்று வெவ்வேறு கோணங்களில் படமாக்கிக் கொண்டிருந்தான். சண்முகத்தாருடன் மூவரும் இபபோது நிரஞ்சனின் அருகே நின்று ஏதோ தீவிரமாக வாதாடிக் கொண்டிருப்பதை அவர்களை நெருங்குமுன்பே இவன் கவனித்து விட்டிருந்தான்.

" செல்வா இவை எஙகையோ போகவேணுமாம், உன்ரை காரிலை கொண்டு போய் விட்டுட்டு வாறியா?"

வேண்டுகோள் நண்பனின் முகத்திலிருந்த தர்மசங்கடத்தின் சாயலை இவன் கவனிக்கத் தவறவில்லை. அந்த நிலைமையில் பேசிக் கொண்டிருப்பதைத் தவிர்ப்பதே நல்லது என்று இவனுக்குப் பட்டது.

"வாங்கோ போவம்!"

புன்னகையுடன் சம்மதத்தைத் தெரிவித்தவாறே வெளியேறிய செல்வத்தைப் பின்தொடர்ந்தனர் மூவரும்.

வாகனங்கள் நிறுத்தியிருந்த இடத்தையடைந்ததும் தனது காரில் ஏறிக் கொண்ட செல்வம் அவர்கள் ஏறுவதற்காக உட்பக்கமாக இருந்த பூட்டுக்களைத் தளர்த்தி விட்டான். மூவரில் ஓரளவு வயதானவராகத் தெரிந்தவர் இவன் அருகில் அமர்ந்து கொள்ள முகுந்தனும் மற்றவரும் பின்னிருக்கையில் அமர்ந்து கொண்டனர்.

இவனருகில் அமர்ந்து கொண்டவர், போகவேண்டிய இடத்தைச் சொன்னதும் இவன் காரைச் செலுத்த ஆரம்பித்தான். குறிப்பிட்ட இடம் அத்தனை து ரத்திலிருக்கவில்லை.

கார் நகர ஆரம்பித்துச் சில நிமிடங்கள் அவர்களிடையே இறுக்கமான மௌனமே நிலவியது. பின்பு இவனருகிலிருந்தவர் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார். இவன் பதிலுக்குப் புன்னகைத்தானேயொழிய ஏதும் சொல்லவில்லை. அவர் தொடர்ந்து வழியைக் குறிப்பிட்டுக் கொண்டிருந்தார்.

www.tamilarangam.net

காரை நிறுத்தியதும் பின்னாலிருந்தவர் இறங்கிக்கொண்டார். அருகிலேயே அவரது வீடு இருக்கவேண்டுமென்று இவன் ஊகித்துக் கொண்டான். அவர் மூவரிடமும் விடைபெற்றுக் கொண்டு நகர்ந்தார்.

"நாங்கள் திரும்பிப் போவம் " கார் நகர ஆரம்பித்தது.

"செல்வம் முக்கியமான விஷயம் சொல்ல வேணும். நீர் பிழையா நினைக்கக் கூடாது." பீடிகை போட்டவர் முகுந்தன்.

"நீங்கள் நிரஞ்சனோட எவ்வளவு தான் சினேகிதனாய் இருந்தாலும் கல்யாண வீட்டிலை சில விஷயங்களிலை முன்னுக்கு நிக்கிறது அவ்வளவு அழகா இல்லை"

"உங்களுக்குப் படிக்கவில்லையெண்டால் நேரடியாகச் சொல்லுங்கோவன்" . து ாண்டிவிட்ட நபரைப் புரிந்து கொண்ட இவனது குரலில் ஆத்திரம் இருந்தது.

"தம்பி கோவிக்கிறதிலை அர்த்தமில்லை. நீர் வாசலிலை நிண்டு பன்னீர் தெளிச்சு வரவேற்கிறதையெல்லாம் எல்லாரும் ஒத்துக் கொள்ளமாட்டினம். பாக்கிறவை, விஷயம் தெரிஞ்சவை எங்களையும் குறைய நினைப்பினம். உம்மடை சினேகிதன் இனித் தனி ஆளில்லை எண்டிறதை நீர் விளங்கிக் கொள்ள வேணும்."

"நிரஞ்சன் சொன்னதாலை தான் நான் இந்தக் கலியாண வீட்டு விஷயங்களிலை தலையிட வேண்டி வந்தது."

"நான் மாப்பிளைப் பெடியனோட கதைச்சனான். இந்த நிலையிலை அவர் உமக்கு நேரடியா எப்பிடிச் சொல்லிறதெண்டு யோசிக்கிறார். உம்மை வெளிய போகச்சொல்லி ஒருதருஞ் சொல்லாத அளவுக்கு நீர் விளங்கி நடந்துகொள்ளுறது உமக்கு மரியாதை"

ஊரில் சாதிக்காரர் என்று சொல்லிக்கொள்ளும் எவருக்கும் இருந்த அதிகாரம் இவரது குரலிலும் எதிரொலித்ததை உணர முடிந்தது. தன் இனத்திற்காக, அதன் உரிமைகளுக்காகப் போராடிக் கொண்டிருக்கும் இனத்துக்குள்ளேயே, தமக்குக் கீழ் இரண்டாந்தரப் பிரஜைகளை வைத்திருக்கத் துடிக்கும் ஆணவமுள்ளவர்கள் இவர்கள்.

கார் இப்போது கல்யாண மண்டபத்தை நெருங்கியிருந்தது. எதுவுமே பேசத்தோன்றாத செல்வம் குமுறும் உள்ளத்தோடு காரை நிறுத்தினான்.

இவனருகிலிருந்த 'சாதிக்காரர்' எதுவுமே நடவாததுபோல இறங்கித் திரும்பிப் பாராமலே நடந்தார்.

"செல்வா இப்படியான பிரச்சனை வந்ததுக்காக தம்பிக்காக நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுறன். எதையும் மனசிலை வைச்சுக் கொள்ளாமல் உள்ள வாரும்"

இதுவரை வாய் மூடி மௌனியாக கௌரவப் போர்வையுடன் இருந்த முகுந்தன் மன்னிப்புக் கேட்குந் தோரணையுடன் சொல்லிவிட்டு கீழே இறங்கினார்.

"அடுத்து என்ன செய்ய வேண்டும்" என்பது பற்றி எவ்வித பிரதிக்ஞையுமின்றி சிலையாகக் காருக்குள் அமர்ந்திருந்தான் செல்வம்.

**யாவும் கற்பனை.**



இலங்கையின் சனத் தொகை 1950ம் ஆண்டு 80 இலட்சமாக இருந்து 1975ம் ஆண்டு 1கோடியே 35இலட்சமாகி 1989இல் 1கோடியே 68இலட்சமாகியுள்ளது.

75 இல் 1.9% அதிகரிப்பும் 80ஆம் ஆண்டில் 2.2% சனத்தொகை அதிகரிப்புமாக இருந்த இத்தொகை 89ஆம் ஆண்டில் 1.3% ஆல் வீழ்ச்சி கண்டுள்ளது.

1971ஆம் ஆண்டில் 22.5% ஆன மக்கள் நகரங்களிலும் 75.5% ஆன மக்கள் கிராமங்களிலும் வாழ்ந்தனர்.ஆனால் 85ஆம் ஆண்டு கணிப்பின் படி 21.4% ஆனவர்கள் நகரங்களிலும் மிகுதி கிராமப்புறங்களிலும் வாழ்கின்றனர்.

மோகன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# செய்திகள்

செப்டம்பர் 1

* 527 தினங்கள் விசாரணை நடத்தியபின், 1988 ஜனாதிபதித் தேர்தல் செல்லுபடியானது என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இத்தேர்தலில் மக்கள் சுயாதீனமாக வாக்களிக்க இயலவில்லை என்பதை சிறிமாவோவின் சட்டத்தரணிகள் நிரூபிக்கவில்லை என ஐந்து நீதிபதிகளும் கூறியுள்ளனர்.

* சாய்ந்தமருதுவில் நிகழ்ந்த சைக்கிள் குண்டு வெடிப்பு ஒன்றில் 22 பொதுமக்கள் கொல்லப் பட்டனர்.

செப்டம்பர் 3

* அகதிகளுக்கு வழங்கப்படும் உதவித் தொகையைப் பாதியாகக் குறைப்பதாக இலங்கை அரசு முடிவு செய்துள்ளது.

செப்டம்பர் 4

* கிழக்கில் நிகழ்ந்த இரு குண்டுவெடிப்புகளுக்கும் தாம் பொறுப்பல்ல எனப் புலிகள் கூறியுள்ளனர்.

செப்டம்பர் 5

* இலங்கையின் பன்னிரு கத்தோலிக்க ஆயர்கள் இணைந்து, இலங்கையில் நிகழும் வன்முறைகள், மனித உரிமை மீறல்கள், அரசியல் ஸ்திரமின்மை, வறுமை போன்ற விடயங்கள் பற்றித் தமது ஆழ்ந்த கவலையை வெளியிடும் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

செப்டம்பர் 7

* யாழ் குடாநாட்டில் மீண்டும் ஷெல் தாக்குதல்கள் அதிகரித்ததையடுத்து மக்கள் ஆயிர்க்கணக்கில் இடம்பெயர்ந்துள்ளனர்.

செப்டம்பர் 8

* கிழக்கில் இடம்பெயர்ந்த முஸ்லிம்களை மீண்டும் அவர்களது இடங்களில் குடியமர்த்த ஈரானின் உதவியை இலங்கை கோரியுள்ளது.

செப்டம்பர் 9

* வெலிஓயாப் பகுதிகளில் நிகழ்ந்த மோதல்களில் 20 படையினர் கொல்லப் பட்டுள்ளனர்.

செப்டம்பர் 11

* எம்பிலிப்பிட்டியாவில் மூன்று வருடங்கள் முன்னதாக 32 பாடசாலை மாணவர்களைக் கடத்திச் சென்ற படையினரை அடையாளம் பொதுமக்கள் காயமடைந்ததாகவும் அரசு கூறியுள்ளது.

செப்டம்பர் 18

* ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டபின், படைகள் ஆறுமணிநேர மோதலின் பின் பண்டத்தரிப்பைக் கைப்பற்றியதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

* சென்னையில் நிகழ்ந்த தமிழர் தன்னுரிமை மாநாட்டின் பின் 1500 பேர் கைதாகியுள்ளனர்.

செப்டம்பர் 19

* மேலைநாடுகளின் சமாதானத் திட்டம் ஒன்றுடன் விடுதலைப் புலிகளின் முன்னாள் யாழ் மாவட்டத் தளபதி கிட்டு இலங்கை திரும்பியுள்ளதாக கொழும்பில் செய்தி வெளியாகியுள்ளன. நோர்வே, சுவீடன், கனடா, அமெரிக்கா, சுவிஸ் ஆகிய நாடுகள் சமாதான முயற்சியில் ஈடுபட்டதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

செப்டம்பர் 20

* எல்லைக் கிராமம் ஒன்றைக் காக்க அனுப்பப்பட்ட 13 பொலிசார் தப்பி ஓட முயன்றபோது இராணுவத்திடம் பிடிபட்டனர்.

* திருமலைத் தடை முகாம் ஒன்றில் கத்தோலிக்க மதகுரு ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டது தற்செயலாகத் துப்பாக்கி வெடித்ததாலேயே என அரசு கூறியுள்ளது.

செப்டம்பர் 21

* கிழக்கில் நிகழ்ந்த இருவேறு தாக்குதல்களில் 32 படையினர் பலியாகினர்.

செப்டம்பர் 23

* மேலதிகச் செலவினமாக 280கோடியைப் பாராளுமன்றம் அங்கீகரித்துள்ளது. இது முக்கியமாக அகதிகளைப் பராமரிக்கத் தேவைப்படுவதாக அரசு கூறியுள்ளது.

* கொழும்பில் தமிழ்ப் பொலிஸ் அதிகாரி ஒருவர் மோட்டார் சைக்கிளில் வந்த நால்வரால் சுட்டுக் கொல்லப் பட்டுள்ளார்.

செப்டம்பர் 24

* பொலிஸ் அதிகாரியின் கொலை தொடர்பாகத் தேடப்பட்ட ஒருவர் சயனைட் அருந்தித் தற்கொலை செய்ததாக அரசு அறிவித்துள்ளது.

* வடகடற்பகுதியில் ஒரு படகு தாக்கப்பட்டு மூவர் பலியாகியுள்ளனர்.

செப்டம்பர் 25

* பூநகரிப் பகுதியில் நிகழ்ந்த கடும் மோதல்களில் 18 படையினர் பலியானதாக அரசும், 30 படையினர் பலியானதாகப் புலிகளும் கூறியுள்ளனர்.

செப்டம்பர் 26

* ஆனையிறவில் மோட்டார் தாக்குதலில் சிப்பாய் ஒருவர் பலியானார்.

செப்டம்பர் 28

* முல்லைத்தீவில் ஒன்பது படையினர் பலியானதைத் தொடர்ந்து புலிகளுக்கு எதிரான தாக்குதல்களைப் படையினர் தொடங்கியுள்ளனர். குறைந்தது நான்கு பொதுமக்கள் பலியானதாகச் செய்திகள் கூறுகின்றன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*கண்டுள்ளதாக அரசால் நியமிக்கப்பட்ட மனித உரிமைப் பிரிவு (HRTF) ஒன்று அறிவித்துள்ளது.*

* *வவுனியாவில் அறுபது சிங்களப் பொதுமக்கள் பொலிசாரின் பாதுகாப்புடன் செல்கையில் புலிகள் தாக்கியதில் ஐவர் மரணமாகினர் என அரச கூறியுள்ளது.*

* *திருமலைப் பகுதியில் நிகழ்ந்த மோதல் ஒன்றில் ஆறு படையினர் பலியாகினர்.*

*செப்டம்பர் 10*

* *திருமலையையடுத்த கடற்பகுதியில் நிகழ்ந்த தாக்குதல் ஒன்றில் படகில் பயணித்த இருபதுக்கு மேற்பட்ட படையினரும் சில பொதுமக்களும் கொல்லப்பட்டனர்.*

*செப்டம்பர் 12*

* *ஒகஸ்ற் மாதத்தில் கொப்பேகடுவ மரணத்தையடுத்து கிழக்கில் ஒரு கிராமத்தில் 39 தமிழர்கள் கொல்லப் பட்டதாகவும், திருமலையில் ஐந்து பொலிசார் கொல்லப்பட்டதன் பின்னர் 13 பொலிசார் 31 தமிழ் வீடுகளைத் தீக்கிரையாக்கினர் என்றும் மனித உரிமைப் பிரிவு கூறியுள்ளது.*

*ஓய்வுபெற்ற நீதிபதி சொய்சா தலைமையிலான இந்தக் குழு விசாரணை இன்றி எவரும் மூன்று வருடங்களுக்குமேல் தடுத்து வைக்கப்படக் கூடாது எனவும் கூறியுள்ளது. இக்குழுவின் அறிக்கைப்படி 7356 பேர் (5628 சிங்களவர்) தடுப்புக் காவலில் உள்ளனர்.*

*செப்டம்பர் 15*

* *ஜனவரி 11, 1991 முதல் ஒருவருட காலத்தில் 'காணாமற் போனோர்' என அறிவிக்கப்பட்ட 406 பேரில் 41பேர் பற்றித் தகவல்கள் கிடைத்துள்ளதாக 'காணாமற் போவோர்' பற்றி ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழு கூறுகிறது.*

* *கோட்டை புகையிரத நிலையத்தில் செய்தியாளர்களைத் தாக்கினர் என்ற சந்தேகத்தில் ஐவர் கைதாகியுள்ளனர் எனவும் இவர்களை அடையாளம் காண அடையாள அணிவகுப்பு நிகழும் எனவும் அரச கூறியுள்ளது.*

*செப்டம்பர் 17*

* *வவுனியாவில் புலிகளின் தாக்குதல் ஒன்றில் ஒரு சிப்பாய் கொல்லப் பட்டதாகவும் 11*

# அயல் உலகம்



* ஆபிரிக்க நாடுகள் பலவற்றிற்கு உடனடி உணவு உதவி தேவைப்படுவதாக உலக உணவு ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

* ஜேர்மனியில் பேர்லின், பொன் ஆகிய நகரங்களில் லட்சக் கணக்கான மக்கள் கலந்துகொண்ட இனவாத எதிர்ப்பு ஊர்வலங்கள் நிகழ்ந்தன. இவற்றில் கலந்துகொண்டோர் மீது சில இடங்களில் கூழ்முட்டைகள் வீசப்பட்டன. ஜேர்மனிய இளைஞர்களில் 20 சதவீதத்தினர் இனவாதத்திற்கு ஆதரவான கருத்துகளைக் கொண்டிருப்பதாக அண்மைய ஆய்வொன்று கூறுகிறது.

* 52பேரைப் படுகொலை செய்ததாகக் கூறப்படும் அந்திரேய் ஷிகாடில்லோ (56) என்ற ரஷ்யருக்கு மரணதண்டனை வழங்கப் பட்டுள்ளது. இவரால் படுகொலை செய்யப் பட்டவர்கள் யாவர்மீதும் படுகொலைக்கு முன் இவர் பாலியல்ப் பலாத்காரம் செய்துள்ளார் எனத் தெரிவிக்கப் படுகிறது.

* சீனக் கொம்யூனிஸ்ற் கட்சியின் கொங்கிறஸ், சீனாவை முதலாளித்துவ ரீதியான பொருளாதார நடவடிக்கைகளைத் தொடங்க ஒப்புதல் தெரிவித்துள்ளது. இது தற்போது நாற்பத்திமூன்று வருடங்களாக ஆட்சியில் உள்ள கொம்யூனிஸ்ற் கட்சியினைத் தொடர்ந்தும் ஆட்சியில் இருக்க உதவும் என நம்பப்படுகிறது.

* அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்ட பில் கிளின்ரன், ஜோர்ஜ் புஷ்ஷைவிடப் பெரும் ஆதரவைப் பெற்றுப் புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப் பட்டுள்ளார். இவரது தேர்தல் வாக்குறுதிகள் பெரும்பாலும் கல்வி, பொருளாதாரம், மருத்துவம் போன்ற அடிப்படைப் பிரச்சனைகளைப் பற்றியதாகவே இருந்தன.

* அங்கோலாவில் அண்மையில் நிகழ்ந்த தேர்தல்களில் ஆளும் இடதுசாரிக் கட்சியின் (MPLA) தலைவர் ஜோஸ் எடுவாடோ டொஸ் சன்ரோஸ் மற்றும் அவரது கட்சி வெற்றி ஈட்டியதைத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

தொடர்ந்து, மீண்டும் வன்முறைகள் ஆரம்பித்துள்ளன. கடந்த 16 வருடங்களாகப் பெரும்பாலும் தென்னாபிரிக்க, அமெரிக்க ஆதரவுடன் ஆளும் கட்சியை எதிர்த்துப் போராடும் 'யுனிரா' கெரில்லாக்களும், அதன் தலைவர் ஜோனாஸ் ஸவிம்பியும் அண்மையில் நிகழ்ந்த தேர்தல் முறையற்றது எனப் புகார்கள் தெரிவித்த போதும் சர்வதேச அவதானிகள் தேர்தல் முறையாகவே நிகழ்ந்ததாகக் கூறியுள்ளனர்.

* சுவீடன் மக்களின் பேராதரவு பெற்றிருந்து படுகொலை செய்யப்பட்ட பிரதமர் ஊலா பா(ல்)மே கொலை பற்றிப் புதிய தகவல்கள் வெளியாகியுள்ளன. சி.ஐ.ஏ, கூலிப்படை ஒன்றைச் சேர்ந்த தனக்கு இருபது லட்சம் டொலர்களைப் பாமே கொலைக்காகத் தரத் தயாராக இருந்ததாக, அண்மையில் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் ஒரு நபர் கூறியுள்ளார். ஐ.நா. சபையின் அடுத்த செயலாளர் நாயகமாக வரும் வாய்ப்புகள் பாமேக்கு இருந்ததாலேயே இவ்வாறு சி.ஐ.ஏ. பாமேயைக் கொல்ல முயன்றதாகவும் கூறப்பட்டது. பாமே கொலைக்கு ஆறுவாரங்கள் முன்னர் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த சிலர் ஒரு ஆட்சிக்கவிழ்ப்பிற்குத் திட்டமிட்டதாகவும் இதே நிகழ்ச்சியில் தகவல் வெளியானது.

* பதினாறு வருடகால உள்நாட்டு யுத்தத்தின் பின்னர் மொசாம்பிக்கில் சமாதான உடன்படிக்கை கைச்சாத்திடப் பட்டுள்ளது. அரசாங்கத்திற்கும் றெனாமோ கெரில்லாக்களுக்கும் இடையில் பல அரச தலைவர்கள் முன்னிலையில் சமாதான உடன்படிக்கை கைச்சாத்திடப்படும் வைபவம் நிகழ்ந்தது. 1975இல் போத்துக்கீசரிடம் இருந்து விடுதலை பெற்றபின் அரசின்மீது போர் தொடுத்த றெனாமோ கெரில்லாக்களுக்குத் தென்னாபிரிக்கா ஆயுத, பொருளாதார உதவிகளைச் செய்து வந்தது.

* வளைகுடா யுத்தத்தில் 47,000 சிறுவர்கள் கொல்லப் பட்டிருக்கலாம் என ஹாவாட் பல்கலைக்கழக ஆய்வு ஒன்று கூறுகிறது. நேரடியாக யுத்தத்தினாலும், பொருளாதாரத் தடையினாலும் பெரும்தொகையான குழந்தைகள் இறந்துள்ளனர் என அந்த ஆய்வு தெரிவிக்கிறது.

* அல்ஜீரிய அரசு அரசியல் வன்முறைகளுக்கு எதிராகக் கடும் சட்டங்களை அமுல்படுத்தி உள்ளது. வன்முறைகளில் பங்கெடுப்போரும், வன்முறைகளை ஆதிரிப்போரும் மரண தண்டனைமுதல் பத்து வருடச் சிறைவரை பல்வேறுபட்ட தண்டனைகளை அனுபவிக்க நேரிடும். வன்முறையைத் தூண்டும் பிரசுரங்கள் இலக்கியங்களை வெளியிடுவோர் ஐந்து முதல்பத்து வருடம்வரை சிறையில் இருக்க நேரிடும்.




நோர்வேயின் நண்பர் வில்லி பிறாண்ட் ஒக்டோபர் முற்பகுதியில் காலமானார். முன்னாள் ஜேர்மன் அதிபரும், பேர்லின் நகரபிதாவுமான இவரது (இரண்டாம் யுத்த காலத்தில்) அகதிவாழ்வு நோர்வேயில் கழிந்தது. எட்டு வருடங்கள் நோர்வேஜியப் பிரஜையாக இருந்த இவரது முதல் மனைவி நோர்வேஜியப் பெண்ணாவார். பேர்லின் மதில் கட்டப்பட்ட போது (மே) பேர்லினில் நகரபிதாவாக இருந்த இவர் இரு ஜேர்மனிகளும் இணையவேண்டும் என்பதற்காக அயராது உழைத்தவர். இவர் சமாதானத்திற்கான நோபல் பரிசும் பெற்றவர்.

www.tamilarangam.net

www.tamilarangam.net






# ஸ்கன்டிநேவியா! ஓ ஸ்கன்டிநேவி

— சமுத்திரன்

எனது நீண்டகால ஜப்பானிய நண்பர் பேராசிரியர் நாக்காமுறா சமீபத்தில் முதல் தடவையாக ஸ்கன்டிநேவியாவுக்கு வந்திருந்தார். இந்தமாத (Aug) ஆரம்பத்தில் ஸ்டொக்கோமில் நடைபெற்ற சர்வதேச இயற்கையியல் பொருளியலாளர் (Ecological Economists) மகாநாட்டில் நானும் அவரும் கலந்துகொண்டோம். நாக்கமுறா ஒரு சமூக விஞ்ஞானி. ஜப்பானிய சமூகத்தை விமர்சித்துப் பல நூல்கள் எழுதியுள்ளார். சம்பத்தில் அவர் எழுதிய 'வறிய ஜப்பானும் செல்வமிகு ஆசியாவும்' எனும் நூல் அவருக்குப் பெரும் புகழைத் தேடிக் கொடுத்தது. சுவீடனில் மகாநாடு முடிந்தபின் நோர்வேயில் குடும்ப சமேதராய் ஒரு வாரத்தைக் கழித்துச் சென்றார்.

குறுகிய கால அனுபவமாயினும் ஸ்கன்டிநேவியா, நாக்காமுறாமீது கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தியதை அறிந்தேன். அவரின் வருகை சமூக ஜனநாயகம் பற்றியும் குறிப்பாக ஸ்கன்டிநேவிய நாடுகளின் அபிவிருத்தி மாதிரிபற்றியும் பல கலந்துரையாடல்களுக்கு வழிவகுத்தது. ஸ்டொக்கோமில் ஆரம்பித்த இந்த உரையாடல்கள் நோர்வேயில் தொடர்ந்தன. ஆசிய சமூகங்கள் பற்றி நீண்டகாலமாக ஆய்வுகள் செய்துவரும் நண்பர் நாக்காமுறா அடிப்படையில் ஒரு அராஜகவாதி எனலாம். (அராஜகவாதம் என்பது ஆங்கிலத்தில் Anarchism எனப்படும். இதற்கும் எதேச்சாதிகார வாதத்துக்கும் எதுவித தொடர்புமில்லை. துரதிர்ஷ்ட வசமாக தமிழில் அராஜகவாதம் எனும் சொல் இந்தக் கருத்திலேயே பயன்படுத்தப் படுகிறது. இது ஒரு துஷ்பிரயோகம்.) அவர் காந்தியவாதப் போக்குகளால் கவரப்பட்டவர். ஆயினும் ஸ்கன்டிநேவிய சமூக ஜனநாயகம் அவர்மீது நான் எதிர்பார்த்ததைவிட மேலதிகமான தாக்கத்தை ஏற்படுத்தியதைக் கண்டேன்.

நாக்கமுறாவுடன் நானும் சில நோர்வேஜிய நண்பர்களும் நடத்திய உரையாடல்களின்போது வெளிவந்த சில கருத்துகளைத் தொகுத்துத் தருவதே இந்தக் குறிப்பின் நோக்கம். எனது அபிப்பிராயத்தில் சமூக ஜனநாயகம் முன்னெப்போதும் கண்டிராத நெருக்கடிகளை இப்போ எதிர்நோக்குகிறது. அதே நேரத்தில் அதன் ஸ்கன்டிநேவிய வரலாறு பல பாடங்களைப் புகட்டுகிறது. இவைபற்றி மேலும் கலந்துரையாட இங்கு தரப்படும் கருத்துகள் அபிப்பிராயங்கள் பயன்படலாம்.

## I

"பிரான்சைவிட இங்குதான் பிரெஞ்சுப் புரட்சியின் இலட்சியங்களான சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் கூடுதலான வெற்றியைப் பெற்றுள்ளன என்று கருதுகிறேன்" இவ்வாறு நாக்கமுறா நான் கடமையாற்றும் நிறுவனத்தின் இயக்குனரைச் சந்தித்தபோது குறிப்பிட்டார். அதற்கு இயக்குனர் S.B. "நீங்கள் கூறுவது கேட்பதற்குப் பெருமை தருவதாக இருந்தாலும், உண்மையில் இன்று நோர்வேஜிய சமூக அமைப்பு பல பிரச்சனைகளுக்கு உள்ளாகியிருப்பதைக் குறிப்பிட வேண்டும். நமது சமூகநல ஸ்தாபனங்கள் தொடர்ச்சியாகப் பலவீனமடைந்து வருகின்றன. வயோதிபரின் நலன் நன்றாகக் கவனிக்கப் படுவதில்லை." எனப் பதிலளித்தார்.

நாக்கமுறா: இருக்கலாம். ஆயினும் முதலாளித்துவ அமைப்புக்குள் ஆகக்கூடுதலான சமூகநல சீர்திருத்தங்களைச் செய்வதில் ஸ்கன்டிநேவிய நாடுகள் வெற்றி கண்டுள்ளன. நான் இங்கு ஒப்பீட்டு ரீதியில் பேசுகிறேன். எனது நாடு இந்த விடயத்தில் மிகவும் பின்தங்கியுள்ளது. அத்துடன் இன்னொரு முக்கியமான விடயத்தையும் மனதில் கொள்ள வேண்டும். ஸ்கன்டிநேவியா மூன்றாம் உலக நாடுகள்மீது நேரடியான காலனித்துவ ஆக்கிரமிப்பை நடத்தவில்லை. பிரித்தானியா, பிரான்சு, ஜப்பான் போன்ற நாடுகள் காலனித்துவத்துக்கூடாக மற்றைய நாடுகளின் செல்வங்களை அபகரித்து, தமது முதலாளித்துவ வளர்ச்சிக்குப் பயன்படுத்தின. ஆனால் ஸ்கன்டிநேவியா (குறிப்பாக சுவீடன், நோர்வே, பின்லாந்து) எக்காலத்திலும் தெற்கத்திய நாடுகளைக் காலனிகளாக்கவில்லை. அத்துடன் சமீப காலம்வரை

www.tamilarangam.net

நோர்வே வெளிநாட்டுத் தொழிலாளர்களின்றித் தனது அபிவிருத்தியை முன்னெடுத்துள்ளது.

**S.B:** "உண்மைதான். எண்ணெய் வளங்கள் கண்டுபிடிக்கப் பட்டபின்பே நோர்வேயின் சமுகநல அமைப்பு உருவானது என்ற தப்பபிப்பிராயமும் உண்டு. உண்மையில் எண்ணெய் வளங்களின் செல்வம் வரமுன்பே சமுகநல அமைப்பு உருவாகிவிட்டது. எண்ணெய் வருமானம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த உதவியது. ஆனால் இன்று பொருளாதார மந்தமும், ஐரோப்பிய சமுக ஒருங்கிணைப்புப் போக்குகளும் நோர்வீஜிய அமைப்பின் எதிர்காலம் பற்றிப் பல கேள்விக்குறிகளை எழுப்புகின்றன. சிலவேளை ஸ்கன்டினேவிய சமுகநலனின் வரலாறு வேறுவிதமாக மாறலாம், அதாவது நீங்கள் குறிப்பிட்ட பிரெஞ்சுப் புரட்சியின் இலட்சியங்களுக்கு மாறாகப் போகலாம்."

சமுத்திரன்: "இன்றைய நிலைமை முதலாளித்துவ சமுக ஜனநாயகத்தின் அடிப்படை முரண்பாட்டை நன்கு வெளிப்படுத்துகிறது. இந்த அமைப்புக்குள் பொருளாதார வளர்ச்சி, அதாவது, மூலதனத்தின் வளர்ச்சி துரிதமாக இடம்பெறும்போது சமுகநலன்களின் வளர்ச்சியின் சாத்தியப்பாடுகளும் அதிகரிக்கின்றன. பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு வீழ்ச்சிப் போக்கு நீடிக்கும் காலகட்டத்தில் சமுகநலன்களின் வீழ்ச்சியைத் தவிர்க்க முடியாது. ஆனால் இந்தக் கட்டத்தில்தான் அடிப்படைச் சமுகநல உத்தரவாதம் தேவை. அதற்குமாறாக இந்தக் கட்டத்தில்தான் பிரச்சனைகள் தோன்றுகின்றன. வேலையில்லாதோர் தொகை அதிகரிக்கிறது. வங்கிகளில் கடன்பட்டோர் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாது கஷ்டப் படுகிறார்கள். வாழ்க்கைச் செலவுப் பிரச்சனை மோசமடைகிறது. அத்துடன் இத்தகைய நெருக்கடியின்போது நிறவாதம் பலம் பெறுகிறது. இந்த நிறவாதத்தின் தலைதூக்கல் சமுக ஜனநாயகத்தின் அடிப்படை விழுமியங்களைக் கேள்விக்குரியன வாக்குகிறது. இப்படிப் பார்த்தால் பிரெஞ்சுப் புரட்சியின் இலட்சியங்களின் வெற்றி மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டும் எனத் தோன்றவில்லையா?"

நாக்கமுறா: "நியாயம்தான். ஆனால் நீங்கள் (சமுத்திரன்) குறிப்பிட்டதுபோல் சமுக ஜனநாயகத்தில் நிறவாதத்திற்கு எதிராகப் போராடக்கூடிய சட்டபூர்வமான அடிப்படை மற்றைய முதலாளித்துவ அமைப்புகளையும்விடப் பலமானது. நான் சமுக ஜனநாயகத்தை இலட்சிய மயப்படுத்தவில்லை. ஆனால் எப்படி ஸ்கன்டினேவியா இந்தப் பாதையைத் தேர்ந்து அதில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வெற்றியை அடைந்தது எனும் கேள்வி முக்கியமானது"

துரதிர்ஷ்டவசமாக இந்த உரையாடல் இந்தக் கட்டத்தில் பல காரணங்களால் தடைப்பட்டது. வேறு நண்பர்களின் வருகை அறிமுகங்கள் என்பனவற்றால் சம்பாஷணைகள் பல திசைகளில் சென்றன.

## II

நோர்வேயின் பிரபல இயற்கையியலாளரும் தொழிற்கட்சியின் மூத்த உறுப்பினருமான பேராசிரியர் எய்லி்ஃப் டால் (**Eilif Dahl**, வயது75) உடனும், ஒஸ்சில் நமது அயலவர்கள் சிலருடனும் நிகழ்ந்த உரையாடல்களில் இருந்து:

நாக்கமுறா: "நோர்வேயில் சமுகநலன் ஒரு உச்சக் கட்டத்தை அடைந்தபின் வீழ்ச்சி அடைந்து வருகிறது என அறிகிறேன். இந்தப் போக்குத் தொடருமா, இதை மாற்றும் சாத்தியப்பாடுகள் உண்டா?"

டால்: "தொழிற்கட்சிக்குள் இதுபற்றி நான் ஒரு பிரச்சாரத்தை ஆரம்பித்துள்ளேன். அக்கட்சியின் சார்பான தினசரி **Arbeiderbladet**இல் ஒரு விவாதத்தை ஆரம்பித்துள்ளேன். ஸ்கன்டினேவிய சமுக ஜனநாயகம் தொழிற்சங்கங்களின் பலத்தால் உருவானது. இப்போ பொருளாதாரப் பிரச்சனைகளுக்கு சமுக ஜனநாயகத்தின் விழுமியங்களுக்கு மாறான தீர்வுகள் ஆதரவு பெறுகின்றன. இன்றைய நிலையில் உடனடியாக வேலைவாய்ப்புகளை அதிகரிக்க சில கெய்னீசியத் திட்டங்களை அமுல்நடத்தும் சாத்தியப்பாடுகளை ஆராயவேண்டும். அதாவது சமுக ஜனநாயகத்தின் விருத்திக்கு இதுவரை அரசு ஆற்றிய பங்கின் அனுபவங்களை அடிப்படையாக வைத்து ஒரு திட்டத்தை தீட்ட முடியும் என நம்புகிறேன்."

திருமதி பேர்ஷன் (ஒஸ் நூலகப் பொறுப்பாளர்): "டால் சொல்லும் வழி உண்மையில் சாத்தியமா என்பது சந்தேகம். இன்றைய பொருளாதார மந்த நிலையில் இருந்து விடுபட நோர்வீஜியர்கள் மேலும் கடினமாக உழைக்கத் தயாராயிருக்க வேண்டும் என நீங்கள் கருதவில்லையா?"

டால்: "நோர்வீஜியர்கள் மேலும் கடினமாக உழைக்க வேண்டும் எனும் கொள்கையை நான் வாங்கத் தயாராயில்லை. உண்மையில் பிரச்சனை அதுவல்ல. பொருளாதார மந்தம் அமைப்பு ரீதியான பிரச்சனை.

இதற்கு வலதுசாரிகள் முன்வைக்கும் தீர்வு தனியுடைமையாக்கலும் சுயபோட்டிச் சந்தை மயமாக்கலும். என் போன்றோர் அரசு மேலும் இயக்க பூர்வமாகச் செயல்பட வேண்டும் எனக் கருதுகிறோம். அதிர்ஷ்ட வசமாக இறைவன் நோர்வேக்கு நிறைய இயற்கை வளங்களைத் தந்துள்ளான். இவற்றைச் சரியான முறையில் பயன்படுத்தி நமது சமுக ஜனநாயக அமைப்பின் நோக்கங்களை அடையலாம். நான் சந்தைக்கு எதிர்ப்பில்லை. ஆனால் சமுக நலன்களை எல்லோரும் பெறக் கூடிய வகையில் வருமானம் பரவலாக்கப்பட வேண்டும். அரசு தனது பொருளாதாரப் பங்கினை விரிவாக்கத் தேவையான பணம் வரிகளுக்கூடாக வசூலிக்கப் படுகிறது. இன்றைய நிலையில் வரிகளைக் குறைப்பதை நான் ஆதரிக்கவில்லை. முழுச்சமுகத்தின் நலனையும் மனதில் கொண்டு இன்றைய வரிமட்டத்தைக் குறைக்காது வேலைவாய்ப்பினை அதிகரிக்கும் வகையில் அரசு முதலீடு செய்ய வேண்டும். வேலையற்றிருப்போருடன் நமது தோழமையைக் காட்டுவதற்கு நமக்குள்ள (அதாவது

www.tamilarangam.net

## புதிய சஞ்சிகை!

டென்மார்க்கில் புதிதாக ஒரு சஞ்சிகை தொடங்கியுள்ளது. அண்மையில் வெளிவந்த இந்தச் சஞ்சிகை விலைமாதர்களால் தமக்கென்றே நடத்தப்படுவது. இவ்வாறான ஒரு சஞ்சிகை உலகில் வேறு பகுதிகளில் வெளிவருவதாக அறியப்படவில்லை. இச்சஞ்சிகையில் விலைமாதர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் முக்கியமாக ஆராயப்படும். நோர்வேயைவிடவும் டென்மார்க்கில் விலைமாதர்கள் தமது தொழிலை நடத்துவதற்கான சுதந்திரம் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

– கேசவன் –

வேலையுடையோர்) ஒருவழி தொடர்ந்தும் இப்போதைய வரியைச் செலுத்தச் சம்மதிப்பதாகும்."

நாக்கமுறா: "ஜப்பானின் பொருளாதார வளர்ச்சியில் அரசு முக்கிய பங்கினை வகித்துள்ளது. இன்றும் அப்படியே. ஜப்பானிய பொருளாதாரக் கொள்கைகள் கெய்னீசியக் கொள்கைகள்தான். ஆனால் ஸ்கன்டிநேவியாவுக்கும் ஜப்பானுக்கும் உள்ள வேறுபாடு என்னவெனில், ஜப்பானியக் கெய்னீசியக் கொள்கைகள் சமூக நலன்களை உள்ளடக்கிய ஒரு கருத்தமைவில் இருந்து பிறக்கவில்லை. அங்கு பொருளாதார வளர்ச்சிதான் நோக்காய் அமைந்தது."

சமுத்திரன்: "வரலாற்று ரீதியில் ஜப்பானின் பொருளாதார வளர்ச்சி ஜனநாயக மயமாக்கலுடன் இணைந்திருக்கவில்லை. வெளிநாட்டு காலனித்துவம், உள்நாட்டில் பாசிசம் எனும் அடிப்படையைக் கொண்டிருந்தது. ஸ்கன்டிநேவிய முதலாளித்துவம் ஆரம்ப கட்டங்களில் இருந்தே சமூக ஜனநாயக கருத்தமைவினால் வழிநடத்தப்பட்டது. ஆளும் தொழிற்கட்சியின் சீர்திருத்தவாதம் சமூகநலன்களின் ஸ்தாபன மயமாக்கத்துக்கு வழிவகுத்தது."

நாக்கமுறா: "உலக யுத்தங்களின் இடைக்காலத்தில் ஜப்பானில் கம்யூனிச, சோசலிச இயக்கங்கள் பலம்பெற்று வந்தன. ஆனால் இவை நசுக்கப் பட்டன. நீங்கள் குறிப்பிட்டது போல அரசின் தன்மை வேறுபட்டிருந்தது. உள்நாட்டில் சர்வாதிகாரம், வெளிநாட்டில் ஆக்கிரமிப்பு. ஆனால் இன்று ஜப்பானில் மக்கள் மட்டக் குழுக்கள் சமூகநலன்கள் பற்றி நிறையச் சிந்திக்கின்றன, செயற்பட முயற்சிக்கின்றன. ஸ்கன்டிநேவியாவின் அனுபவங்கள் நமக்கும் பயன்தரவல்லன."

கிறிஸ்டீன் (நாடகக் கலைஞர்): "இன்று பசுமைப் பொருளாதாரம் (Green Economy) பற்றி எல்லோரும் பேசுகிறார்கள். சமூக நலன்கள் எனும்போது சூழலும் முக்கியம் பெறுகின்றது. இன்றைய பொருளாதார அமைப்பும் நமது நுகர்வுக் கலாசாரமும் உண்மையில் சூழலையும் இயற்கை வளங்களையும் நீண்டகாலம் பேணுவதற்கு உதவியாயில்லை.

### III

சில நாட்கள் பல சந்தர்ப்பங்களில் நடைபெற்ற உரையாடல்களின் சில கருத்துக்களே மேலே சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன. நாக்கமுறாவும் நானும் பேர்கன் செல்லும் வழியில் கலந்துரையாடல்கள் தொடர்ந்தன. அவர் டோக்கியோவில் இருந்து மொஸ்கோவில் ஓரிரவு தங்கி ஸ்கன்டிநேவியா வந்தார். மொஸ்கோ விமான நிலையமும் இரவு தங்கியிருந்த ஹோட்டலும் முன்பைவிட (‘சோசலிச’க் காலத்தைவிட) மோசமாகிவிட்டதாகக் கூறினார். "எல்லோரும் பணம் கேட்கிறார்கள். எல்லோரும் டொலர் கேட்கிறார்கள். ஹோட்டல் சேவகனிடம் உணவுபற்றிப் பேசினால் அவன் ரஷ்யப் பொருட்களை நம்மிடம் விற்க முனைகிறான். விமான நிலையத்தில் வேலை செய்பவர்களும் அப்படியே. இதுதான் ரஷ்ய முதலாளித்துவ மாற்றத்தின் இன்றைய நிலை. முதலாளித்துவ நாடாகிய ஜப்பானில் இருந்து வருவோருக்கே வெறுப்பைக் கொடுக்கிறது. இந்தக் கொச்சை முதலாளித்துவம். ரஷ்யா எனக்குச் சிலவேளை இந்தியாவை நினைவூட்டுகிறது. அதாவது சில மனிதர்களின் அதிகாரப் போக்கும் எங்கும் பணம் பணம் எனும் கேள்வியும்" என்றார்.

நாக்கமுறா சோவியத் சீன சோஷலிசத்தை தொடர்ச்சியாக விமர்சித்து வந்தவர். அதேநேரம் கிழக்கு ஐரோப்பாவின் இன்றைய நிலைமைகளையும் விமர்சிக்கிறார். கிழக்கு ஐரோப்பா சமூக ஜனநாயகப் பாதைக்குத் திரும்பியிருந்தால் அங்குள்ள மக்களின் எதிர்காலம் நல்லதாய் அமைந்திருக்கலாம் என நம்புகிறார்.

முதலாளித்துவ சமூக ஜனநாயகம் இன்று லிபரல் பொருளாதார வாதத்தால் பலமாக எதிர்க்கப் படுகின்றது. ஸ்கன்டிநேவிய சமூக ஜனநாயகம் இன்று எழுந்துவரும் ஐரோப்பிய வலதுசாரி அலைகளுக்கு முகம்கொடுக்கும் சக்தியை இழந்து வருகிறது. இன்று தொடரும் பொருளாதார மந்தத்திற்கு, மேலும் பூரண தனியுடைமையாக்கலும் சுயபோட்டிச் சந்தையுமே தீர்வு என ஐரோப்பிய ஒருங்கிணைப்பாளர்கள் அடித்துக் கூறுகின்றனர். ஸ்கன்டிநேவிய மாதிரியின் - Scandinavian Model - இறுதிக் கட்டத்தைக் காண்கிறோமா என்ற கேள்வி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


எழுகிறது. இன்றைய வலதுசாரிப் போக்கிற்கு சாதகமான, நோர்வீஜிய நிதி அமைச்சின் பொருளியலாளர் சமீபத்தில் கூறினார்: "ஸ்கன்டினேவிய சமூக நலன் மாதிரியின் வரலாறு முடிந்துவிட்டது. நாம் சந்தையின் விதிகளுக்குத் திரும்புகிறோம்."

கிழக்கு ஐரோப்பாவில் 'சோஷலிசம்' மறைந்துவிட்டது. ஸ்கன்டினேவியாவில் சமூக ஜனநாயகம் தொடர்ச்சியாகப் பலவீனமடைந்து வருகிறது. அப்படியானால் தூய முதலாளித்துவம்

வெற்றி பெற்றுவிட்டதா?

இன்று ஸ்கன்டினேவியாவை எதிர்நோக்கும் சர்வதேச நிலைமையையும் கணக்கிலெடுக்காது இந்தக் கேள்வியை அணுகமுடியாது. இன்று உலகம் மூன்று முதலாளித்துவ - ஏகாதிபத்திய கேந்திரங்களின் போட்டிக்கும் ஆதிக்கத்திற்கும் ஆளாகியுள்ளது. USAயின் தலைமையில் வட அமெரிக்கா, ஜப்பானின் தலைமையில் கிழக்கு ஆசியா, ஒருங்கிணைந்து வரும் ஐரோப்பிய சமூகம். இந்த மும்முனைப் போட்டியில் ஸ்கன்டினேவிய நாடுகள் மேற்கு ஐரோப்பாவின் போக்குகளால் நேரடியாகப் பாதிக்கப் படுகின்றன. ஜப்பானுடனும் அமெரிக்காவுடனும் பொருளாதார ரீதியில் போட்டியிடும் சவாலை ஐரோப்பிய சமூகம் கையாளும் விதம் சமூகநல அமைப்புக்கு பாதகமான வழிகளையே பலப்படுத்துகிறது. ஸ்கன்டினேவிய நாடுகள் இந்த வழிகளைப் பின்பற்றாவிட்டால் குறுகிய காலத்தில் மேலும் அழுத்தமான பொருளாதார நெருக்கடிகளை அனுபவிக்கவேண்டி வரலாம் என அரச பொருளியலாளர்கள் கருதுகின்றனர். இந்தக் கருத்துப் போக்கு கொள்கைவடிவம் பெற்று நடைமுறைப்படுத்தப் படுகிறது. ஆம்! சமூக ஜனநாயகம் தற்போது பின்வாங்குகிறது. சுயபோட்டிச் சந்தை எனும் பழைய கருத்தமைவு பலம் பெறுகிறது.

அப்படியென்றால் சமூக ஜனநாயகத்தின் அத்தியாயமும் முடிகிறதா? இந்தக் கேள்வியை அடுத்த இதழில் ஆராய்வோம். அப்போது 'தூய முதலாளித்துவம்' அல்லது சுயபோட்டி முதலாளித்துவம் எனும் கருத்துரு வரலாற்றில் என்ன அந்தஸ்தைப் பெற்றுள்ளது என்பதனையும் பார்ப்போம்.



## யார் கொலையாளி?


பண்டைக்கால உயிரினமான டைனசோர்கள் இன்று வெறும் எலும்புக்கூடுகளாகக் காட்சியகங்களில் மட்டுமே உள்ளன. பலஆயிரம் வருடங்கள் முன்பே அழிந்துபோன இந்த உயிரினங்கள் எவ்வாறு உலகிலிருந்து அழிந்தன என்பது பற்றிப் பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன. அண்மையில் அமெரிக்காவில் வெளியாகும், பலராலும் மதிக்கப்படும் அறிவியல் ஏடொன்றில் வேறொருவிதமான முடிவு வெளியாகியுள்ளது.

இந்தத் தகவலின்படி ஆறரைக் கோடி வருடங்கள் முன்னதாக பூமியை எரிகல் ஒன்று, மெக்சிகோ குடாப்பகுதியில் தாக்கியது. இதையடுத்துப் பூமியில் நிகழ்ந்த சூழலியல் மாற்றங்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல் டைனசோர் உயிரிழந்தது. கலிபோர்ணியா பல்கலைக்கழக ஆய்வாளர்களது கருத்துப்படி அந்த நிகழ்ச்சியின்போது எழுந்த புகை தூசி என்பவற்றைத் தாங்க முடியாமல் டைனசோர் இறந்திருக்க வேண்டும் எனக் கருதப்படுகிறது.

– சேகரன் –

www.tamilarangam.net






## இளைஞர் பார்வையில் நோர்வே சுவீடன் டென்மார்க்

அண்மையில் ஸகன்டினேவிய நாடுகளுக்கிடையே ஓர் அபிப்பிராய வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இந்த நாடுகளில் வாழும் இளைஞர்கள் (ஆண் பெண் இருவரும்தான்) தமது அயல்நாட்டு இளைஞர்கள் பற்றி என்ன அபிப்பிராயம் கொண்டுள்ளனர் என அறியவே இந்த வாக்கெடுப்பு. அவர்கள் வழங்கிய பதில்களின் சுருக்கம்:

1. சுவீடன் இளைஞர்களின் அபிப்பிராயம்.

அ) நோர்வே இளைஞர்கள் இனிமையானவர்கள், மகிழ்ச்சியானவர்கள், நல்ல மனோபாவம் படைத்தவர்கள்

ஆ) டென்மார்க் இளைஞர்கள் சிவப்புத் தலைமுடி உடையவர்கள், அதிகம் குடிப்பவர்கள், மொழியை விளங்க முடியாது, அதிகம் பேசுவார்கள், திருப்தி கொள்பவர்கள், இனிமையானவர்கள், வாழ்வை நேசிப்பவர்கள்.

2) டென்மார்க் இளைஞர்களின் அபிப்பிராயம்.

அ) நோர்வேஜியர்கள் பனிச்சறுக்கியில் நிற்பவர்கள்

ஆ) சுவீடன் நாட்டவர்கள் நீள்முடி உடையவர்கள், அதிகம் குடிப்பவர்கள்

3) நோர்வே இளைஞர்களின் அபிப்பிராயம்.

அ) டென்மார்க் நாட்டு இளைஞர்கள் சுதந்திரம் உடையவர்கள், நல்ல சுபாவம் கொண்டவர்கள். விழாக்களில் குடிப்பது போலக் குடிப்பவர்கள், புரிந்துகொள்வது கடினம்.

ஆ) சுவீடன் இளைஞர்கள் எங்கள் சகோதர நாட்டவர், நீண்ட வெளிர்முடி கொண்டவர்கள், சற்றே அசட்டுத்தனமான நகைச்சுவை உடையவர்கள், நல்லவர்கள்.

இந்தக் கருத்துகள் மூன்று நாடுகளையும் சேர்ந்த 450 இளைஞர்களிடம் 26 கேள்விகள் கேட்கப்பட்டு விடையாகப் பெறப்பட்டவை. பொதுவான விடயங்கள் பற்றியும் கேள்விகள் கேட்கப்பட்டன. அவற்றில் ஒன்று, கணனியினால்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உலகத்தைச் சிறப்பானதாக்க முடியுமா? என்பது. பலரது பதில் கணனியால் பேசமுடியுமா, அதனிடம் அன்பை எதிர்பார்க்க முடியுமா என்பதாக இருந்தது.

ஐரோப்பிய பொதுச்சந்தை பற்றியும் இவர்களிடம் கேட்கப்பட்டது. பாதிப்பேர் தமக்கு எதுவும் தெரியாது என்றுவிட்டனர். காற்பங்கினர் பொதுவான ஒரு வடக்குப் பிரதேசம் அவசியம் எனக் கூறினர். டென்மார்க் இளைஞர்கள் பொதுச் சந்தையை எதிர்க்கின்றனர். இவர்கள் எல்லோரும் (பெரும்பாலும்) மழைக்காடுகள் அழிக்கப்படுவதையும் ஓசோன் படை அழிக்கப்படுவதையும் காரசாரமாக எதிர்க்கின்றனர்.

இவர்களது முக்கிய கவனத்தைக் கவர்வது பொப்பிசை நட்சத்திரங்களே. விளையாட்டு வீரர்கள் 5வது இடத்தையும் கடவுள் யேசு 10வது இடத்தையும், 15வது இடத்தைப் பள்ளி ஆசிரியரும் பெறுகின்றனர்.

அனேகம்பேர் தமது அயல் மொழிகளைவிட ஆங்கிலம் கற்பது சுலபம் என நினைக்கின்றனர்.

- தேவதாஸ் -

---

# சித்திரலேகாவின் விளக்கம்

சுவடுகள் ஆசிரியருக்கு,

சுவடுகள் 34இல் திரு.சிவசேகரம் அவர்கள் எழுதிய சிவரமணியின் கவிதைகள்; விமர்சனத்தின் தற்கொலை என்ற குறிப்பை மிகக் காலந் தாழ்த்தியே படிக்க நேர்ந்தது.

சுவடுகளில் முன்பு வெளியான சிவரமணியின் கவிதை, வாழ்க்கை, தற்கொலை பற்றிய எனது கட்டுரை பற்றிய சில சந்தேகங்களை அவர் எழுப்பியுள்ளார்.

எனது கட்டுரையை மாத்திரமல்ல; சிவரமணி பற்றியும் அவர் எழுத்து, வாழ்ந்த சூழல் பற்றியும்கூட சிவசேகரம் விளங்கிக் கொள்ளவில்லை என்பது தெரிந்தது.

எனினும் சிவசேகரம் எழுப்பியுள்ள கேள்விகளை விவாதிப்பது சிவரமணியின் கவிதைகள் பற்றி மேலும் தெளிவு அளிக்கும்.

ஆனால் அவரது கவிதைகள் அனைத்தும் வாசகர்க்குப் பரவலாகாத நிலையில் நாம் விவாதிப்பது 'அரங்கின்றி வட்டாடியதாக' முடியும்.

விரைவில் சிவரமணியின் கவிதைகளை நூலாக வெளியிட முயல்கிறோம். சிவரமணியின் கவிதைகள் யாவற்றையும் ஒன்றாகப் படிக்கும் சந்தர்ப்பம் சிவசேகரத்திற்கும் கிடைக்கும் என நம்புகிறோம். (இதுவரை அவர் ஏழு கவிதைகளைத்தான் படித்ததாய்க் கூறுகிறார்.) மேலும் இத்தொகுதி சிவசேகரம் எனது கட்டுரை தொடர்பாக எழுப்பியுள்ள கேள்விகட்கு பதில் அளிக்கும் வல்லமையும் கொண்டிருக்கும் என நினைக்கிறேன்.

சித்திரலேகா,
செப்டம்பர்' 92
இலங்கை

www.tamilarangam.net


சுவடுகள்

மாத இதழ்

ஸ்தாபிதம்: புரட்டாதி1988

ஆசிரியர் குழு

துருவபாலகர்

சந்தா: பன்னிரு இதழ்களுக்கு

300 குறோணர்கள்

முகவரி

Herslebs Gt43,

0578 Oslo


## நோர்வேயும் தமிழர்களும்!

அண்மையில் நோர்வே அரசு சில தமிழர்களைத் திருப்பி அனுப்பும் முடிவை எடுத்துள்ளது. இந்த முடிவு நோர்வேக்கு மட்டும் பொதுவானதல்ல. அகதிகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகராலயம் அண்மையில் விடுத்த அறிக்கை ஒன்றின் அடிப்படையில் பல ஐரோப்பிய நாடுகள் இவ்வாறான முடிவுகளை எடுத்துள்ளன. இந்த முடிவை எதிர்த்துப் பல தமிழ் அமைப்புகள் குரல் எழுப்பியிருக்கின்றன. இது வரவேற்கத் தக்கதே. ஆனால் இக்குரல்கள் யாவும் தனித்தனியாக இருப்பது எமது பலவீனத்தையே காட்டுகிறது.

அடிப்படையில் இந்த முயற்சி வரவேற்கத்தக்கதே. ஆனால் எமது குரல்கள் தமிழகத்தில் இருந்து அகதிகள் பலவந்தமாகத் திருப்பி அனுப்பப்படும்போது மௌனம் சாதித்துவிட்டு இப்போது மாத்திரம் எழுவது எந்த வகையிலும் நியாயமில்லாதது. அதைவிட இப்போது. இந்தப் பிரச்சனை தொடர்பாக தமிழரைப் பிரதிநிதித்துவம் செய்யும் அனைவரும் ஒற்றுமையாகப் போராட வேண்டும் என்பது சுவடுகளதும் வேறு பலரதும் கருத்து. அவ்வாறான ஒற்றுமை அமைப்புகளது அல்லது தனிநபர்களது சுயநலங்களுக்காக இருக்கக்கூடாது. அதைவிட முக்கியம், ஒற்றுமை என்பது இங்கு நாம் தப்பி வாழ்வதற்காக மாத்திரம் இருக்கக்கூடாது. பதிலாக இந்த ஒற்றுமை தாய்நாட்டின் விடுதலை நோக்கியதாகவும், அங்கு வாழும் மக்களது துயரங்கள் நீங்கும் வகையிலும் அமையவேண்டும்.

இங்கிருந்து அகதிகள் எவரும் பலவந்தமாகத் திருப்பி அனுப்பப்படக் கூடாது என்பதில் சுவடுகள் உறுதியாக இருக்கிறது. நோர்வே அரசின் இந்த நடவடிக்கையை ஆரம்பத்தில் இருந்தே சுவடுகள் எதிர்த்துள்ளதுடன், தமிழரெவரும் திருப்பி அனுப்பப்படாது பாதுகாக்கும் சில நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளது, தொடர்ந்தும் ஈடுபடும். இலங்கையின் இனப்பிரச்சனை எல்லோரது அங்கீகாரத்துடனும் முற்றாகத் தீர்க்கப்படும்வரை எவரையும் பலவந்தமாகத் திருப்பி அனுப்பக்கூடாது என்பதே சுவடுகளின் நிலைப்பாடு.

## படுகொலையும் விடுதலையும்

அண்மையில் கிழக்கு மாகாணத்தில் நிகழ்ந்த முஸ்லிம் மக்களின் படுகொலைகள் சர்வதேச ரீதியில் பெரும் கவனத்தை ஈர்த்துள்ளன. பிரிட்டிஷ் அரசு இந்தப் படுகொலைகள் தொடர்பாக, ஏற்கனவே இலங்கைமீது விதித்திருந்த ஆயுத விற்பனைத் தடையைத் தளர்த்தியுள்ளது. வழமைபோலவே, இந்தப் படுகொலைகளையும் யாரும் உரிமை கோரவில்லை.

www.tamilarangam.net

முஸ்லிம் மக்களாயினும் வேறு எந்த இனத்தைச் சார்ந்த பொதுமக்களாயினும் படுகொலை செய்யப்படக் கூடாது எனத் தொடர்ச்சியாகப் பல பொது அமைப்புகள் குரல் எழுப்பிவருகின்றன. ஆனால், முஸ்லிம் ஊர்காவற் படைகள் நிகழ்த்திவரும் தமிழர்மீதான படுகொலைகள் பற்றி முஸ்லிம் அமைப்புகள் ஏதும் பேசாமல் மௌனம் சாதிக்கின்றன. அடிப்படையில் இது நேர்மையற்ற போக்காகும்.

முஸ்லிம் தலைமைகளுக்குப் புரியாத இன்னொரு விடயமும் உண்டு. தற்போது தமிழர்மீது தாக்குதல் தொடுக்கும் சிங்கள இனவாதம் தனது தேவை கருதி முஸ்லிம் மக்களுக்கு எதிராகத் திரும்ப அதிக நேரம் எடுக்காது என்பதே அது.

தமிழ் மக்கள் கொல்லப்படும்போது குரலெழுப்பும் தமிழ் அமைப்புகள், முஸ்லிம் மக்கள் கொல்லப்படுகையில் பேசாதிருப்பதும் கவலைக்குரியது. எல்லாப் படுகொலைகளும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டும். படுகொலைகள் பற்றி சுதந்திரமான விசாரணை நிகழ்த்தப்பட்டு, அவற்றிற்கு யார் காரணமாக இருந்தாலும் தண்டிக்கப்பட வேண்டும்.

## போரும் சமாதானமும்

இலங்கையில் இனப்பிரச்சனை தொடர்பான பேச்சுகளில் முன்னேற்றம் காணப்படுவதாக அடிக்கடி செய்திகள் வருவதுண்டு. ஆனால் முன்னேற்றம் என்பது சொல்லளவிலேயே நின்றுவிடும். தற்போது பாராளுமன்றத் தெரிவுக்குழு சில உடன்பாடுகளுக்கு வந்துள்ளது. புலிகளைச் சந்தித்த சர்வதேசக் குழு ஒன்றிடம் தமது சமாதானத்துக்கான அறிகுறிகளைப் புலிகளும் காட்டியுள்ளனர். இது அனைத்து இலங்கையர்களுக்கும் மகிழ்ச்சி தரக்கூடிய செய்தி.

பாராளுமன்றத் தெரிவுக்குழு வைத்துள்ள திட்டம் வடக்கு கிழக்கை சில அடிப்படைகளில் பிரித்தும் சில அடிப்படையில் இணைத்தும் வைத்துள்ளது. அனைத்துத் தமிழ் அரசியற் குழுக்களாலும் ஏற்கப்பட்டு இந்தத் தீர்வுத் திட்டம் நடைமுறைக்கு வரமுன்னர் இதுபற்றிய அபிப்பிராயங்கள் வடக்கு கிழக்கு மக்களிடம் வாக்கெடுப்பு மூலம் அறியப்பட வேண்டும். இல்லாவிடில் மீண்டும் அது பேரினத்தின் திணிப்பாகவும், கசப்புணர்வுகளை வளரத் தூண்டும் ஒரு காரணமாகவும் அமையும். எத்தகைய தீர்வாயினும் அது தமிழ், முஸ்லிம் மக்களது சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து, அதன் அடிப்படையிலேயே வரையப்பட வேண்டும். இல்லாவிடில் தீர்வும் சமாதானமும் மீண்டும் எவருக்கும் கிடையாத ஒன்றாகிவிடும்.

சுவடுகள் 39,
ஐப்பசி 92.

Suvadugal, Herslebs Gate 43, 0578, Oslo

www.tamilarangam.net

நிரோகா

# பத்தாண்டு பிளிட்ஸ்



பிளிட்ஸ் பற்றி எம்மில் பலர் கேள்விப்பட்டிருப்போம். கிழிந்த ஊத்தையான உடைகளுடன் காலநிலைக்கோ, நாகரீகத்துக்கோ ஏற்ற உடைகள் அணியாமல் தலைமயிரை நடுவில் மட்டும் வைத்து இரு கரையும் வழித்து, அதற்கு விதவிதமான சாயம்பூசி காதில் தோடும், மூக்கில் மூக்குத்தியுமாக எதுவித ஆடம்பரங்களுமின்றி வாழும் பலர்தான் பிளிட்ஸ் என அழைக்கப் படுகின்றனர். (ஆனால் இதே கோலங்களுடன் வேறு ஐரோப்பிய நாடுகளில் இவ்வாறு திரிபவர்கள் நாஜி ஆதரவாளர்களாகவும், வெளிநாட்டவர்களுக்கு எதிராகவும் உள்ளனர்)

எம்மவர்களால் 'குருவிக்காரர்' என அழைக்கப்படும் இவர்களின் அலங்கோலங்களையும், ஊத்தைகளையும் கண்டு முகம் சுழிப்பவர்களே எம்மில் அதிகம். தவிர இவர்களை வெறும் ஹிப்பிகளாகவும் எம்மில் சிலர் கருதுகிறோம். உண்மையில் ஹிப்பிகளுக்கும் இவர்களுக்கும் இடையே பல அடிப்படை வேறுபாடுகள் உள்ளன.

வியட்நாம் யுத்தத்தின் சீரழிவே ஹிப்பிகளின் தோற்றத்துக்குக் காரணம் எனக் கூறப்படுகிறது. ஆனால் பிளிட்ஸின் தோற்றத்துக்கு என்ன காரணம் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் அவர்களின் செயல்பாடுகளைக் கூர்ந்து அவதானிக்கும் ஒருவர் பிளிட்ஸ், ஜனநாயகத்துக்காகப் போராடும் ஒரு அமைப்பு என்றே கூறுவர்.


ஆண ம்ர்டால் தலைமையிலான குடிவரவுக்கெதிரான நோர்வேஜியர்கள் அமைப்பு (FMI) போன்ற பல இனவாத அமைப்புகள் நடாத்தும் கூட்டங்களுக்கு, நேரில் சென்று ஆர்ப்பாட்டம் தெரிவித்தல் அல்லது எதிர்க்கூட்டம் போடுதல், இனவெறியர்களின் வன்முறையை வன்முறையாலேயே எதிர்கொள்ளுதல், கார்ள் இ ஹாகனின் (இனவாதம் நிறைந்த முன்னேற்றக் கட்சியின் தலைவர்) கூட்டத்தில் கூழ்முட்டை எறிந்து குழப்புதல், நேட்டோ போன்ற இராணுவக் கூட்டமைப்பு நிகழ்த்தும் மாநாடுகள் கூட்டங்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தல், மூன்றாம் உலக நாடுகளுக்கும், போராடும் சிறுபான்மை இனங்களுக்கும் ஆதரவாக இருத்தல், இன நிற வெறிகளை எதிர்த்துப் போராடுதல் என நோர்வேஜிய சமூகத்தில் பிளிட்ஸ் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது.

பிளிட்ஸின் நடவடிக்கைகள் பெரும்பாலும் வன்முறையை ஆதாரமாகக் கொண்டவை. முக்கியமாக பொலிஸார் இவர்களது நடவடிக்கைகளை வன்முறை மூலம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




கட்டுப்படுத்த முயலும்போது, இவர்களும் வன்முறையில் இறங்கிவிடுகின்றனர். இதுபற்றி வேறுபட்ட கருத்து இருந்தபோதும், நல்ல நோக்கங்களுக்காகத் தொடர்ந்து போராடிவரும் பிளிட்ஸின் பத்து வயது நிறையும் இந்த வேளையில் அவர்களை வாழ்த்துவது நம் கடமையல்லவா?

## கொர்பச்சேவ் கிழங்கு!



உலக மாற்றத்துக்குத் திறவுகோலாக வர்ணிக்கப்படும் மிகயில் கொர்பச்சேவ் பதவியில் இருந்து விலகிவிட்டாலும் சர்வதேச அரங்கில் , அவரது மதிப்பு இன்னும் குறைந்துவிடவில்லை. அண்மையில் கொர்பச்சேவ் அமெரிக்கா, ஜேர்மனி போன்ற நாடுகளில் பல நிறுவனங்களின் அழைப்பையேற்று அங்கெல்லாம் சென்று வந்தார். இந்த வரிசையில் இஸ்ரேலும் தப்பவில்லை

புதுவகை உருளைக்கிழங்கொன்றுக்கும் இப்போது 'மிகயில்' எனப் பெயர் சூட்டப் பட்டுள்ளது. நாங்கள் சிலரைக் கேலியாகக் 'கிழங்கன்' என்று அழைப்பதுண்டல்லவா? உண்மையில் கொர்பச்சேவை அப்படி அழைத்தாலும் தவறில்லை (சட்டப்படி?).

– குகன் –

www.tamilarangam.net



## வர்ணஜாலங்கள்

### பெண் ஓவியர்



நோர்வேயின் அயல் நாடுகளில் ஒன்றான பின்லாந்து பற்றித் தமிழில் அவ்வளவாக அறியப்படவில்லை. குறிப்பாக கலை இலக்கிய விடயங்களில் அதிகம் அறியப்படவில்லை என்று சொல்லலாம்.

பின்லாந்து இவ்வருடம் சுதந்திரம் அடைந்த 75ஆது ஆண்டைக் கொண்டாடுகிறது. அத்துடன் பின்லாந்தின் தலைசிறந்த பெண் ஓவியரான ஹெலனா ஷார்ஃப்பெக்கின் **(Helene Schjerfbeck)** 150வருடப் பிறப்பையும் கொண்டாடுகிறது. பின்லாந்தின் சிறந்த இசைக் கலைஞரான சீபெல்விஸ் இசைத் துறையில் மதிக்கப்படுவது போல ஓவியத் துறையில் ஹெலனா குறிப்பிடப்படுகிறார். இருவரும் உலகப் பிரசித்தி பெற்றவர்கள்.

"கலைஞன் உணர்வுகளின் வேலையாள்" எனக் கூறிய ஹெலனின் 200க்கும் அதிகமான ஓவியங்கள் கோடை காலத்தில் காட்சிக்கு வைக்கப் பட்டன. தினசரி 3500க்கு மேற்பட்ட மக்கள் வரிசையில் நின்று இந்த சிருஷ்டிகளைக் கண்டுகளித்தனர்.

1880இல் பாரிசுக்கு ஓவியம் பயிலச் சென்ற ஹெலனா அங்கு பல புகழ்பெற்ற நோர்வேஜிய ஓவியர்களைச் சந்தித்தார். பத்தாண்டுகள் அங்கு தங்கியிருந்து ஓவியம் பயின்றபின் மேலும் ஓவியம் பற்றி அறிந்துகொள்ள இங்கிலாந்து, இத்தாலி ஆகிய நாடுகளுக்குப் பயணம் செய்தார். அதன்பின் வேறு நாடுகளுக்குச் செல்ல அவர் விரும்பவில்லை.

இவரது தலைசிறந்த ஓவியம் **(Konvalesceater)** 1888இல் தீட்டப்பட்டது. அதுபற்றித் தனது ஓவிய நண்பர் ஒருவருக்கு எழுதிய கடிதத்தில்

www.tamilarangam.net



"நான் பார்க்க விரும்புவது மனிதர்களை. அவர்கள் எவ்வாறு சிந்திக்கிறார்கள் என்பதைச் சித்தரிக்க விரும்புகிறேன்" என எழுதினார். கடைசிக்காலத்தில் ஏராளமான சுயபிரதிமைப் படங்களை (Self Portraits) வரைந்தார். இவை ஏறத்தாழ இருநூறுக்கு மேல்.

1946இல் புற்றுநோயால் மரணிக்கும்வரை அவர் வரைந்து கொண்டிருந்தார். தனது நண்பருக்கு எழுதிய இறுதிக் கடிதத்தில் "மக்கள் இலகுவில் எனது படைப்புகளைப் புரிவதில்லை, என்னை மறந்து விடுகின்றனர்" என எழுதினார். ஆனால் இன்று அவரது ஓவியங்களைப் பெரியளவில் மக்கள் திரண்டு வந்து பார்வையிடுகின்றனர்.


– சித்திரகுப்தன் –



www.tamilarangam.net



# எப்பொருள் யார்வாய் கேட்பினும்...



<u>வெளிநாட்டுத் தமிழர்கள் துரோகிகளா?</u>

நாட்டில் கொடுமையோ கொடுமை நடக்குது . கொடுமை காரணமாகவே நாமெல்லாம் இங்கு மேலை நாடுகளுக்கு வந்துள்ளோம். ஆயினும் மிகவும் கவலை தரும் விஷயம் என்னவெண்டால் நாட்டைச் சாட்டி இங்கு வாழும் நாம் எந்தளவுக்கு நாட்டை நினைத்து நாட்டில் நல்ல நிலை வாறதுக்கு உழைக்கின்றோம்? இந்தத் தொகை மிக மிக சிறியதாகவே உள்ளது. இது நமக்கு மிகவும் கவலை தரும் விஷயம், எமக்கு நாட்டுப் பற்று இல்லையா? தமிழ்ப் பற்று இல்லையா? அப்ப ஏன் இப்படியிருக்கிறம்? இன்னெரு வகையில பார்த்தால் நாங்கள் நாட்டில சாகிற சனத்தால தான் இங்கு வாழுறம் எண்டும் சொல்லலாம். இதனால் அந்த சனத்தை நினைச்சு நாங்கள் ஏதாவது நல்ல விஷயம் செய்யக் கூடாதா? செய்யாமல் இருக்கிறது மனச்சாட்சிக்கு விரோதமில்லையா? இந்தக் கேள்வி எனது மண்டைக்குள் ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கிறது.

<u>மூன்று இலட்சம் தமிழர் வெளிநாட்டில்.</u>

"தம்பி மேல சொன்ன விஷயத்தோட இன்னொரு விஷயமும் எனக்குப் புரியாத புதிரா இருக்குது "

"என்ன எண்டு சொல்லுங்கோ அண்ணை " என்றேன்.

"இல்லை தம்பி ஒரு நாட்டிலை

*விசித்திர கவிராயருக்கு ஓரளவு சில விசயங்கள் தெரியும். மனிதனை மனிதன் கொல்வது சரியென அவர் ஒப்புக் கொள்வதில்லை.*

www.tamilarangam.net



பிரச்சனை எண்டால் அதிக அளவிலை மக்கள் வேற நாட்டுக்கு தற்காலிகமாக குடிபெயர்ந்து போறது வழக்கம். ஆனா தமிழர் நாட்டிலை நடக்கிற பிரச்சனையால நாட்டை விட்டு வெளியேறி கிட்டத்தட்ட 2 இலட்சம் பேர் இந்தியாவிலையும் கிட்டத்தட்ட ஒன்றரை இலட்சம் பேர் ஐரோப்பா, கனடா, அமெரிக்கா, அவுஸ்ரேலியா எண்டு வாழுறம் இவ்வளவு தொகையாக அந்நிய நாடுகளில நாம் வாழ்ந்தாலும் ஏன் எங்கட போரட்டத்தின்ரை நியாயத்தைச் சொல்லி எமக்கு ஆதரவு திரட்ட முடியேல? சர்வதேச அங்கீகாரத்தை பெற முடியவில்லை? சரியான சர்வதேச ஆதரவுள்ள தென்னாபிரிக்க மக்களின் போராட்டம் போல் எமக்கு இல்லை? அதோட சொன்னால் நம்ப முடியாமல் இருக்கு இத்தனைக்கும் ஐரோபபா, அமெரிக்காவிற்கு குடிபெயர்ந்து வாழும் தென்னாபிரிக்க சனத்திண்ட தொகையை விரல் விட்டு எண்ணிப் போடலாம். இவ்வளவு கொஞ்ச சனமே வெளியிலை இருந்து கொண்டு இவ்வளவு பெரிய ஆதரவை எடுக்க முடிஞ்சுதெண்டால் ஏன் இலட்சக் கணக்கிலை வாழ்கிற எங்களால துளிகூட ஆதரவை எடுக்க முடியவில்லை? "

"அண்ணை உம்மடை கேள்வி நூறத்துக்கு நூறு நியாயம் தான்!" என்று என்னை அறியாமலே "படார்" என்று பதில் சொன்னேன்!

## வெளிநாட்டவர்கள் பறவாயில்லை!

நோர்வேயில் நிரந்தரமாக வசிக்கும் வெளிநாட்டவர்கள், நோர்வேஜியர்களை விடவும் குறைவாகவே குற்றச் செயல்களில் ஈடுபடுவதாக அண்மையில் நிகழ்ந்த ஆய்வு ஒன்று கூறுகிறது.

குற்றத்தில் ஈடுபட்டதற்காகத் தண்டிக்கப் பட்டவர்களில் இருபது வீதத்தினர் (ஏனைய) ஸ்கன்டினேவிய நாடுகளில் இருந்து வந்தவர்கள். தண்டிக்கப்பட்ட வெளிநாட்டவர்களில் 44 வீதத்தினர் ஐரோப்பியர்கள். வெளிநாட்டவர்களில் ஆபிரிக்கர்களிடையே அதிகளவு வீதத்தினர் தண்டிக்கப் படுகின்றனர். ஆசியர்களே மிகக் குறைவாகத் தண்டிக்கப் படுகின்றனர். 15 முதல் 44 வயது வரையிலான ஆண்களில் 13.3% நோர்வேஜியர்கள் கடந்த வருடம் நீதிமன்றத்தால் தண்டிக்கப் பட்டுள்ளனர். இந்த வீதம் ஆபிரிக்கர்களிடையே 21 ஆகவும், ஆசியர்களிடையே 8.9 ஆகவும் உள்ளது.

பெண்கள் இவ்வாறு ஆய்வு செய்யப்பட்ட போது வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள் மிகமிகக் குறைவாகவே குற்றச் செயல்களில் ஈடுபட்டுள்ளனர் என்பது புலனாகிறது. ஆனால் வெளிநாட்டவர்கள், நோர்வேஜியர்களைவிட அதிக காலம் சிறையில் உள்ளனர் - முக்கியமாகப் பலர் போதைவஸ்துக் காரணங்களுக்காகத் தண்டிக்கப் படுவதால்- எனவும் அந்த ஆய்வு தெரிவிக்கிறது.

வெளிநாட்டவர்கள் குறிப்பாகக் கறுப்புத் தலைமயிரைக் கொண்டவர்கள் அதிகளவில் குற்றச் செயல்களில் ஈடுபடுவதாகக் கடந்த காலங்களில் நிலவிவந்த அபிப்பிராயங்களைத் தகர்க்கிறது இந்த அறிக்கை.

மாநகரசபைகள் திணைக்களத்திற்காக ஸ்ரூர்லா ஃபல்க் என்பவர் நிகழ்த்திய ஆய்வுகளிலேயே இவ்வாறு தகவல்கள் வெளிவந்துள்ளன.

- சிவன் -

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ரோஜா




மணிரத்தினத்தின் படங்கள் தொழில்நுட்பத்தில் சிறந்தவை. சில படங்களில் அவர் எடுத்துக்கொள்ளும் கருவும் சொல்லும் விதமும் சர்ச்சைக்குரியன, உதாரணம் நாயகன், அஞ்சலி. றோஜாவும் இவை போன்றதுதான். இந்தியத் துணைக்கண்டத்தில் பல தேசிய இனங்கள் எழுச்சி கொள்ளும் காலத்தில், இந்தியாவில் பல தேசிய இனங்கள் தமது அடையாளத்தை உறுதிப்படுத்தப் போராடும் இந்தக் காலத்தில் இந்தியா எல்லாம் ஒன்றுதான் என்று இந்தப் படத்தின்மூலம் சொல்ல வருகிறார் மணிரத்னம்.

ஒரு கலைஞனுக்குத் தான் நினைக்கும் கருத்தைச் சொல்லும் உரிமை இருக்கவேண்டும். எனவே இந்திய ஒருமைப்பாடு பற்றி மணிரத்னம் சொல்வது தவறாகாது. ஆனால், அவர் வேண்டுமென்றே பல விடயங்களை மறைத்திருக்கிறார். முக்கியமாக காஷ்மீர் போராளிகள் பாகிஸ்தானின் கட்டுப்பாட்டில் இருப்பது போலவும் அவர்களது ஆயுதங்களைப் பெற்றுப் படுகொலைகள் போன்றவற்றில் ஈடுபடுவதாகவும் கூறுகிறார். இது முற்றிலும் உண்மையல்ல. பாகிஸ்தானின் உதவியைப் பெறாமலே போராடும் அமைப்புகள்பற்றி மணிரத்னம் என்ன சொல்கிறார்? ஒன்றுமில்லை.

காஷ்மீரில் இந்திய ராணுவம் பல கொடுமைகளை இழைக்கிறது. ஆனால் மணிரத்னத்தின் பார்வையில் அவை ஒன்றுமில்லை, பதிலாக ராணுவத்தினர் நாட்டின் ஒருமைப்பாட்டைப் பாதுகாக்கப் போராடுவதாக மட்டுமே கூறப்படுகிறது. இவற்றையெல்லாம்விட மிக அபத்தம் என்னவென்றால், (மத்திய) அமைச்சர் மிக இலகுவாகச் சந்திக்கக் கூடிய ஒருவராக, அதுவும் ராணுவ மரியாதை நேரத்தில், இருப்பது - இப்படி இருந்தால் இந்தியாவில் பாதிப்பிரச்சனை எப்போதோ தீர்ந்திருக்கும்.

மணிரத்னத்தின் திறமையைக் கதை சொல்லும் விதத்தில் காணமுடிகிறது. ஆனால் இப்படியான அடிப்படைப் பிழைகளைத் திட்டமிட்டே செய்வது ஒரு கலைஞனுக்கு அழகாகாது. இதற்கு மணிரத்னம் நொண்டிச் சாட்டுகள் ஏதாவது கூறலாம். அவ்வாறுதான் ஈழத்துப் போராளிகளைப் பயங்கரவாதிகளாகச் சித்தரித்த பாலச்சந்தரும் (புன்னகை மன்னன்) கூறினார்.

இப்படியான கலைஞர்கள் ஒன்றை விளங்கவேண்டும்: நியாயமான போராட்டங்களைப் பற்றி எவ்வளவு மாசு கற்பித்தாலும், போராட்டத்தை இடைநிறுத்துவது முடியாத காரியம்.

மணி.

www.tamilarangam.net

வித்தியாசமாகப் படம் எடுப்பவர் மணிரத்தினம் டெக்னிக்காகவும் அவர் தமிழ்த் திரை உலகிற்கு நல்ல நல்ல விடயங்களை அறிமுகப்படுத்தியவர். கதை சொல்லும் பாங்கு மிகவும் இலாகவமானது. இவ்வளவு அம்சங்களும் இந்த படத்திலும் உண்டு. ஆயினும் எல்லாம் இந்தியா எனும் கருத்து சரியாகப்படவில்லை. அதை விட எடுத்த கதையிலும், உதாரணத்திற்கு இராணுவமுகாமிற்கு அருகிலேயே தீவிரவாதிகள் ஆயுதத்துடன் சர்வசாதாரணமாக நடமாடுவதாக காட்டியிருப்பது சிரிப்பிற்கிடமாகவுள்ளது. மணிரத்தினம், சுஜாதா, பாலச்சந்தர் எல்லோரும் சேர்ந்து இந்திய ஒற்றுமையை கட்டிக்காக்க தமது பங்களிப்பைச் செய்வதாக நினைக்கலாம். ஆனால் காஷ்மீர் மக்களின் உண்மையான உணர்வுகளையும், உரிமைகளையும் மதிக்கும் வரை இது ஈடேறப் போவதில்லை, வெறும் கோஷமாகவேயுள்ளது. இன்னொரு விடயம் காஷ்மீர் தனிநாட்டுக்காக போராடுபவர்களை மோசமானவர்களாக காட்டுகின்றனர். அவர்களைக் கொடுமைக்காரர்களாக காட்டுகின்றனர். அதேநேரம் இந்திய இராணுவம் செய்யும் அடாவடித்தனம் துளிகூட காட்டப்படவில்லை ஏன்?

– ராஜன் –

மணிரத்தினம் இதுவரை எந்தப் படத்திலும் தனது முத்திரை பதிக்கவில்லை. பாரதிராஜா, பாலச்சந்தர் தந்த அளவுக்குக்கூட. அதாவது மணிரத்தினத்தின் சிறந்த படைப்பென புகழப்படும் 'நாயகன்' படம், ஆங்கிலப் படமான **'God Father'** இன் **Copy**. அதோடு இவர் எல்லாம் உயர்ந்த, நடுத்தர மக்கள் பற்றித்தான் படம் எடுப்பவர். அதோடு கதை சொல்லும் பாணி நல்லதென பலர் கூறுகின்றனர். நான் அப்படி நினைக்கவில்லை. உதாரணமாக ரோஜாவில் வரும் முற்பகுதி தேவையற்றது. அதாவது முற்பகுதியில் வரும் பாத்திரங்கள் பிற்பகுதியில் மறக்கப்படுகின்றன. முற்பகுதியில் அறிமுகமாகும் பாத்திரங்கள் பிற்பகுதியில் தேவைக்கு ஏற்பவே அறிமுகப்படுத்தப்பட்டு கதை பின்னப்பட வேண்டும். அதுவே சிறந்த கதையமைப்பு, பின்னோட்டமாக இருக்கும். இதற்கு நல்ல உதாரணம் பாலச்சந்தரின் 'இருகோடுகள்'. அத்துடன் இது 'எல்லாம் இந்தியா' எனச் சொல்கின்றது. மணிரத்தினம் இதிலும் தனது முத்திரையை பதிக்கத் தவறி விட்டார்.

– யோ.ஈஸ்வரன் –

## வற்றிப் போனது ஹொலிவூட்

வருடா வருடம் மலை போல் திரைப்படம் எடுத்துக் குவித்த வற்றாத ஊற்று எனப்படும் ஹலிவூட் திரையுல்கம் இந்த வருடம் வற்றிப் போயிற்று. இந்த வருடம் கடந்த வருடம் தயாரித்த படங்களுடன் ஒப்பிடும் போது அதன் தொகை 20 வீதத்தினால் குறைந்துள்ளது.

வீடியோ வெளியீட்டாளர்களும் அடுத்த வருடம் வீடியோ வெளியீடு பெரிய சரிவைத் தரப் போகின்றது என எச்சரிக்கைக் குரல் எழுப்பியுள்ளனர்.

ஏன் கவலை குப்பையாகக் குவியும் இந்தியாவிடம் கை நீட்ட வேண்டியது தானே?

– முகுந்தன் –

www.tamilarangam.net

# சிரி சிரி மும்வா

சிரி சிரி மும்வா


சிரிப்பதால் ஆயுள் நீளமாகும் என்பது விஞ்ஞான முடிவு. சனங்களை கவலை மறக்கச் சிரிக்க வைப்பது இலகுவானது அல்ல. சிரிக்க வைக்கும் தொழில் தான் உலகில் கஷ்டமான தொழில். முன்னர் வெறுமனே நகைச்சுவை நடிகர்களும், பேச்சாளர்களும் இதைச் செய்து வந்தனர். இன்று இத்தோடு சேர்ந்து நகைச்சுவை ஓவியர்கள் ( காட்டூனிஸ்டுகள்) சேர்ந்து கொண்டுள்ளனர். தமிழில் நகைச்சுவையாளர்கள் என்றால் உடனடியாக மதன் ஞாபகம் வரும். ஈழத்தைப் பொறுத்த வரை சிரித்திரன் சுந்தர் ஞாபகம் வரும்.

ஒக்டோபர் 17ம் திகதி நோர்வேயில் நாலாவது சர்வதேச நகைச்சுவை ஓவியர் போட்டி நடைபெற்றது. இதில் 30 நாடுகளைச் சேர்ந்த 105 ஓவியர்கள் பங்கெடுத்தனர். இப்போட்டியில் 350 நகைச்சுவை ஓவியங்கள் வைக்கப்பட்டன.

இந்த வருடம் இப்போட்டியில் முதல் பரிசைத் தட்டிச்சென்றவர் 'யூகோஸ்லாவிய' நாட்டைச் சேர்ந்த Marian Bachraty எனும் நகைச்சுவை ஓவியராவார். முதலாவது பரிசு பெற்ற நகைச்சுவை ஓவியத்தையே இந்த படத்தில் காண்கிறீர்கள்.

"இந்த வருடம் வந்த ஓவியங்களில் பல எனக்குப் புரியவேயில்லை, பல எனக்குப் பிடிக்கவில்லை" என நடுவர் பத்திரிகைகளுக்குத் தெரிவித்துள்ளார். இந்த வருடம் முதன் முறையாக கிழக்கு ஐரோப்பிய நாடுகள் பங்கு கொண்டுள்ளன.

* சித்திரகுப்தன் *



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## வேண்டவே வேண்டாம்



ஒகஸ்ற் மாதக் கடைசியில் அடுத்தடுத்து பரவலாக புதிய நாஸிகளின் தாக்குதல்கள் நடைபெற்றன. இதில் மோசமான சம்பவம் Rostock நகரில் நடைபெற்றது. இதை எதிர்த்து இடதுசாரிகளும் மனிதாபிகளுமாக ஆயிரக்கணக்கானவர்கள் நாஸிஎதிர்ப்பு ஊர்வலத்தை மேற்கொண்டனர். இந்த அமைதியான ஊர்வலத்தில் புதிய நாசிகள் குழப்பம் விளைவித்தனர்.

" அன்புக்குரிய வெளிநாட்டவர்களே எங்களை விட்டுப் போகாதீர்கள், எங்களை தனிமையில் விடாதீர்கள் "

" இனிமேல் எப்போதும் கிட்லர் வேண்டாம்! "

போன்ற கோஸங்கள் நாசி எதிர்ப்பாளர்களால் முழங்கப்பட்டது.

- சேதுபதி -

## அம்மா

அந்த இனிய மாலையின்
நிசப்தத்தைக் கிழித்து
அலறினாள் அவள்.

"வேண்டாம். ஒன்றுமறியா அப்பாவி அவன்
வேண்டாம். விடுங்களவனை,
அற்பன் ஏதுமறியான்"

புழுதி மேலெழுந்து பறந்தது.
புறங்கைகள் நிலத்தில் தோய்ந்து
தோலுரிந்தது.

மீண்டும் புறங்கைகள்
முட்டி போட்டு முக்காலிட்ட
முழந்தாளில் ஊன்றி
முகத்திற்கு முண்டி கொடுத்தன.
மூச்சிட்டாள் அவள்.

"நீ ஒன்றும் கெஞ்சாதே தாயே.
இவர்களுக்கு இவை விளங்கா.
நான் போகிறேன்.
என் முகம் சிதைக்கப்படும் வரையில்
உன் மூச்சுக்காய் வாழ்வேன்"

க.ஆதவன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நோர்வேஜிய அரசாங்கத்தால் உறுதிப்படுத்தப்பட்ட அசல்
22கரட் தங்கநகைகளைப் பெற்றுக்கொள்ள நோர்வேயில்
நம்பிக்கையான ஒரே ஸ்தாபனம்


உங்களுக்குத் தேவையான சகல வகையான ஆபரண
வகைகளையும் உரிய காலத்தில் ஒரே இடத்தில்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஸ்தாபனம் CITY TRADRES

உங்களுக்குத் தேவையான நகைகள், மணிக்கூடுகள்,
பாதணிகள், பல்வேறுபட்ட டிசைன்களில் சேலைகள்
மற்றும் மின்சார உபகரணங்கள் அனைத்திற்கும் நீங்கள்
நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம் CITY TRADRES

ஒஸ்லோ, குறுன்லொண்ட் (GRONLAND) தேபான்
நிலையத்திலுள் -

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




'SUVADUGAL', A Tamil monthly from Norway. Issue Nr 39, October'92

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்